வெளியீடு 17-8-2005 Issued 17-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 15, 2005—தொகுதி 72—எண் 2
Tuesday the 15th March, 2005—Volume 72—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
Y211, 3: P55
p05.72.2
226638

15–3–2005

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பத்தாவது பட்டியல்) 233-264

**2. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 21—உள் துறை—காவல்

(ஆ) கோரிக்கை எண் 22—உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்—தொடர்ச்சி 264-326, 328-332, 339-389

திரு. ஜி.கே. மணி 264-286

திரு. ஜி. பழனிசாமி 287-297, 300-305,

திரு. எச். ராஜா 305-312, 313-315

திரு. லா. சந்தானம் 316-320

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 265,268,272, 273,275,276, 279,280,281,282, 292-293,295,296, 298,299, 302,303, 306,308,309,310, 312,313,314-315, 316,319,321-323, 324, 328,329, 332,339-381

பக்கங்கள்

**3. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) பேரவைப் பணிகளினின்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுதல் 326-327

(ஆ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை கூட்டத் தொடர் முடிகின்ற வரை நீக்கி வைத்தல். 332-336

(இ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை ஐந்து நாட்களுக்கு மட்டும் நீக்கி வைத்தல். 336-337

(ஈ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை ஒரு நாள் மட்டும் நீக்கி வைத்தல் 337-338

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 390


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 2, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036**

**2005 மார்ச் 15, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளர்தான், மக்களுக்குத் தலைவர் எனப் போற்றப்படுவார்.

## 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்@**

**பத்தாவது பட்டியல்**

1—

**ஏலகிரி சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 13075—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி பழைய ஏலகிரி சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[2005 மார்ச் 15

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது ஏலகிரி எண்பட்டி (வழி) ஓமல்நத்தம் சாலை கி.மீ. 0/0 — 4/6.55 நீளம் கொண்ட இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 1/0ல் பழைய ஏலகிரி அமைந்துள்ளது இதில் கி.மீ. 0/0 — 1/0 வரையில் சில இடங்களில் அகலம் குறைவாக உள்ளதால். அவ்விடங்களில் மண் கொட்டி (Berms) சாலை அகலப்படுத்தப்பட்டு தற்போது போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்படுகிறது.

**2—**

## புதிய தார்ச் சாலைகள் அமைத்தல்

**வினா எண் 36082—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், திருப்பத்தூர்-திருவண்ணாமலை பிரதான சாலையில் பேராம்பட்டு பகுதிக்கு புதிய தார்ச் சாலைகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பேராம்பட்டு சாலையானது வேலூர் கோட்ட பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை திருப்பத்தூர்—சிங்காரப்பேட்டை சாலையில் கி.மீ. 13/4ல் பிரிந்து பேராம்பட்டு வரை செல்லும் சாலையாகும். இச்சாலையை ஒரு அடுக்கு சரளைக் கற்கள் பரத்தல் செய்து தார்ச்சாலை அமைக்க சுமார் ரூ. 3.00 இலட்சம் தேவைப்படும். மேற்கண்ட சாலையை மேம்பாடு செய்ய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் தருணத்தில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

226638



2005 மார்ச் 15]

**3—**

## ஆக்கிரமிப்பு செய்வதைத் தடை செய்தல்

**வினா எண் 41678—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, கிராமப்புறச் சாலை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்வதை அரசு தடை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகள் தடைசெய்ய தேசிய நெடுஞ்சாலைகளின் கட்டுப்பாடு சட்டம் 2002-இல் தக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதேபோல், மாநில நெடுஞ்சாலை, கிராமப்புறச் சாலை புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்வதை தடை செய்ய தற்போது தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டமும், விதிகளும் வரையறுக்கப்பட்டு, அவற்றின்படி நெடுஞ்சாலைத் துறையால் எல்லைகள் வரையறுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

**4—**

## இணைப்புச் சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 42357—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை சாலையிலிருந்து ஆர். வெங்கடேஸ்வரபுரம் செல்லும் இணைப்புச் சாலை சீர் செய்து செப்பனிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 15

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) இச்சாலையானது ஆர். வெங்கடேஸ்வரபுரம் சாலை என்னும் 3.00 கி.மீ. (கி.மீ. 0/0-3/0) நீளமுடைய அரசு மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை ஒருவழித்தட அகலம் கொண்ட தார்ச் சாலையாகும் இதில், கி.மீ. 2/0-3/0 வரையுள்ள பகுதி போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது. மேலும் இச்சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையுள்ள சாலைப் பகுதியை மேம்பாடு செய்ய 2003-2004 ஆம் ஆண்டு முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுதுபார்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 6.38 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5—**

## ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

**வினா எண் 47995—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் வழியில் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட வேண்டிய இடம், நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள மூக்கனூர் — புதுப்பட்டு என்னும் மாவட்ட இதர சாலையில் அமைந்துள்ளது. மேற்கண்ட இடத்தில் பாலம் கட்டும் பணி அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு திட்டத்திலும் இடம் பெறவில்லை.



2005 மார்ச் 15]

**6—**

## புகைப்பட அடையாள அட்டை

**வினா எண் 66153—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதியில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கு உடனடியாக வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** (அ) ஆம். (ஆ) இந்தியத் தேர்தல் ஆணையம் 1-1-2005-ஐ தகுதிகாண் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல்களை திருத்தம் செய்ய ஆணையிட்டுள்ளது. இப்பணி 31-8-2005 அன்று நிறைவுபெறும். இப்பணி முடிந்தவுடன் விடுபட்ட வாக்காளர்களுக்கும் புதியதாக சேர்க்கப்படும் வாக்காளர்களுக்கும் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**7—**

## தொட்டில் குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 62644—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் தொட்டில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தில் இதுவரையில் மூன்று குழந்தைகள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் இரண்டு அரசு சாரா தத்து நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேலும் இதுவரையில் பெண் சிசு

[2005 மார்ச் 15

கொலைகள் ஏதும் இம்மாவட்டத்தில் நடப்பதாக தகவல் இல்லாததால், கோவை மாவட்டம் வால்பாறையில் தொட்டில் குழந்தை காப்பகம் ஏற்படுத்த அவசியமில்லை என அரசு கருதுகின்றது.

8—

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 64822—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் தெல்லக்குடி கிராமம் புத்தூர் மற்றும் தைக்காலில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் தெல்லக்குடி கிராமம் புத்தூர் மற்றும் தைக்காலில் தொழிற்பேட்டை அமைக்க தகுதியான நிலங்கள் ஏதும் கைவசம் இல்லை. (ஆ) 20-க்கும் குறையாமல் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் முன்வைப்புத் தொகையுடன் முன் வந்தால், மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை பெற்று தகுதியான புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பெற்று தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

## சிற்றுந்தை இயக்க அனுமதி

**வினா எண் 54500—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், உடைந்த கரைக்கு அஸ்தம்பட்டியில் இருந்து சென்று வந்த சிற்றுந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



2005 மார்ச் 15]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** சேலம் மாநகர், உடைந்த கரைக்கு அஸ்தம்பட்டியில் இருந்து இயக்க இதுவரை எந்த ஒரு சிற்றுந்துக்கும் சேலம், வட்டாரப் போக்குவரத்து அதிகாரி (R.T.O.) அலுவலகத்தில் அனுமதி வழங்கப்படவில்லை. அவ்வழித்தடத்தில் சிற்றுந்து இயக்க அனுமதி கோரி மனுக்கள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே மீண்டும் இயக்கும் கேள்விக்கு இடமில்லை.

10—

## கல்லுடைக்கும் தொழிலாளர்கள்

**வினா எண் 28115 அ—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்ற தொகுதியில் மஞ்சநாயக்கனூர் ஊராட்சியில் (ஜல்லிப்பட்டி) உள்ள கல்லுடைக்கும் தொழிலாளர்கள் 500 பேர் வேலை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? கல்லுடைக்கும் ஒப்பந்தங்களை தொழிலாளர்களின் சங்கம் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மற்றும் முழுமையான பொள்ளாச்சி வட்டத்தில், அரசு நிலத்தில் 12 கல் குவாரிகளும், பட்டா நிலத்தில் 33 கல் குவாரிகளும் தற்போது நடைமுறையில் இயங்கிவருகின்றன. பதிவு செய்த தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983 அல்லது தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன் படி பதிவு செய்த சுய உதவிக் குழுக்களுக்கும், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளால் அமைக்கப்பட்டுள்ள சங்கத்திற்கும் நேரடியாக கல் உடைக்க குத்தகை உரிமம் வழங்க தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் 1959-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனைமலை வட்டாரத்தில் கல் உடைக்கும் தொழில் செய்யும் இரண்டு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு கல் உடைக்கும் தொழில் செய்து வருகின்றன. மேலும் கல் உடைக்கும் தொழில் செய்வதற்கான சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்த விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2005 மார்ச் 15

**11—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 50630—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு பொதுப் பணித் துறை மூலம் ஏற்கெனவே மேல்நிலை தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தற்போது தண்ணீர் வசதி கால்நடை மருந்தகத்திற்கு போதுமானதாக உள்ளது. எனினும் கால்நடை நிலையங்களுக்கு வரும் கால்நடைகள் பயனடையும் வகையில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.75,000/- மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க சீர்காழி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**12—**

## கால்நடை நிலையத்திற்கு மருத்துவர்

**வினா எண் 63381—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், ஆண்டியகவுண்டலூர் அமராவதி நகர் பகுதியிலிருந்த கால்நடை துணை நிலையத்திற்கு அரசு அனுமதி ரத்து செய்துள்ளது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இங்கு தினந்தோறும் மருத்துவர் வந்து செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?



2005 மார்ச் 15]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) அரசு ஆணை எண் 105, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் (காப.2) துறை, நாள் 22-10-2003-ன்படி அமராவதி நகரில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாக நிலை உயர்த்தப்பட்டு 1-2-2004 முதல் கல்லாபுரம் கிராமத்தில் செயல்பட்டு வருகின்றது. மேலும் கிளை நிலையங்களில் முதலுதவி சிகிச்சைப் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்படும். ஆனால், கால்நடை மருந்தகத்தில் அனைத்துச் சிகிச்சைப் பணிகளும் மேற்கொள்ளப்படும் காரணங்களினால் ஆண்டியகவுண்டலூர் மற்றும் அமராவதி நகர் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கல்லாபுரம் கால்நடை மருந்தகத்தின் மூலம் சிகிச்சைப் பணிகள் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இருப்பதால், மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

(ஆ) கால்நடை உதவி மருத்துவர், வாரத்தில் இரண்டு நாட்கள் அமராவதி நகர் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொண்டு வருகிறார்.

**13—**

## வான்கோழிகளின் உற்பத்தியைப் பெருக்குதல்

**வினா எண் 63537—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் வான்கோழிகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாட்டில் வான்கோழி வளர்ப்பானது கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மிகவும் சிறந்த அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. மக்களுக்கும் வான்கோழி பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளதால் அரசு கீழ்க்கண்ட மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மூலமாக வான்கோழி வளர்ப்பைப் பெருக்கியுள்ளது.

1) மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர்

2) மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு

3) மாவட்ட கால்நடைப் பண்ணை, திருநெல்வேலி

4) கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம்

5) கோழி விரிவாக்க நிலையம், போளிவாக்கம்

மேற்கூறிய பண்ணைகள் யாவும் செயல்விளக்கப் பண்ணைகளாக திகழ்ந்து, வான்கோழி வளர்ப்பு பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் அரசு செயல்விளக்கப் பண்ணைகள் ஏதும் இல்லாததால் இந்நாள்வரை வான்கோழிகளின் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் நடப்பு ஆண்டில் தேனி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வான்கோழி வளர்ப்புக்காக அரசு உதவி புரிந்துள்ளது. இதைப் போன்று இனி வருங்காலங்களில் கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழு மூலம் வான்கோழி வளர்ப்பு ஊக்குவிக்கப்படலாம். ஆனால் நடப்பு ஆண்டில் இத்திட்டம் தேனி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதால், தற்போது கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில், இத்திட்டம் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவு. (ஆ) எழாது.

**14—**

### மருத்துவர், உதவியாளர் பணியிடங்கள்

**வினா எண் 65437—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் கால்நடை மருத்துவமனையில் காலியாகவுள்ள மருத்துவர், உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி கோட்டம், சங்கராபுரம் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் பதவி தற்போது நிரப்பப்பட்டுவிட்டது. கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவியும் ஏற்கெனவே நிரப்பப்பட்டுள்ளது.

**15—**

### விடு கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 36610—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு தொகுதியில் ஓடைப்பள்ளம் அருகில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** ஈரோடு தொகுதியில் ஓடைப்பள்ளம் அருகில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**16—**

### பெண்களுக்கு இட ஒதுக்கீடு

**வினா எண் 33024—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரிலுள்ள நிர்மலா கல்லூரியில் மதிப்பெண் அடிப்படையில் தராமல் நன்கொடையைப் பெற்றுக்கொண்டு பெண்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2005 மார்ச் 15

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாநகரிலுள்ள அரசு உதவிபெறும் சிறுபான்மைக் கல்லூரியான நிர்மலா கல்லூரியில் மாணவியர்கள் சேர்க்கை 50 சதவிகிதம் கல்லூரி மேலாண்மை ஒதுக்கீட்டின்படியும் 50 சதவிகிதம் பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய விகிதாச்சார முறையில், மதிப்பெண் அடிப்படையிலும் மற்றும் இட ஒதுக்கீடு விதிமுறைகளின்படியும், செய்யப்பட்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கல்லூரிக் கட்டணம் வசூலிக்கப்பட்டு நடைபெறுகிறது.

**17—**

### மாணவர்களின் இட ஒதுக்கீடு

**வினா எண் 33032—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பில் மாணவர்களின் இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கையின்படி ஏற்கெனவே பின்வருமாறு பட்டப்படிப்பில் மாணவர்கள் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | — 30% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | — 20% |
| தாழ்த்தப்பட்டோர் | — 18% |
| பழங்குடியினர் | — 1% |

இந்நிலையில் மேற்காணும் இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்திட அவசியம் ஏதும் இல்லை.



2005 மார்ச் 15]

**18—**

### வெள்ள தடுப்புச் சுவர்

**வினா எண் 47334—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், 17-வது வார்டு வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி ஆரம்பப் பள்ளிக்கும், சரளபதியில் உள்ள பள்ளிக்கும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** கோவை மாவட்டம், 17-வது வார்டு வேட்டைக்காரன்புதூர் ஆரம்பப் பள்ளிக்கும், சரளபதியில் உள்ள பள்ளிக்கும் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டப்பட்டுள்ளது.

**19—**

### "சர்வ சிக்ஷா" மூலம் புதிய கல்விக்கூடம்

**வினா எண் 55177—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி, காழி காவல்புரத்தில் "சர்வ சிக்ஷா" மூலம் புதிய கல்விக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி காழி காவல்புரம் என்ற ஊர் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரால் நேரில் பார்வையிடப்பட்டது. அவ்வூரில் மொத்த வீடுகள் 31. மொத்த மக்கள் தொகை 158 ஆகும். இவ்வூரின் அருகில் உள்ள தென்இருப்பு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் 9 ஆகும். இவ்வூர் மேற்கண்ட பள்ளியில் இருந்து ஒரு கிலோ மீட்டருக்கு

[2005 மார்ச் 15

அருகிலேயே உள்ளதால் அனைவருக்கும் கல்வி இயக்க சார்பில் புதிய கல்விக்கூடம் அவசியமில்லை. (ஆ) இவ்வினா எழவில்லை.

**20—**

**"சர்வ சிக்ஷா" மூலம் பள்ளிக்குக் கட்டடம்**

**வினா எண் 55184—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் தில்லைவிடங்கன் ஊராட்சி, தில்லைவிடங்கனில் "சர்வ சிக்ஷா" மூலம் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி ஒன்றியம் தில்லைவிடங்கன் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் பள்ளி வளாகத்தில் இரண்டு வகுப்பறைக் கட்டடம் கட்ட போதுமான இடவசதி இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை.

**21—**

**கல்லூரி பட்டப் படிப்பிற்கு உதவித் தொகை**

**வினா எண் 64070—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையிலுள்ள தையற் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் கல்லூரி பட்டப் படிப்பிற்கு வழங்கி வரும் உதவித் தொகையைக் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா?"

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையிலுள்ள தையற் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த



2005 மார்ச் 15]

மாணவ, மாணவிகளின் கல்லூரி பட்டப் படிப்பிற்கு வழங்கி வரும் உதவித் தொகையைக் கூடுதலாக வழங்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

**ஆவின் பாலகம்**

**வினா எண் 37539—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சங்கராபுரத்தில் தற்போது ஆவின் பாலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**23—**

**மகளிர் சங்கம்**

**வினா எண் 63382—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் சுண்டக்காம்பாளையம், வடபூதளம், மடத்துக்குளம், கண்ணாடிப்புத்தூர் ஆகிய இடங்களில் ஸ்டெப்—சொசைட்டி (மகளிர்) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டத்தில் சுண்டக்காம்பாளையம் கிராமத்தில் "ஸ்டெப்" திட்டத்தின் மூலம் மகளிர் சங்கம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டு சங்கம் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வடபூதளம், மடத்துக்குளம் ஆகிய கிராமங்களில் சங்கம் அமைப்பதற்கான வாய்ப்புகள் தற்பொழுது இல்லை.

[2005 மார்ச் 15

கண்ணாடிப்புத்தூர் கிராமத்தில் எம்.எஸ்.411 சர்க்கார் கண்ணாடிப்புத்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.

**24—**

**சுற்றுலா பயணிகளுக்கு போதிய வசதி**

**வினா எண் 22749—திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வெள்ளோடு பகுதியில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்திற்கு சுற்றுலா பயணிகளுக்குப் போதிய வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, வெள்ளோடு பகுதியில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளுக்கு போதிய வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

**சுற்றுலாத்தலமாக மாற்றும் திட்டம்**

**வினா எண் 62935—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்திலுள்ள புகழ்பெற்ற தலைநகரங்களாகிய கொழுமம் ஸ்ரீ தாணிடேஸ்வர கல்யாண வரதராஜ பொருமாள் கோயில், கொமரலிங்கம் காசிவிஸ்வநாதர் கோயில்களை சுற்றுலாத்தலமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 மார்ச் 15]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டத்திலுள்ள புகழ்பெற்ற தலைநகரங்களாகிய கொழுமம் ஸ்ரீ தாணிடேஸ்வர கல்யாண வரதராஜ பெருமாள் கோயில், கொமரலிங்கம் காசிவிஸ்வநாதர் கோயில்களை சுற்றுலாத்தலமாக மாற்றும் திட்டம் அரசிடம் இல்லை.

**26—**

**தொழில் வரி செலுத்துதல்**

**வினா எண் 20337—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் அரசு சாராதவர்கள் எவ்வளவு பேர் தொழில் வரி செலுத்துகிறார்கள்?

(ஆ) ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாநகராட்சியில் அரசு சாராதவர்கள் வணிகம் சம்பந்தமாக (Business P.T.) 9391 பேர் தொழில் வரி செலுத்துகின்றனர். (ஆ) இதன் ஆண்டு வருமானம் ரூ.30.96 இலட்சம் ஆகும்

**27—**

**குப்பைகளை அப்புறப்படுத்த லாரிகள்**

**வினா எண் 22660—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் குப்பைகளை அப்புறப்படுத்த எவ்வளவு லாரிகள் பயன்படுத்தப்படுகின்றன?

(ஆ) அவற்றின் மாதச் செலவினம் (ஓட்டுநர் சம்பளம் உட்பட) எவ்வளவு?

[2005 மார்ச் 15

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* சேலம் மாநகராட்சியில் குப்பைகளை அப்புறப்படுத்த 2 லாரிகள், 14 ஸ்வராஜ் மஸ்தா மற்றும் 46 டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. *(ஆ)* மேற்கண்ட இனங்களுக்கான எரிபொருள் மற்றும் ஓட்டுநர் சம்பளம் உட்பட மாதத்திற்கு மொத்தம் ரூ.7.60 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

**28—**

## கழிப்பிடங்கள் கட்டுதல்

**வினா எண் 24312—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி பகுதிகளில் மகளிருக்கான கழிப்பிடத் தொகுதிகள் கட்டும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை கழிப்பிடத் தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகராட்சியில் மகளிருக்கான கழிப்பிடம் கட்டும் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் 17, 2002-2003 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் 12 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் ரூ.269.60 இலட்சம் மதிப்பீட்டில் 28 மற்றும் வாம்பே (VAMBAY) திட்டத்தின் கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் 30 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**29—**

## குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 25782—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 15]

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, மடம் கிராமத்தில் போதுமான குடிநீர் வசதியில்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு கூடுதலாக குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, மடம் குடியிருப்பில் தற்போது பயனில் உள்ள 6 கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**30—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26650—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில், லட்சுமண் கொட்டாய், எள்ளுக்குழி, சாமிசெட்டிப்பட்டி வடக்குப் பகுதி கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)*

*1. லட்சுமண் கொட்டாய்*

நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, லட்சுமண் கொட்டாய், சொரங்கப்பன் புதூர் குடியிருப்பைச் சார்ந்ததாகும். இக்குடியிருப்பிற்கு நான்கு கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

[2005 மார்ச் 15

2. எள்ளுக்குழி

இக்குடியிருப்பில் ஒரு கையிறைப்பான் மற்றும் சிறு மின்விசைப் பம்பு திட்டம் செயலில் உள்ளது. மக்கட்தொகை மிகவும் குறைவாக உள்ளதால் ஊரக குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்ற இயலாது.

3. சாமிசெட்டிப்பட்டி வடக்குப் பகுதி

சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிப்பட்டி வடக்குப் பகுதி, சாமிசெட்டிப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதி, இக்குடியிருப்பிற்கு 4 கையிறைப்பான்கள் மற்றும் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

31—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27236—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள பஞ்சாங்கிவளவு, கொண்டையன்காடு, காமராஜ்நகர் ஆகிய பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சியில் கொண்டையன் காட்டுப் பகுதியில் 1990-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் காவிரி நீர் வசதியும் உள்ளது. ஏகாபுரம் காமராஜ் நகர் பகுதியில் 2003-04 ஆம் நிதியாண்டு சட்டமன்ற



2005 மார்ச் 15]

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.81,600/- மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, மினி டேங்க் அமைக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

32—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 27247—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி கிராமம், கல்லேரியான்காடு (ஏரிக்கரை) பகுதி மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அங்கு ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், நடுவனேரி ஊராட்சியில் கல்லேரியான் காட்டுப் பகுதியில் 2002-2003 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் ரூ.81,600/- மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மினி டேங்க் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

33—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 27248—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி அருவாங்காட்டூர் பகுதிக்கு குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறை அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி அருவாங்காட்டூரில் 2002-2003 ஆம் நிதி ஆண்டு வறட்சி நிவாரணத்திட்ட நிதியில் ரூ.41,000/- மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு அமைத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மினி மோட்டார் வைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**34—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27276—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, பில்லுப்பாலிக்காடு பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆமெனில், அவர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சிக்குட்பட்ட பில்லுப்பாலிக்காடு குடியிருப்புக்கு இராசிபுரம் — எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆலக்காடு செல்லும் துணை நீரேற்றும் குழாயில் இணைப்பு கொடுக்கப்பட்டு அக்குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டிக்குக் குடிநீர் ஏற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது,*

**35—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 27410—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) வந்தவாசி தொகுதியில் உள்ள அத்திப்பாக்கம் ஊராட்சியில் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் உள்ள அத்திப்பாக்கம் ஊராட்சியில் தார்ச்சாலை அமைக்க ஊராட்சி பொது நிதியில் போதிய நிதி வசதியில்லை என்பதால் தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பில்லை.*

**36—**

## குளங்கள் தூர்வாரும் திட்டம்

**வினா எண் 29497—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை ஊராட்சி, புதுத்துறையில் குளங்கள் தூர்வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை ஊராட்சியிலுள்ள அனைத்து குளங்களும் கடந்த ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர்வாரப்பட்டுள்ளன.*

**37—**

## கிணற்றை மூடுதல்

**வினா எண் 30356—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 மார்ச் 15

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி கிராமத்தின் மையப்பகுதியில் ஆபத்தான நிலையில் கிணறு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி கிராமத்தில் மையப்பகுதியில் உள்ள கிணற்றை ஊராட்சி ஒன்றிய பொது நிதி 2001-2002 ஆம் ஆண்டு ரூ.8,800/- மதிப்பீட்டில் வேலை நடைபெற்று கிணறு மூடப்பட்டுவிட்டது.

**38—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 31560—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள நடுவக்கரை குன்னவாக்கம் காலனியிலுள்ள உளர் நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நடுவக்கரை ஊராட்சியிலுள்ள குன்னவாக்கம் காலனி குடியிருப்பில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து செப்பனிட முடியாத நிலையில் உள்ளதால், இக்குடியிருப்பிற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



2005 மார்ச் 15]

**39—**

## ஆய்வுக்கூட வசதிகள்

**வினா எண் 38277—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கம்ப்யூட்டர் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் வருகிற நிதியாண்டில் கல்வி நிதியிலிருந்து தேவைக்கேற்ப ஆய்வுக் கூடங்களில் கூடுதல் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**40—**

## திண்காரை வடிகால் கட்டும் பணி

**வினா எண் 38310—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் கழிவுநீர் வாய்க்கால்கள் கருங்கல்லில் கட்ட அதிக நிதி தேவைப்படுவதால் திண்காரையால் மட்டுமே கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி பகுதிகளில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் இடத்தின் தன்மைக்கேற்பவும்,

இடத்திற்கு ஏற்பவும் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் உபயோகத்திற்கு தகுந்தாற்போல் தொழில்நுட்பத்துடன் மோல்ட் வடிகால், கருங்கால் வடிகால், செங்கல் சுவர் வடிகால் மற்றும் திண்காரை வடிகால் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன.

**41—**

## மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 38573—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, குகை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) ஆம். (ஆ) சேலம் மாநகராட்சி, குகை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு 2004-2005 ஆம் ஆண்டு மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ரூ.98.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்பவும் முன்னுரிமை அடிப்படையிலும் கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**42—**

## சிமெண்ட் கான்கிரீட் சாலை

**வினா எண் 38586—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் ரப்பர் சாலை, பிளாஸ்டிக் சாலை, சிமெண்ட் கான்கிரீட் சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாநகராட்சியில் ரப்பர் சாலை அமைக்க திட்டம் ஏதும் இல்லை. (ஆ) பிளாஸ்டிக் சாலை அமைக்க பரிசோதனை அடிப்படையில் சேலம் மாநகராட்சிப் பகுதியில் 2 கி.மீ. நீளத்திற்கு (பிச்சார்டு ரோடு மற்றும் பிருந்தாவன் ரோடு) அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை பயன்பாட்டில் பொது மக்களுக்கு திருப்தி ஏற்படின் அனைத்துப் பகுதியிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிமெண்ட் சாலைகள் அகலம் மிகக் குறைந்த சிறிய சந்துகளுக்கு மழைநீர் சேமிப்புடன் சிமெண்ட் சிலாப் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**43—**

## கட்டடம்

**வினா எண் 39560—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் நாயக்கன்பட்டி ஊராட்சிக்கு கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் நாயக்கன்பட்டி ஊராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1.75 இலட்சம் மதிப்பீட்டில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

**44—**

## சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா எண் 45632—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 15

(அ) சேலம் மாநகராட்சிப் பகுதியில், பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிப் பகுதியில், பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1-12-1997 முதல் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட தலைப்புகளின்கீழ் சேலம் மாநகராட்சிக்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி விவரம் வருமாறு:

| வரிசை எண். | கீழ்க்கண்ட தலைப்பு | மத்திய அரசு ஒதுக்கீடு (ரூ.) | மாநில அரசு ஒதுக்கீடு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (மானியம்) (USEP Subsidy) | 1,30,400 | 43,456 |
| 2 | நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (பயிற்சி) (USEP Training) | 5,21,536 | 1,73,836 |
| 3 | நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (உள்கட்டமைப்பு) (USEP Infra) | 65,165 | 21,722 |
| 4 | நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு (மானியம்) [DWCUA (Subsidy)] | 2,60,768 | 86,912 |
| 5 | நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு [கடன் (ம) சேமிப்பு சங்கம்] DWCUA (TCS) | 3,25,958 | 1,08,665 |
| 6 | சமுதாய உள்கட்டமைப்பு (Community Structure) | 3,05,531 | 99,772 |
| | மொத்தம் | **16,09,358** | **5,34,363** |



2005 மார்ச் 15]

**45—**

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 52453—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி, கீழ விழக்காடு, வில்வராயன் நத்தம், சேந்தங்குடி, கன்னிகோவில், பெருமங்களம் ஆகிய ஆதிதிராவிடர் பகுதி மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மயானக் கொட்டகை கட்டிக்கொடுக்கும் அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி கீழ விழக்காடு, வில்வராயன் நத்தம், சேந்தங்குடி, கன்னிகோயில், பெருமங்களம் ஆகிய ஆதிதிராவிடர் பகுதி மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்துத்தர தற்போது வாய்ப்பு இல்லை.

**46—**

## கச்சா விடுகள் கட்டித்தருதல்

**வினா எண் 52599—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், சீர்காழி திருநகரி ஊராட்சி, திருநகரி, கம்பன் தாண்டி, திருநகரி சங்கடி, திருநகரி வாய்க்கால் தெருவிலுள்ள பட்டா உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு கச்சா வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் 2000-2001 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஒரு கச்சா வீடும் 2003-2004 ஆம் ஆண்டு கடன் மற்றும் மானியத்துடன்கூடிய திட்டத்தின்கீழ் ஒரு கச்சா வீடும் ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

**47—**

## கச்சா விடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 52602—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சி, ஆதிதிராவிட இந்திரா நகர், எடக்குடி வடபாதி ஊராட்சி, காழிகாவல்புரம், சட்டநாதபுரம் ஊராட்சி, ஆரைக்காடு ஆகிய இடங்களிலுள்ள கச்சா வீடுகளை புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள கச்சா வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த கச்சா வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.*

**48—**

## தொகுப்பு விடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 52610—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி ஒன்றியம், சேந்தங்குடி ஊராட்சி, கீழத்தெரு ஆதிதிராவிட தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கி கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.*

**49—**

## தலைமைப் பொறியாளர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 54175—திரு. மு. கார்த்தி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாநகராட்சியில் தலைமைப் பொறியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சியில் தலைமைப் பொறியாளர் என்கிற பணியிடம் இல்லை. நகரப் பொறியாளர் பணியிடமே உள்ளது. நகரப் பொறியாளர் பணியிடம் செயற் பொறியாளர் பணியிடமாக கீழ்நிலைப்படுத்தப்பட்டு அப்பணியிடம், பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளது.

**50—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 63331—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2003-2004-ல் சேலம் மாநகராட்சியில் பதிந்துள்ள சுய உதவிக் குழுவிற்கு நிதி ஒதுக்கீடு எவ்வளவு செய்யப்பட்டது?*

*(ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் இதனை உயர்த்த அரசு முன்வருமா?*

[2005 மார்ச் 15

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2003-2004-ல் சேலம் மாநகராட்சியில் பதிந்துள்ள சுய உதவிக் குழுவிற்கு சுழல் நிதியாக மொத்தம் ரூ.4.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியினை உயர்த்துவதற்கு நிதிநிலைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்**
**(ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**
—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் 21, 22 மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை-காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொண்டு, இந்த உள் துறை, காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூற விரும்புகிறேன்.



2005 மார்ச் 15] [திரு. ஜி.கே. மணி]

இன்றைய நிலையைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகக் காவல் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியத் திருநாட்டில் மட்டுமல்ல; உலக நாட்டிலே இருக்கிற 'ஸ்காட்லாந்து யார்டு' போலீசுக்கு இணையான போலீஸ் என்று சொல்லி, உலகம் முழுவதும் பாராட்டக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த இணையான போலீஸ் என்று சொல்வதைவிட, தமிழகக் காவல்தான் உலகத்திலே சிறந்த போலீஸ், முதல் இடத்திலே இருக்கிறது என்ற நிலையை எட்டுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய வேண்டுமென நான் முதலிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் காவல் துறை என்பது, ஒரு தனி மனித உரிமையைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே சமூக, மத, சொசைட்டி என்று சொல்லக்கூடிய அந்த சமூகத்திற்குப் பாதுகாப்பு, இந்த மாநிலத்திற்குப் பாதுகாப்பு, இந்த நாட்டுக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய ஒரு காவல் துறை. ஆகவே, எல்லாவற்றையும்விட, பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய காவல் துறை என்பது, மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது புனிதமானது என்றும் நாங்கள் பார்க்கிறோம். ஆகவே, அந்த வகையிலேதான், இந்தத் துறைக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிலும், குறிப்பாகச் சொல்கின்ற நேரத்தில், இந்தக் காவல் துறை சுதந்திரமாகச் செயல்படக்கூடிய ஒரு தன்னாட்சி அமைப்பாகச் செயல்பட வேண்டும். இதில் அரசியல் கட்சிகள் அல்லது முக்கியப் புள்ளிகள் என்று சொல்லக்கூடியவகையிலே அல்லது ஆளுங்கட்சி வரிசையிலே எந்தத் தலையீடும் இல்லாமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய ஒரு அமைப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அது இன்னும் சிறப்பாக இருக்கும். ஆகவே, இப்படிச் சுதந்திர அமைப்பாகச் செயல்படுவதற்கு...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். இந்த ஆட்சியில்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், எந்தவிதமான அரசியல் தலையீடும் இல்லாமல், காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த ஆட்சிக் காலத்திலும், இந்த நிலை இருந்ததில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்னும் சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் சொல்லக்கூடிய ஆலோசனை. அதிலும் இங்கே தலையீடு இருக்கிறது; இல்லையென்பதற்குள் நான் ஆழமாகப் போகவில்லை; அதைச் சொல்லவும் விரும்பவில்லை. இருந்தாலுங்கூட, இந்தக் காவல் துறை, இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஒரு பாதுகாப்புக் குழு, மாநிலப் பாதுகாப்புக் குழு என்ற ஒரு குழுவை நியமித்து, அதிலே இன்று உள் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் குழுவினுடைய தலைவராகவும், உள் துறைச் செயலாளர் அவர்கள், செயலாளராகவும், அதைப்போல் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கக்கூடிய ஒரு கட்சிக்கு ஒரு பிரதிநிதி என்ற வரிசையிலேயும், இன்னும் நீதிபதிகள், பத்திரிகையாளர்கள், சட்ட வல்லுநர்கள் போன்றவர்களை எல்லாம் உள்ளடக்கி, ஒரு குழு அமைப்போம் என்று சொன்னால், அந்தக் குழுவின் ஆலோசனையின்பேரிலே, அந்தக் குழுவினுடைய அறிவுரையின்பேரிலே, இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினாலேதான், நாங்கள் இதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் முதலிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னுமொன்று இப்போது பார்க்கின்ற நேரத்திலே, 100 சதுர கிலோ மீட்டருக்குக் காவலர்களுடைய எண்ணிக்கை அல்லது ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் காவலர் எண்ணிக்கை என்று பார்க்கின்ற நேரத்திலே, பஞ்சாப் போன்ற மாநிலங்களை ஒப்பிடுகின்ற நேரத்திலே, நம்முடைய மாநிலத்திலே குறைவாக இருக்கிறது. அப்படிக் கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே, இன்னும் 35,000 காவலர்களை நியமனம் செய்வது தேவையென்று கருதுகிறேன். இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இன்று மக்கள் தொகைப் பெருக்கம். அதேநேரத்தில், குற்றங்களுடைய எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, இதை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் முதலிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய காவல் துறைக்கு நிதி கூடுதலாக ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இன்னமும் கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்பது என் கருத்து. அதிலும் குறிப்பாக, 2003–2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புத்தகத்திலே, பக்கம் 13–லே கொடுக்கப்பட்டிருக்கிறது.



பக்கம் 13–லே 1,391.14 கோடி ரூபாய். 2004–2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புத்தகம், பக்கம் 15, பத்தி 29–லே 1,327.15 கோடி ரூபாய். இந்த ஆண்டு 2005–2006–ல் நிதிநிலை அறிக்கை புத்தகம், பக்கம் 17, பத்தி 22–ல் 1,339.33 கோடி ரூபாய். இந்த ஒதுக்கீட்டைப் பார்க்கின்ற நேரத்திலே, இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்றுகூட ஆதாரத்தோடு சொல்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில்...

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 2003–2004–க்கு 1,178.74 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. அந்த ஆண்டைவிட 2003–ல் குறைந்திருக்கிறது என்றுதான் சொன்னேன். அதேநேரத்திலே, 2003–2004–ல் வருவாய்க் கணக்கில் 1,237.10 கோடி ரூபாய். அது மூலதனக் கணக்கில் 152.90 கோடி ரூபாய். அப்புறம் கடன்கள் ஒரு கோடி ரூபாய். ஆக மொத்தம் 1,391 கோடி ரூபாய். மேலே இருக்கிற கணக்கு சரியாக வருகிறது. ஆகவே, இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், மூலதனக் கணக்கில் குறைகிறது. அது மானியக் கோரிக்கைப் புத்தகத்திலே இருக்கிறது.

அதேபோல, 2004–2005 ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் 1,187.88 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அதே மூலதனக் கணக்கில் 138.52 கோடி ரூபாய். அது கடன்களிலே—0.5—1/2 கோடி ரூபாய். ஆக மொத்தம் 1,326.9 கோடி ருபாய். இதிலேயும் குறைந்திருக்கிறது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Capital outlay on Police 2003–2004–லே 1,348.93 கோடி ரூபாய். அது 2004–2005–ல் 7,561.89 கோடி ரூபாய். இதிலே முக்கியமான ஒன்று என்னவென்றால் user Departments–ஆகிய Health, Education, Backward Community Hostel, Most Backward Community Hostel–எல்லாம் முதலிலே அந்தத் தலைப்பிலே இருந்தன. பிறகு, அங்கிருந்து மாற்றப்பட்டு, அவை Health, Education, Backward Community and MBC–என்ற தலைப்பிற்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த Demand–களைப் பார்க்கின்றபோது அது புரியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் காவலர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாக இங்கே குறிப்பிட்டார். நேற்று பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்களும், தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 129 போலீசார் மட்டுமே இருப்பதாக இங்கே பேசினார்.

அகில இந்திய அளவில், ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு இருக்கும் காவலர்களின் எண்ணிக்கை 125. தமிழ்நாட்டில், அகில இந்திய சராசரியைவிடச் சற்றுக் கூடுதலாகவே காவலர்களின் எண்ணிக்கை விகிதம் உள்ளது. மற்ற தென்னிந்திய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு, ஆந்திராவில் 100 காவலர்களும், கர்நாடகாவில் 97 காவலர்களும் மட்டுமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 129 போலீசார் இருப்பது ஒரு நல்ல விகிதம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்திலே 129 காவலர்கள், ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு என்று. 100 சதுர கிலோமீட்டருக்கு 61.1 காவலர்கள். ஆனால், பஞ்சாப் மாநிலத்திலே, அங்கே 109.6 காவலர்கள். அதேபோல, நாகாலாந்திலே, அங்கே அவசியம் தேவை இருக்காது, அங்கே 91.9 காவலர்கள். அப்படி வித்தியாசம் இருக்கிறது. ஆக, நாங்கள் சொல்வது எல்லாம், இன்னும் கூடுதலாக— ஏனென்றால் குற்றங்கள் பெருகி வருகின்றன; நாம் புள்ளி விவரங்களையெல்லாம் பார்க்கிறோம்; ஆகவே, காவலர்களின் எண்ணிக்கை கூடுதலாக—இருப்பது நாட்டுக்கு நல்லது என்ற அந்தக் கோணத்திலே சொல்கிறேனே தவிர, தவறாக அல்ல என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதியமைச்சர் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இங்கே, இப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது என்று...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னர் கூறியது, Capital Outlay on Public Works பொறுத்துக் கூறினேன். Capital Outlay on Police–பொறுத்தவரைக்கும் மைய அரசு, Government of India is directly releasing the fund to the Tamil



Nadu Police Housing Corporation. அந்த நிலை உருவாகியிருக்கிற காரணத்தால், அந்தப் பணம் மீண்டும் குறைக்கப்பட்டுவிடுகிறது. அதுமட்டுமல்லாமல்— repayment support — கடன் வாங்குகிறார்கள், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பது, Tamil Nadu Police Housing Corporation மூலமாக, முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டது. தற்போது, that repayment support is withdrawn and the Government is directly paying the loans to the loanee. இந்த நிலையிருக்கிற காரணத்தால், அந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அந்தந்தத் தலைப்புகளில் அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-10

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தலைப்புகளிலே இருப்பதையெல்லாம் பார்த்துச் சொல்கிறேன். அதெல்லாம் மூலதனக் கணக்கிலே வருகிறது. இப்போது வருவாய்க் கணக்கு என்று சொல்கின்ற நேரத்திலே, அதிலே சம்பளம், மற்றவையெல்லாம் அடங்கி விடுகின்றன. ஆனால், மூலதனக் கணக்கு என்பது, வீட்டு வசதி, காவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டுவது, காவல் நிலையங்கள் கட்டுவது அல்லது நவீனமயமாக்குவதற்கு அங்கு துப்பாக்கிகள் போன்ற கருவிகள் வாங்குவதற்கு இவையெல்லாம் சேர்ந்துதான் மூலதனம். ஆகவே, மூலதனக் கணக்கிலே இருப்பது குறைவாக இருக்கிற காரணத்தால்,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, revenue expenditure — கடன் வாங்கி revenue expenditure பண்ண முடியாது. கடன் வாங்கி capital expenditure–க்குத்தான் செலவு பண்ண முடியும். Government of India கொடுக்கிற கடன், Tamil Nadu Police Housing Corporation–க்கு directly கொடுத்தது, capital expenditure–க்குத்தான் கொடுக்கிறார்கள். வாங்கிய கடன்; வாங்கிய கடனும் capital expenditure–க்குத்தான். அப்படி வாங்கிய கடனை, ஏற்கெனவே Tamil Nadu Police Housing Corporation மூலமாகத் திருப்பிச் செலுத்தப்பட்ட கடனை, அரசு நேரடியாக செலுத்துகிற காரணத்தால், அந்தப் பணம் அதிலே adjust செய்யப்படுகிறது. எந்தக் கடன் வாங்கினாலும், வாங்குகிற கடன் மூலதனச் செலவிற்குத்தான் செலவு செய்யப்படும். கடன் கொடுப்பவர்களும் revenue expenditure–க்கு செலவு செய்வதற்கு யாரும் கடன் கொடுப்பதில்லை. இதுதான் நியதி, இதுதான் நடைமுறை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு; திட்ட மதிப்பீட்டிலேயிருந்து வருகின்றபோது, வருவாய்க் கணக்கிலே குறைகிறது; அதன் பிறகு மூலதனக் கணக்கிலே மாறுபடுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அப்புறம் கடன்கள்; மொத்தமாகச்

சேர்த்துப் பார்க்கும்போது சரியாக வருகிறது. அதிலே மாறுபாடு இருக்கிறது; குறைகிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன்; சரியாகத்தான் சொல்கிறேன்.

அதேநேரத்தில், 2004–2005–லே வருவாய்க் கணக்கிலே ரூ.1187.88 கோடி; ஆனால், மூலதனக் கணக்கிலே ரூ.138.52 கோடி; கடன் அரை கோடி; மொத்தம் ரூ.1326.90 கோடி. இந்த ஆண்டு 2005–2006–ல் வருவாய்க் கணக்கிலே ரூ.1269.21 கோடி; மூலதனக் கணக்கிலே ரூ.69.36 கோடி; இதிலேயும் கடன் ரூ.50 இலட்சம் மற்றும் சாட்டிய தொகை உட்பட மொத்தம் ரூ.1339.33 கோடி, சரியாகத்தான் வருகிறது நீங்கள் சொல்கிற கணக்கு. இப்போது மொத்தத்திலே ஒதுக்கீடு என்பது, நீங்கள் சொல்கிற தொகை சரியாக வருகிறது. அதிலே மூலதனக் கணக்கில் ரூ.69.36 கோடி. அப்படியென்றால், எப்படி நவீனமயமாக்கப்படும்? எப்படிக் காவல் நிலையங்கள் கட்டப்படும்? எப்படி மற்ற குடியிருப்புகள் எல்லாம் கட்டமுடியும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றிச்சுற்றி நீங்கள் என்ன சொன்னாலும், உண்மை நிலை, மூலதனச் செலவாக இருக்கட்டும் அல்லது வருவாய்ச் செலவு சம்பந்தமாக ஆகட்டும். குறிப்பிட்ட புள்ளிவிவரங்கள் எல்லாம், சரியான புள்ளிவிவரங்கள்தான். ரூ.1178.74 கோடி 2003–2004–க்கு. அது அதிகப்படுத்தப்பட்டு ரூ.1283.75 கோடி என்பது அதற்கு அடுத்த திருத்திய மதிப்பீடு. ரூ.1339.33 கோடி என்பது record break என்ற அளவிற்கு அதிகப்படியான ஒதுக்கீடு. அதிலே வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் மிக அதிகமான ஒதுக்கீடு. இதுதான் நடைமுறை; இவைதான் உண்மையான புள்ளிவிவரங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இன்னும் காவல் துறைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கி, அது நவீனமயமாக்கப்படவேண்டும். அதேநேரத்திலே, கூடுதலாக வசதிகளையெல்லாம் செய்து தரவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே, அந்தவகையிலே, இன்றைக்குக் காவல் துறையைப் பொறுத்தவரையிலே, மிக நேர்மையான அதிகாரிகள், நல்ல அதிகாரிகள், நாணயமான அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே, இந்த மன்றத்தின் சார்பிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு, அவர்களுக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டுகிறது. அதைப்போல, உள்ளூர் அளவிலே, ஒரு வட்ட அளவிலே அல்லது ஒன்றிய அளவிலே இருக்கிற



அந்த நேர்மையான அதிகாரிகளைத் தேர்வு செய்து, பொதுமக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என்ற அந்த வகையிலே எல்லாம் சேர்ந்துகூட, அப்படிப்பட்ட நல்லவர்களைப் பாராட்டி மேலும் ஊக்குவிப்பது, அவர்களுடைய பணியைச் சிறப்படையச் செய்வதற்கு ஆதாரமாக இருக்கும் என்று இந்தநேரத்திலே வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, காவல் துறையில், புனிதமான துறையிலே இருந்துகொண்டு, இந்தத் துறைக்கும், இந்த அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் கெடுதல் விளைவிக்கக்கூடிய அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களை அடையாளம் கண்டு, கடுமையாகத் தண்டிக்கவேண்டும். நான் இதைப் பொத்தாம் பொதுவாகச் சொல்லவில்லை. ஏனென்றால், முதலமைச்சர் கேட்டால் ஆதாரத்தோடு எங்கு, யார், எப்படி என்று கொடுப்பதற்குக்கூடத் தயாராக இருக்கிறேன். ஆழமாகப் போகவில்லை; கேட்டால் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, தனி நபர் என்று குற்றச்சாட்டு அவர்களைச் சாராதவகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அவற்றையெல்லாம் கேட்காமலேயே கொடுங்கள், அதெல்லாம் ஒன்றுமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** நான் நேற்றைக்கும், அதற்கு முன்னர் ஒருசில நாட்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். முதலமைச்சரிடத்திலே ஒரு நல்ல மாறுதல். நான் வரவேற்றுக்கூட சொல்கிறேன். என்னவென்று கேட்டால், சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே குற்றச்சாட்டுச் சொல்கிற நேரத்திலே, 'நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டினை ஆதாரத்தோடு சொல்லுங்கள், பொத்தாம் பொதுவிலே சொல்லாதீர்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன்' என்று சொல்கிறார்கள். அது ஒரு நல்ல உதாரணம்; நான் வரவேற்கிறேன். அதனாலே சொல்ல வருகிறேன். கடந்த ஆண்டுகூட பார்த்தீர்களேயானால், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். அதற்கு, 'அப்படி எடுத்த எடுப்பிலே குற்றச்சாட்டு சொல்லாதீர்கள்' என்று ஒட்டுமொத்தமாக மறுத்தார்கள், முதலமைச்சர் அவர்கள். ஆனால், இப்போது சொல்கிற நேரத்திலே, குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்போதுதான் காவல் துறையினர் திருந்துவார்கள். அதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதைத்தான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். ஆகவே, அந்தவகையிலே...

முற்பகல் 10–15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கூறுவதுபோல், ஏற்கெனவே அரசு அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. நேர்மையுள்ள, திறமையுள்ள காவல் துறை அதிகாரிகளையும், பணியாளர்களையும் பாராட்டுகிறோம்; அவர்களுக்கு விருதுகள் வழங்குகிறோம். தவறு செய்கின்ற காவல் துறையினர்மீது அவ்வப்போது, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில வழக்குகளில், காவல் துறையினர், சம்பந்தப்பட்டிருப்பவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் கைதும் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் நீதிமன்றங்களில் வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஓர் அதிகாரி அல்லது ஒரு காவல் துறைப் பணியாளர், தவறு செய்கிறார் என்று தெரிந்தபின், அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் இந்த அரசு விட்டுவிடுவது இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நவீனப்படுத்துவதற்கு நிறைய நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய கோரிக்கை என்பது, நீண்ட நாட்களாக நிலுவையிலே இருக்கக்கூடியதாக இருக்கிறது. அவர்கள் கேட்பதெல்லாம், எங்கள் வாழ்க்கைக்கு, எங்களுடைய இந்த முக்கியத்துவமான பணிக்குப் போதிய ஊதிய உயர்வு இல்லையே என்பதுதான். அதைக்கூட மற்றத் துறைகளிலே ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், அவர்களுடைய கல்வித் தகுதி, பணித் தன்மை எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஆனால், காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய பணித் தன்மையை மட்டும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவர்களின் கல்வித் தகுதியை ஒப்பிட்டுப் பார்த்தால், கல்வித் தகுதி குறைவாக இருந்தாலுங்கூட, அவர்களுடைய பணித் தன்மை என்பது, கடுமையாக இருக்கிறது. இரவுப் பகலாக உழைக்கக்கூடிய நிலை. இப்போது உதாரணத்திற்கு, ஆய்வாளர், உதவி ஆய்வாளர், காவல் துறைக் கண்காணிப்பாளர், இவர்களையெல்லாம் எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு விடுமுறையே கிடையாது. மற்ற துறைகளிலே விடுமுறை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு, வாரம் ஒரு நாள் கட்டாயம் வார விடுமுறை கொடுத்தாக வேண்டும். ஓய்வே இல்லை என்றால், எப்படி உழைப்பது? அவர்களுக்கும், குடும்பம் இருக்கிறது. நல்லது, கெட்டது, குடும்பம், திருமணம், மற்றவையெல்லாம் இருக்கின்றன.....



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வே இல்லாமல் காவல் துறையினர் உழைக்கிறார்கள் என்ற நிலை தற்போது இல்லை. இந்திய போலீஸ் சட்டத்தின்படி, காவலர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் அனைவரும் 24 மணி நேரமும், காவல் பணியில் இருக்க வேண்டும். எனினும், நகரங்களில், நகரக் காவல் பணிமுறை—town policing— நடைமுறையில் உள்ளது. இதன்படி shift முறையில் காவலர்கள் பணிக்கு வருகின்றனர். ஆனால், காவல் துறை அதிகாரிகள், எந்நேரமும் காவல் பணிக்குத் தயார் நிலையில் உள்ளனர். ஊரகக் காவல் நிலையங்களில், town policing முறை கடைபிடிக்கப்படுவதில்லை. நகரங்களில், காவலர்களுக்கு shift முறை அமலில் உள்ளதால், ஏற்கெனவே 8 மணி நேரப் பணி முறை—shift syste—பின்பற்றப்படுகிறது என்றே நாம் கூறலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 8 மணி நேரம், காவலர்கள் வேலை பார்க்கிறார்கள். முடித்துவிட்டு, அடுத்த 8 மணி நேரம் ஓய்வாக இருக்கிறார்கள். மீண்டும் 8 மணி நேரம். அப்படியானால், ஒரு நாளிலே 16 மணி நேரம் வேலை பார்க்கக்கூடிய நிலைமை. மொத்தத்திலே, 8 மணி நேரம் ஓய்வுதான். ஆனால், 8 மணி நேரம் பணி வரம்பு என்பது, இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இன்னும் காவலர்களைக் கூடுதலாக்கி, நம்முடைய அரசு அந்த 8 மணி நேரப் பணி வரம்பைக் கட்டாயம் கொண்டு வரவேண்டும். இன்னும் பார்த்தால், நம்முடைய காவல் துறை சட்டத்திலே அப்படி இருக்கிறது என்று சொன்னால், இன்னும் அது—எப்போதோ, எந்தக் காலத்திலோ, பிரிட்டிஷ்காரன் காலத்தில் கொண்டுவந்த அந்தக் காவல் துறைச் சட்டம்; அப்படி அது—அமலில் இருக்க வேண்டியதில்லை. நாம் எவ்வளவோ மாற்றங்களைச் செய்து வரக்கூடிய இந்த வேளையில், இதிலும் மாற்றம் வேண்டும். ஆகவே, காவல் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கு, எல்லோருக்கும் காவலர்களிலேயிருந்து, D.G.P. வரைக்கும், 8 மணி நேரப் பணி வரம்பு, வார விடுமுறை, அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊதிய விகிதம்; கட்டாயம், தயவுசெய்து, நீங்கள் ஊதிய விகிதத்தைக் கூடுதலாக்க வேண்டும். அதேநேரத்தில், இப்போது, காவல் துறையிலே, பணியாற்றக்கூடியவர்களுக்குப் பதவி உயர்வு என்பது எட்டாக் கனியாக இருக்கிறது. சொல்கிறார்கள்; 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 8 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இருந்தாலுங்கூட, நடைமுறையிலே, அதிலே சிக்கல் இருக்கிறது. உதாரணத்திற்கு, 28

வருடங்கள், 30 வருடங்கள் பணியாற்றியவர்கள்கூட, இன்னும் தலைமைக் காவலராக எட்டாத நிலை. இளையவர்களாக, இரண்டு பேர்களும், ஒரே நேரத்திலே பணியிலே சேர்கிறார்கள். அவர் தலைமைக் காவலராகிவிட்டார்; இவர் இன்னும் முதல் நிலைக் காவலராகவே இருக்கிறார்; இன்னும் ஒரு சிலபேர் உதவி ஆய்வாளர்களாகவே மாறிவிட்டார்கள்; சிலபேர் தலைமைக் காவலர்களாகவே இருக்கிறார்கள். இப்படி நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன.

அதிலே இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், இதற்குப் பின்னாலே சேர்ந்த juniors அதாவது இளையவர்கள், தலைமைக் காவலர்கள்; மூத்தவர்கள் இன்னும் முதல் நிலைக் காவலர்கள். இப்படிப்பட்ட முரண்பாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும். ஆகவே, இரண்டாம் நிலைக் காவலர், ஆறாண்டுகள் பணியாற்றினால், முதுநிலைக் காவலர்; முதுநிலைக் காவலர், ஆறாண்டுகள் பணியாற்றினால், தலைமைக் காவலர்; அவர்கள் மொத்தத்தில் ஒரு பதினைந்தாண்டுகளோ அல்லது பதினெட்டு ஆண்டுகளோ பணியாற்றினால், அவர்களும் உதவி ஆய்வாளர்கள். இப்படிப் பதவி உயர்வுக்குக் கட்டாயம் ஒரு நிரந்தரமான விதியை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய முரண்பாட்டைக் கட்டாயம் களையவேண்டும். அதிலேகூட, இந்தத் தலைமைக் காவலர்கள், இவர்களெல்லாம் நீண்டநாள் பணியாற்றி, பணி உயர்வு கிடைக்கவில்லை--உதவி ஆய்வாளராகப் பணி உயர்வு கிடைக்கவில்லை. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு ஒரு எழுத்துத் தேர்வு முறை இருக்கிறது. இந்த எழுத்துத் தேர்வு முறை தேவையில்லை. இவ்வளவு வருடம் பணியாற்றிவிட்டார்கள். அவர்கள் குற்றமும் இல்லாமல் வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு தாராளமாக வழங்கலாம். ஆகவே, இந்த எழுத்துத் தேர்வு முறையில் பல்வேறு குறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் களைய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

அடுத்து இன்னொன்று; முதலமைச்சருக்குப் பாதுகாப்புப் பணிக்கு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் risk allowance என்று சொல்லி 1,500/– ரூபாய் வழங்கப்படுகிறது. அதேமாதிரி, மாநகரத்திலே, நகரத்திலே, புறநகர்ப் பகுதியிலேகூட வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு வெறும் 50/– ரூபாய் இருக்கிறது. ஆகவே, ரூ.50/– என்று இருப்பதை



ரூ.100/– ஆக அதை இன்னும் சற்றுகூட உயர்த்தலாம். அதையும் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவலர்களுக்கு, இப்போது மருத்துவ உதவிக்காக 15 ரூபாய் மாதம் பிடிக்கிறார்கள். ஆனால், அது ஒருசில குறிப்பிட்ட வியாதிகளுக்குதான்; அதே வியாதி வந்தால், மற்றவர்களுக்கு எல்லாம் கிடைக்கவில்லை என்று சில புள்ளிவிவரங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படி 15 ரூபாய் என்பதை 25 ரூபாயாகக்கூட உயர்த்துங்கள். அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு எந்த வியாதி வந்தாலும்கூட, அவர்கள் மருத்துவ உதவி பெறுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். சென்னையிலே, எழும்பூரிலே காவலர்களுக்கு நல்ல அற்புதமான மருத்துவமனை இருக்கிறது. பாராட்டப்பட வேண்டியது. இதைப்போல, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் மருத்துவமனைகளைக் கொண்டுவரவேண்டும். அது காவலர்களுக்கு நிரம்ப வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மானிய விலையிலே உணவுப் பொருள்கள் கொடுக்கிறார்கள். Ration என்று சொல்கிறார்கள். இது எல்லோராலும் வாங்கப்படுவது இல்லை. ஏறக்குறைய 30 சதவிகிதம் பேர்கள்தான் பயன் அடைவதாகச் சொல்லப்படுகிறது. அதிலே தரமானப் பொருட்கள் இல்லையென்று சொல்கிறார்கள். ஒன்று, தரமான பொருட்கள் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், அதற்கு ஏறக்குறைய ஒரு கோடியே 32 இலட்சம் செலவு செய்கிறோம்; அதை அவர்களுக்கு மானியத் தொகையாகக்கூட கொடுத்துவிடலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்று கூறுவது தவறு. தரமான பொருட்கள்தான் வழங்கப்படுகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** நிறைய பேர் அவற்றை வாங்குவதற்குக்கூட முன்வருவதில்லை. அந்தத் தொகையை அப்படியே அவர்களுக்குக் காசாகக் கொடுத்துவிடலாம். அதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதைத்தவிர, இப்போது காவலர்களுக்குத் தொப்பி கொடுக்கிறோம்; காலணி—shoe—கொடுக்கிறோம்; துணி கொடுக்கிறோம். சீருடைக்குத் துணி, belt, மற்றவையெல்லாம் கொடுக்கிறோம். இவை தரமானதாக இல்லை என்று சொல்கிறார்கள். சின்ன தலைக்கு பெரிய தொப்பியாக இருக்கிறது. பெரிய காலுக்குச் சின்ன shoe–ஆக இருக்கிறது.

Belt-உம் அதேமாதிரிதான். மேலும், தரமான சீருடை துணி இல்லை என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் என்ன தொகைக்கு டெண்டர் விட்டு இன்னொருவருக்குக் கொடுக்கிறீர்களோ, அதே தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிடலாம். இதில் ஒன்றும் சிரமமே இல்லை. இவ்வாறு கொடுத்தோம் என்று சொன்னால், அவர்களுக்குத் தேவையான அளவில் நல்ல துணியை வாங்கித் தைத்துக்கொள்வார்கள். அவர்களுக்குச் சீருடை தைப்பதற்கான தையற் கூலியையும் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி, இந்தக் காவல்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்குச் சீருடை தைத்துக்கொள்வதற்கு stitching charges ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜி.கே. மணி:** வழங்கப்பட்டிருந்தால் மிக்க நன்றி. அதேநேரத்தில், இந்தக் காவல் துறையிலே இருக்கக்கூடியவர்களின் குழந்தைகள் எல்லாம் படிப்பதற்கு—இப்போது ஹரியானா மாநிலத்திலே ஒரு பொதுப் பள்ளி—காவலர் பொதுப் பள்ளி—police common school என்று சொல்கிறார்கள்; அது நிரம்ப தரமானதாக இருக்கிறது; நன்றாகப் படிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கு காவலர்களை திடீரென்று இடமாற்றம் பண்ணுகிறார்கள். அவ்வாறு பணிக்குப் போனால் திரும்ப ஒரு வாரம் ஆனாலும்கூட வருவதில்லை. குழந்தைகளைப் பராமரிக்கக்கூட முடியவில்லை. காலையிலே வந்துவிட்டால், மீண்டும் இரவு பூராவும் எந்த நேரத்திலே வருவது என்று தெரியாமல் குழந்தைகளைப் பார்க்கக்கூட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய குழந்தைகள் பெரும்பாலும், படிக்க இயலாமல் இடையிலே—drop outs—அதிகமாகிவிடுகிறது என்று சொல்லுகிறார்கள். பள்ளி விவரமே இப்படிச் சொல்லுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட காவல் துறையினருடைய குழந்தைகள் படிப்பதற்குப் பள்ளிகளும், கல்லூரிகளும் காவல் துறைக்கெனத் தனியாகக் கொண்டுவந்தால் அந்தக் குழந்தைகள் தரமான கல்வி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதுபோன்று டெல்லி, ஹரியானா போன்ற மாநிலங்களில் இருக்கின்றன. அதைப்போலவே, இங்கேயும் கொண்டுவர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் காவல் துறையிலே இருக்கக்கூடியவர்கள், சென்னைக்கு வருகிறார்கள்; நீதிமன்றப் பணிக்கு, பல்வேறு பணிகளுக்கு, தலைநகருக்கு, மற்ற இடங்களுக்குப் போகிறார்கள். அங்கு தங்குவதற்கு சரியான



இடமில்லை. அவர்கள் துப்பாக்கி வைக்கவும், அவர்களின் துணிகளை வைக்கவும் மற்றும் கொண்டு செல்லும் மற்ற ஆவணங்களையும், எல்லாவற்றையும் வைத்துக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கெல்லாம் நிரம்ப சிரமப்படுகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இராணுவத்திலே பணியாற்றிய Ex-Servicemen-க்கெல்லாம் உதவி செய்கிறார்கள். அதைப்போல், ஓய்வுபெற்ற காவலர்களுக்கும் ஒரு மறுவாழ்வு ஆணையம் அமைத்து, அதன்வாயிலாக மீண்டும் ஏதாவது அரசு சார்பு நிறுவனங்களிலோ, மற்ற நிறுவனங்களிலோ அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு அல்லது ஓய்வூதியம் பெறுவதற்கு எல்லா மாவட்டங்களிலும் ஒரு அலுவலகம் தொடங்குவதற்கு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நிறைய இருக்கின்றன. அவர்கள் இன்னும் ஒன்று என்ன கேட்கிறார்கள் என்றால், நாங்கள் இத்தனை வருடங்களாக பணியாற்றிவிட்டோம்; ஓய்வுபெற்றுவிட்டுப் போனால், குடியிருப்பதற்கு ஒரு வீடில்லை என்று கேட்கிறார்கள். அவர்கள் சும்மாகூட கேட்கவில்லை. சம்பளத்திலே பிடித்தம் செய்து—காவலர் வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலே வீடு கட்டிக்கொடுத்து, சம்பளத்திலே பிடித்தம் செய்து கொள்ளக்கூடிய வகையிலே—அவர்கள் ஓய்வுபெறும் காலத்தில் வாழ்வதற்கு ஒரு வீட்டினை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

காவல் பணியில், முன்பு நம்முடைய அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தேர்வு செய்யப்பட்ட 98 காவல் துறை உதவி ஆய்வாளர்கள், சிறப்புக் காவல் படையில் இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம், சட்டம்-ஒழுங்கு பணிக்கு வந்துவிட்டார்கள். இது எங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை என்று சொல்கிறார்கள். ஆகவே, உங்களுடைய காலத்திலே தேர்வு செய்யப்பட்டவர்கள், அவர்களுக்குப் பிறகு வந்தவர்கள் எல்லாம், சட்டம்-ஒழுங்கு பணிக்கு வந்த காரணத்தினாலே, அவர்களையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து பெண்கள்; அவர்கள் முதன்மைக் காவலர்களாக மாநகரத்தில் தேர்வு செய்யப்பட்டு – மற்றவர்களுக்கு எல்லாம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பணி உயர்வு வழங்கப்பட்டது – ஆனால் சில பேர்களுக்கு 16 ஆண்டுகள் கழித்து வழங்கப்பட்டிருக்கிறது. அதையும், இந்தநேரத்திலே கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித் துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் இப்போதுதான் subject –க்கு வருகிறேன். அடுத்து காவல் துறை தலைமை அலுவலகம், DGP அலுவலகம் கட்டுவதாகச் சொல்கிறோம். அதற்கு, இந்த நிதி ஒதுக்கத்தில் வரவில்லை; மூலதனக் கணக்கிலும் வரவில்லை; மற்றதிலும் வரவில்லை. முதலமைச்சர் அவர்கள், அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள், காவல் துறை தலைமை அலுவலகத்திற்கு. அதேமாதிரி, பயிற்சிக்கான பயிற்சி அலுவலகம்; அதுவும் இதிலே வரவில்லை. எந்த ஆண்டு எப்படிக் கட்டப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. அதையும், இந்த நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அடுத்து, பெண்களுக்கு எதிராக...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பயிற்சி அமைப்புக்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கி, வேலை நடந்து கொண்டு வருகிறது.

**திரு. ஜி.கே. மணி:** அதேமாதிரி Police Academy–க்கு, 48 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு ஒதுக்கீடு செய்ததாகச் சொல்லவில்லை. ஒதுக்கீடு செய்யவில்லை. ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதற்கும் நிதி ஒதுக்கியாகிவிட்டதா? அதையும் நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நிதி ஒதுக்கி, வேலை நடந்து கொண்டு இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து, இன்னும் ஒன்று முக்கியமானது. இப்போது எங்குப் பார்த்தாலும் கூலிப் படையினுடைய கொலை அதிகரித்தே இருக்கிறது. இதை நான் குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. எங்குப் பார்த்தாலும் சரி, நம்முடைய தமிழ்நாட்டிலே, தினந்தோறும் பத்திரிகையிலே பார்த்தாலும் சரி, கூலிப்படை கொலை செய்தார்கள்; ஆட்களைக் கடத்திச் சென்றார்கள். இங்கே கடத்தல், கொள்ளை, கொலை போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, இந்தக் கூலிப் படையைக் கட்டாயம் ஒழித்தாக வேண்டும். இது, அரசாங்கத்திற்கும் சரி, நம் நாட்டிற்கும் சரி, ஒரு பெரிய சவாலாக வந்துகொண்டிருக்கிற மாதிரி இருக்கிறது. ஆகவே, கூலிப் படையை ஒழிப்பதற்கு, ஒரு தனிப் படை கட்டாயம் அவசியம் அமைக்க வேண்டும். மகாராட்டிர மாநிலத்திலே இந்தக் கூலிப் படையை ஒழிப்பதற்கு ஒரு தனிச் சட்டம் கொண்டு வரப்பட்டு, தனிப் படை



அமைத்து, அதை ஒடுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, இங்கே எல்லா வகையிலும் முன்மாதிரியாக இருக்கிற நம்முடைய மாநிலம், இதை ஒடுக்குவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முன்னாள் அமைச்சர்கள் பற்றியெல்லாம் பார்த்தோம். நான் அதற்குள் ஆழமாகப் போக விரும்பவில்லை. அதைக் கட்டுப்படுத்துவதற்கு இங்கே முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மகளிர். இன்றைக்கு மகளிருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. புள்ளிவிவரங்களிலே, நீங்களேகூட சொல்லி இருக்கிறீர்கள். அவை 2003, 2004 ஆம் ஆண்டுகளை ஒப்பிடுகிற நேரத்திலே, அதிகமாக இருக்கின்றன. நான் ஆண்டுகளை ஒப்பிட்டு, கூடுதலாக இருக்கின்றன என்றுகூட சொல்லவில்லை. இவ்வளவு குற்றங்கள் இருக்கின்றனவே என்பதை வேதனையோடு சொல்கிறேன். கற்பழிப்புகளைப் பார்த்தால், இந்த ஆண்டு 618, அடுத்து ஆட்கடத்தல், பெண்களைக் கடத்தல் 692, வரதட்சணை மரணம் 225, பாலியல் கொடுமை 1081, இவ்வளவு கூடுதலாக இருக்கின்றன. நான் கடந்த ஆண்டுகளைவிட அதிகமாக இருக்கிறது என்று குற்றச்சாட்டுக்காகக்கூட சொல்லவில்லை. அதிகமாகவும் இருக்கிறது. அதேநேரத்திலே பெண்களுக்கு எதிரான கொடுமைகள் இவ்வளவு நடக்கலாமா? நம்முடைய முதலமைச்சர் நீங்கள் இருக்கிற நேரத்திலே, பல்வேறுவகையிலே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற நேரத்திலே, இந்தப் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 23–இல் இதற்கான விளக்கமும் தரப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களைப் படித்த மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், அந்த விளக்கத்தை மட்டும் படிக்க விட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. இதில் 2003 ஆம் ஆண்டில் 924 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்க, 2004 ஆம் ஆண்டில் 1081 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், திரையரங்குகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற முக்கிய இடங்களில் குற்றம் இழைப்போரைக் கண்டுபிடிக்க, காவல் துறையினர் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டதால் குற்ற வழக்குகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலேயே விளக்கமும் ஏற்பட்டுள்ளது.

[2005 மார்ச் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே.மணி, இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் படித்துவிட்டேன். இருக்கிறதைத்தான் சொன்னேன். குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறேன். இன்னும் தடுப்பதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்று கொள்ள முடியாது. குற்றங்களைப் பதிவு செய்வதன் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்தது மட்டுமல்ல, குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டதாக கொள்கை விளக்க ஏட்டிலே இல்லை. கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டதாக இருக்கிறது. எனவே, யார் புகார் கொடுத்தாலும் பதிவு செய்வதில்லை. கண்டுபிடிக்க முடியும் என்றால் மட்டுமே பதிவு செய்கிறார்கள். கண்டுபிடித்துவிட்டால் பதிவு செய்கிறார்கள். இந்த முறை நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஐந்து நிமிடம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றம் நடக்கிறது என்பதைக் கண்டுபிடித்தால்தானே பதிவு செய்ய முடியும்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் புரியாதவர் அல்ல. வேண்டுமென்றே ஏதாவது குறை கூறவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். முதலில் ஒரு குற்றம் பதிவு செய்யப்படுகிறது; அதன்பின்னர், கண்டுபிடிக்கப்படுகிறது. பின்னர், investigated, successful case என்று கண்டுபிடிக்கப்பட்டதன் விவரம் பதிவு செய்யப்படுகிறது.



2005 மார்ச் 15]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு எதிரான குற்றம் அதிகமாகிற நேரத்தில்கூட, நான் இன்னொன்றை வருத்தமாக, வேதனையாகச் சொல்கிறேன். மது ஒழிப்புப் போராட்டம் என்று எங்கள் கட்சி சார்பிலே செய்தோம். மகளிர்தான் பண்ணினார்கள். ஆனால், அந்த மகளிர்கூட, ஏதோ பூட்டுப் போடும் போராட்டம் என்று சொன்னார்கள். அதை ஒரு எடுத்துக்காட்டாகத்தான் சொன்னார்கள். யாரும் பூட்டுப் போடவே போகவில்லை. போகாததற்கு முன்னாலே, கைது செய்து, அந்தப் பெண்களெல்லாம்கூட பிணையில் விடுவிக்கப்பட்டார்கள், ஜாமீனிலே. அதாவது, நிபந்தனை ஜாமீனிலே விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் இன்னும் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆக பெண்களுக்கு எதிரான இப்படிப்பட்ட கொடுமைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இப்படிப் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் இங்கே, அதுவும் குறிப்பாக, பாட்டாளி மகளிர் சங்கத்திற்கு அதிகம் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஐந்து நிமிடங்கள், ஐந்து நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு எதிரான கொடுமைகளும், குற்றங்களும், அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்று கூறுவதை நான் மறுத்தே ஆகவேண்டும். பெண்கள், முன்பு காவல் நிலையங்களுக்குச் செல்லவே அச்சப்படுவார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்தது மட்டுமல்ல; regular காவல் நிலையங்களில்கூட பெண் காவல் துறையினர் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றையச் சூழ்நிலையில் மகளிர் தைரியமாக எந்தக் காவல் நிலையத்திற்கும் சென்று புகார் தருகிறார்கள். ஆகவேதான், வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அடிக்கடிச் சொல்வது, சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று. இதை நான் வரவேற்கிறேன். எல்லா நேரங்களிலும் சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும். சில நேரங்களிலே, சட்டம் ஏவி விடப்படுவதாகவும், சில நேரங்களிலே சட்டம், இங்கே அடக்கி வாசிக்க உத்தரவிடப்படுவதாகவும் நான் கருதுகிறேன். அதைக்கூட, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கே எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர், ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே. குரு அவர்கள், அரசாங்கத்தையும், முதலமைச்சரையும் ஏதோ அவதூறாகப் பேசினார் என்று, அவர்மீது அவதூறு வழக்குப் போடப்பட்டு, தினந்தோறும் நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார். அதேபோல, என்மீதுகூட அவதூறு வழக்கு. இல்லாத ஒரு அவதூறு வழக்கு, இப்படிப் போடப்பட்டிருக்கிறது. எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல் முருகன் மீதும் போட்டு, அவர் ஜாமீன் வாங்கிவிட்டார். அந்த ஜாமீனை இரத்து பண்ண வேண்டுமென்று—உயர் நீதிமன்றம் கொடுத்த ஜாமீனை இரத்து செய்ய வேண்டுமென்று--இந்த அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்குப் போகிறது. என்ன பெரிய வழக்கு? சம்பந்தமே இல்லாமல், அந்தக் குற்றத்திற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லை; ஒன்றரை மாதம் கழித்து, அந்த வழக்கிலே சேர்க்கப்படுகிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நீதிமன்றங்களிலேயே சந்திக்க வேண்டும். அதைப்பற்றி இந்த சட்டப் பேரவையில் பேசக்கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வழக்குப் பிரச்சினைக்கே போகவில்லை. இங்கே சட்டம் எப்படிக் கடமையைச் செய்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே, எதிர்க் கட்சியினர்மீதும், எதிர்க் கட்சித் தலைவர்கள்மீதும், சட்டமன்ற உறப்பினர்கள்மீதும் அவதூறு வழக்குப் போடுவது, இவர்களையெல்லாம் அடிக்கடி அலைக்கழிப்பது போன்ற அந்தக் கொடூரச் சம்பவம் நடந்துகொண்டிருக்கிறது. எதிர்க் கட்சிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் நடந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். அடுத்து, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் கேட்ட நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) ஒரு வாக்கியத்தில் முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் சொன்ன அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இப்படி அமைச்சர்கள்மீது சொல்வது முறையல்ல, முறையற்றது. நீங்கள் சொன்னவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. என்னுடைய பிரச்சினை அதுதான். திரு. ஜி. பழனிசாமி (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேசவேண்டும். அதன் பின்பு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரம் இல்லை. திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 10–35

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, நான் பேசலாமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு (குறுக்கீடுகள்) தலைவர் அவர்களே, பேசலாமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** 5 நிமிடங்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் கேட்ட நேரத்தைவிட அதிக நேரம் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவரை வாக்கியத்தை முடிக்கச் சொல்லுங்களேன்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்ட நேரத்தைவிட அதிகமாகக் கொடுத்தாகிவிட்டது. 35 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இவ்வளவு இடையூறாக இருக்கிறதே, நான் பேசுவதற்கு? (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே...

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, 5 நிமிடங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்தைவிட அதிக நேரம் கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும். முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும். உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமி நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பழனிசாமி நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** 5 நிமிடங்களாவது கொடுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. பழனிசாமி பேசுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** ஜி.கே.எம்... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் முடிந்துவிட்டது. என்னுடைய பிரச்சினை, ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்தைவிட அதிக நேரம் கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத்தான் சண்டை ஒன்றும் இல்லையே! அவர் பேசி முடித்துவிட்டுமே! ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு நிமிடம் கொடுங்கள் அவருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரம் கேட்டார். 36 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. வேண்டாம். வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** தலைப்புச் செய்தி கொடுக்க வேண்டாமா பத்திரிகைக்கு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லியாகிவிட்டது. அவர் மறுபடியும் உள்ளே போகிறார். (குறுக்கீடுகள்) சரி வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்காதீர்கள். நடந்ததைத்தான் சொல்கிறேன்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதேபோல பக்கம் 8-லே சொல்லப்பட்டிருக்கிறது. ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட இடங்கள் 214. ஆனால் இருப்பது 193. இன்னும் 21 பணியிடங்கள் காலி. எப்படிச் சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்படும்? ஆகவே, இதனைப் பொறுத்தவரையில் பார்த்தால், எதிர்க் கட்சிகளைப் பழிவாங்கக்கூடிய, காவல் துறையைக்

கையில் வைத்துக்கொண்டு பழிவாங்கக்கூடிய ஒரு அரசாங்கமாகவும், ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருக்கக்கூடிய துறையாகவும் இது இருக்கிறது என்பதைச் சொல்லி அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன். பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழ்நாட்டினுடைய காவல் துறை நான்கு மண்டலங்களாக இருந்து சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைப் பராமரிப்பதிலே, பாதுகாப்பதிலே நம்முடைய காவல் துறை உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதிலே கவனம் செலுத்துகின்ற அந்தக் குறிப்புகளை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று மகளிர் காவல் நிலையங்கள் 195, தமிழ்நாட்டிலே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் துறையிலே, சீருடைப் பணியாளர்களைத் தேர்வு செய்வதிலே குறிப்பாக அரசியல் தலையீடு இல்லாமல் செயல்படுவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய காவல் துறையிலே, சமீபத்திலே, சாதாரணமான ஏழையெளிய குடும்பங்களிலே இருக்கக்கூடிய பெண்கள், இளைஞர்கள், யாருடைய சிபாரிசும் இல்லாமல் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று தமிழகத்தினுடைய காவல் துறை தொடர்ந்து இதுமாதிரி செயல்பட வேண்டுமென்கின்ற என்னுடைய விருப்பத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் எப்போதும் தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, எடுத்தவுடனே நான் காவல் துறை விவகாரத்திற்கு உள்ளே போவதில்லை. என்னுடைய தொகுதி விஷயத்தைப் பற்றி, நான் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை. அநேகமாகத் தொடர்ந்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருப்பதனாலே நான் இதைச் சொல்கிறேன்; திருத்துறைப்பூண்டி ஒரு வளர்ந்து வருகின்ற நகரம்; ஒரு நகரக் காவல் நிலையத்தை மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் அங்கே தொடங்கப்படுவதற்கு உத்தரவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தீயணைப்பு நிலையங்கள், என்னுடைய தொகுதியிலே
மூன்று இருக்கின்றன. வாடகைக் கட்டடங்களிலே இருக்கின்றன.
திருத்துறைபூண்டியினுடைய தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக்
கட்டடம் இருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும்.
கோட்டூர், முத்துப்பேட்டை போன்ற இடங்களுக்கும் புதிய கட்டடங்கள்
கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். அவை வாடகைக் கட்டடங்களிலே
இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, விபத்துகள் நடந்தால் அந்த
அவசரக் காலங்களிலே உடனடியாக விபத்துக்கு உள்ளானவர்களை
வெளியூருக்கு எடுத்துச் செல்லமுடியாத நிலையிருக்கின்ற காரணத்தினால்,
ஒரு Ambulance-ஐ அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு வழங்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–40

காவல் துறையைப் பற்றியே அநேகமாக பேசிக் கொண்டிருக்கிறோம்.
தீயணைப்புத் துறை ஒரு சிறப்பான முறையிலே தமிழ்நாட்டிலே
பணியாற்றிக்கொண்டிருப்பதில் பெரும் பகுதி யாரும் கவனம்
செலுத்துவது இல்லை. அதனாலே தீயணைப்பு மற்றும் மீட்புப்
பணியாளர்களுக்கு தீக்காயங்கள் படாத அளவிற்கு நவீனமான முறையிலே,
காவல் துறைக்கு எப்படி முன்னுரிமை கொடுக்கிறோமோ, அதேபோன்று
அதற்கான முன்னுரிமையை வழங்குகின்ற வகையில் தீயை
அணைக்கிறபோது தீக்காயங்கள் படாத அளவிற்கு அவர்களுக்கு
ஆடைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, தமிழ்நாட்டிலே பல இடங்களிலே கிணற்றிலே சில
பேர் சுத்தப்படுத்துகிறபோது விஷ வாயுவினால் இறந்துவிடுகிறார்கள்.
காவல் துறை போய் தூக்குவதில்லை. அந்தத் தீயணைப்புப்
படையினர்தான் அதிலே ஈடுபடுகிறார்கள். அதிலேயிருந்து அவர்களுக்குப்
பாதிப்பு ஏற்படாதவகையிலே, அவர்களுக்கு அந்தச் சீருடைகளை வழங்க
வேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கையைத் தீயணைப்புப்
படையினர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தச்
சீருடைகளை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, நகராட்சி, பேரூராட்சிகளை எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், 200 அடி, 250 அடிக்குக் கீழே ஆழ்குழாய்க் கிணறுகள், நீர் உறிஞ்சுவதற்காக போடப்பட்டவற்றில், தண்ணீர் இல்லை; சுத்தமாக தண்ணீர் இல்லை; உப்பு நீராக இருக்கிறது என்று சொன்னால், அதை அப்படியே மூடாமல் விட்டுவிடுகிறார்கள். அதை நகராட்சி நிர்வாகமோ, மாநகராட்சி நிர்வாகமோ பார்ப்பது இல்லை. அதிலே சிறார்கள் விழுந்துவிட்டால், அவர்களை மீட்பதிலே மிகப் பெரிய கஷ்டம் இருக்கிறது. அதற்கெல்லாம் இப்போது தீயணைப்புப் படையினர்தான் இரவு பகலாக இருந்து பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அந்த மீட்புப் பணிகளுக்கான பயிற்சிகள் எதுவுமே கொடுப்பதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்குரிய பயிற்சி அளிப்பதற்கு, அதற்குரிய machinary–களை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கையை நம்முடைய அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இயற்கைச் சீற்றங்கள் வரும்போது, சுனாமி போன்று வரும்போது, 24 மணி நேரமும் அவர்கள் பணி செய்கிறார்கள். அவர்களுக்கு, 9 ரூபாய்தான் உணவுப் படியே. குறைந்தபட்சம் 100 ரூபாயாவது கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். மருத்துவப் படியை 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீயணைப்புத் துறைக்கு அத்தகைய சலுகைகள் வழங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்றுதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். காவல் துறையின் தலைமைக் காவலர்களுக்கு, அவர்கள் சொல்லி இருக்கிற கோரிக்கை, "எழுத்துத் தேர்வு முறையிலே எங்களைத் தேர்ந்தெடுக்காதீர்கள்; எங்களுடைய நன்னடத்தையை உணர்ந்து, எங்களுடைய பணிச் சிறப்புகளைக் கடந்த 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் நாங்கள் செய்திருக்கிற, குற்றம் இல்லாதவகையிலே நாங்கள் செயல்பட்டிருக்கும் சேவைகளை உணர்ந்து, எங்களுக்குப் பதவி உயர்வு கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். அப்படி எழுத்துத் தேர்வு நடந்ததிலே சில முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் சொல்கிறார்கள். எனக்கு அதைப் பற்றியெல்லாம் தெரியாது. வந்த தகவலை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.



அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போன்று, சிறப்புக் காவல் படையிலே இருக்கக்கூடிய 98 பேர்; அந்த 98 பேரும் சட்டம்–ஒழுங்குப் பிரிவிலே தங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைவிட முக்கியமாக, எனது தொகுதியில் நடந்திருக்கிற சில சம்பவங்களை, முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது குற்றச்சாட்டு அல்ல. சென்ற ஆண்டு 3 இடங்களிலே முகமூடிக் கொள்ளையர்கள் உருட்டுக் கட்டையால் தாக்கி, அந்தக் குடும்பங்கள் இதுவரையிலும் மிக மோசமான அளவிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் கொள்ளையர்களையெல்லாம் கண்டுபிடிக்க முடியாத நிலைமை என்னுடைய தொகுதியிலே இடையூரிலே இருக்கிறது. இடையூரிலே கந்தசாமி பிள்ளை என்பவர் வீட்டிலே ஒரு கொள்ளை நடந்தது. இதுவரையிலும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சென்ற ஆண்டு நடந்தது. அதேபோன்று தோலி என்கிற இடத்திலே பாலசுப்பிரமணியன் என்பவர் வீட்டிலே இதேபோன்று முகமூடிக் கொள்ளை நடந்து, இதுவரையிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. காவல் துறை இந்தக் குறிப்பை எடுத்து, அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதால், இதை நான் சொல்கிறேன். அதேபோன்று, மேலப்பெருமலையிலே இதேபோன்ற சம்பவம் ஒரு துயரச் சம்பவம் நடந்தது. இதுவரையிலே, அவர் "Coma stage"–இலே இருக்கிறார். மண்டையிலே அடி விழுந்ததாலே பேச முடியவில்லை. அவ்வாறு நடந்த கொள்ளையை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேபோன்று, இடையூரிலே இந்த மாதம் 9 ஆம் தேதி திருமணமாகி 4 நாட்களுக்குள்ளாகவே தம்பதிகளைக் கட்டையால் அடித்து அவர்களுடைய நகைகளையெல்லாம் பறித்துச் சென்றுவிட்டார்கள். கட்டையால் அடிக்கப்பட்டதால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தஞ்சை மருத்துவமனையிலே தற்போது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளிலும், குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-45

மன்னார்குடியில், தொடர்ந்து பார்த்தோம் என்று சொன்னால்— காவல் துறையிலே தகவல் போனால் உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேதான் இதைச் சொல்கிறேன்; அங்கேயும் இதுபோன்றுதான் — நூற்றுக்கணக்கான Two wheelers; கடுமையான திருட்டுகள் நடக்கின்றன. இங்கேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னென்ன பொருள்கள் திருடுபோய் மீட்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை தம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, கடைசிப் பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். இதை வரவேற்கிறேன்; உண்மையில் நல்ல விஷயம். இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கே பார்த்தீர்களென்றால், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் இரண்டு பேர் bike–களையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். காவல் நிலையத்திற்குப் பக்கத்திலே இருக்கிற ஊர். இதுவரையிலே கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படிப் பல சம்பவங்களை இங்கே நான் சொல்ல முடியும். சொன்னால் நீடித்துக்கொண்டே போகும் என்பதால், சொல்ல விரும்பவில்லை. ஆக, இதுகுறித்த நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு தகவலை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 25–10–2002 அன்று அரசு ஊழியர்கள் போராட்டம் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருந்த நேரம். அந்த நேரத்திலே, திருவாரூரிலே, ஆயுதப் படையினுடைய காவலர், இன்னொரு காவலரிடம் வந்து, தனக்கு leave வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் leave கொடுக்காத காரணத்தால், கையிலே வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து, Station–லேயே அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, தானும் சுட்டுக்கொண்டு இறந்து போகிறார். அவருடைய மனைவி, மாண்புமிகு முதலமைச்சரிடம் வந்து மனு கொடுக்கிறார். அந்த அம்மா பி.எஸ்சி. படித்திருக்கிறார். அந்த மனு சம்பந்தமாகக் கேட்டதற்கு, ‘உங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவேன், வேலைவாய்ப்பு அளிப்பேன்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகவும், அதற்குப் பின்னால், 2002–லே இருந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மாண்புமிகு முதலமைச்சரைத் தம்மால் சந்திக்க இயலவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அந்தக் குடும்பம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து, விசாரித்து, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்தக்



குடும்பத்தை வாழவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று; நாகப்பட்டினம் காவல் துறையினுடைய ஜீப்— 1998, 21–4–1998—Jeep No. TN–51 C 0062; இது நாகப்பட்டினம் மாவட்டக் காவல் துறையினுடைய சார்பாக இருந்த ஜீப். காவல் துறையின் அந்த ஜீப்--ஒருவரை அடித்து, காலை நொறுக்கி, சுத்தமாக அதை காலி பண்ணிவிடுகிறது. கிட்டத்தட்ட, நிறைய வழக்குகள்; மருத்துவமனையிலே இருந்து வந்து விடுகிறார். Insurance–க்குப் போக முடியாது. ஏனென்றால், காவல் துறையினுடைய ஜீப் அடித்துவிட்டால் போக முடியாது. ஆகவே, காவல் துறையின்மீது, நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, ஒரு தீர்ப்பு வழங்கப்படுகிறது, 4 இலட்சத்து சொச்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று. இரண்டு தடவை நாகப்பட்டினம் எஸ்.பி. அவர்களுடைய காரை cease செய்வதற்கு கோர்ட் உத்தரவிடுகிறது. இதுவரையிலே அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அந்த நாகப்பட்டினம் எஸ்.பி.-யாக மீனாட்சி சுந்தரம் என்ற ஒரு எஸ்.பி. இருந்தார். தொடர்ந்து, கோர்ட்டிலே அப்பீலுக்குப் போய் கொண்டேயிருக்கிறார். காவல் துறையினுடைய ஜீப் அடித்தால் அதற்கு நிவாரணம் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லையா? என்னவென்றே புரியவில்லை. பாதிக்கப்பட்டு, காலை இழந்தவர் முதலமைச்சரிடம் மனு கொடுக்க வேண்டுமென்று இன்றைக்குக்கூட வந்திருக்கிறார். ‘முடிந்தால் நான் ஊருக்குப் போகும்போது, அழைத்துக் கொண்டுபோய், அம்மா அவர்களிடம் காண்பிக்கிறேன், இருப்பா, நில்’ என்று சொல்லி, கால் முறிந்தவனைக் கொண்டுவந்து காக்க வைத்திருக்கிறேன். இதற்கெல்லாம் காவல் துறை அதிகாரிகள் உரிய நிவாரணங்களை வழங்கி, தீர்வு காண வேண்டும். யாரும் ஒன்றும் பண்ண முடியவில்லை. நீதிமன்றத்திலே, எஸ்.பி.–யினுடைய காரை cease பண்ண வேண்டுமென்று உத்தரவு வந்து, அங்கேயிருந்து அமீனா போகிறார். அவரைக் காவல் துறையை வைத்து மிரட்டுகிறார்கள். முடியவில்லை, வாங்க முடியவில்லை. ஆக, இதையும் நீங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு கோரிக்கை. இதெல்லாம் கோரிக்கைதான். மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அநேகமாகப் பார்த்தீர்கள் என்று சொன்னால், நம்முடைய சிறைக் கைதிகள், 15 ஆண்டுக் காலம், 18 ஆண்டுக் காலம் சிறையிலே இருக்கிறார்கள். தேசியத் தலைவர்கள், நம்முடைய, தமிழ்நாட்டினுடைய மதிப்பிற்குரிய தலைவர்கள் பிறந்த நாட்களிலே, இறந்த நாட்களிலே அவர்களையெல்லாம் விடுதலை

செய்வது வழக்கம். இப்போது சமீபகாலமாக, யாரையும் விடுதலை செய்வதே இல்லை. கேரளாவிலேகூட பார்த்தால், 3000 பேருக்கு மேலே சிறைக் கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். மன்னித்து, தலைவர்களுடைய பிறந்த நாளிலே விடுதலை செய்திருக்கிறார்கள். அதேபோன்று, தமிழ்நாட்டிலே இருக்கிற சிறைக் கைதிகளையும் தலைவர்கள், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., காந்தி இவர்களுடைய நினைவு தினங்களிலே கொஞ்சம் பேரை, 10 ஆண்டுகள் நிறைவு பெற்றிருந்தால், சிறைக் கைதிகளை நீங்கள் விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நிரம்ப ஒழுக்கமானவர்கள். அதற்குப்பிறகு பார்த்தீர்கள் என்றால், இன்று காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன்... (குறுக்கீடு) இல்லை, சிறைக்குப் போய் 10 ஆண்டுகள் தண்டனை பெற்றிருக்கிறார்கள். மன்னித்து விட வேண்டும்; வேறு ஒன்றும் இல்லை. குறுக்கிடாதீர்கள்.

நேற்று சேலத்திலே நடந்த ஒரு சம்பவம் குறித்து, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சேலத்தில் இருக்கக்கூடிய கல்லூரி மாணவிகளுக்குக் காவல் துறை செயல்முறை விளக்கம் காட்டியது. ஆக, இதிலே குண்டு வெடித்து, அந்த இடத்திலேயே ஒரு பெண் இறந்துவிடுகிறார். 3 பேர் மருத்துவமனையில் (குறுக்கீடு) இல்லை. ஒருவர் இறந்து விடுகிறார். 3 பேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். இந்த குண்டு எப்படி வந்தது?...

முற்பகல் 10–50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவ இடத்தில் யாரும் இறக்கவில்லை. மருத்துவமனையில் ஒரு பெண் இறந்தார். பெரியார் பல்கலைக்கழகம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து, வைஷ்யா கல்லூரியில் 9–3–2005 முதல் 11–3–2005 வரை மூன்று நாள் பயிற்சி முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. 11–3–2005 அன்று வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பது தொடர்பான செயல்முறை விளக்கத்தினைப் பயிற்சிபெற்ற ஆயுதப் படையினர், மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு உரிய எச்சரிக்கை விடுத்தபின் நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கையில் இரண்டு Buck Shot–கள் வானை நோக்கிச் சுட்டதில், அதிலிருந்து வெளிவந்த ரவைகள் சுவரின்மேல்பட்டுச் சிதறியதில் தீபலட்சுமி 18 வயது, நிஷாபானு 18 வயது மற்றும் ஆரோக்கிய லிமா ரோஸ் 21 வயது ஆகிய மூன்று கல்லூரி மாணவிகளுக்குக் காயங்கள் ஏற்பட்டன. தீபலட்சுமி படுகாயம் அடைந்தார். மற்ற இருவருக்கும் சாதாரண காயம் ஏற்பட்டது. காயம் அடைந்த மாணவிகள், சேலம் மாவட்டம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். சேலம் நகரக் காவல் துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, மருத்துவமனைக்குச் சென்றும் விசாரித்தனர். இந்நிலையில், காயங்களுக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட தீபலட்சுமி, 13–3–2005 அன்று 22.00 மணி அளவில் இறந்தார். வைஷ்யா கல்லூரியின் முதல்வர் அளித்த புகாரின்பேரில், அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண் 680/2005–ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கையின் நகல் சேலம் வருவாய்க் கோட்டாட்சி அலுவலருக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக, ஆயுதப் படைப் பிரிவைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய குடும்பத்திற்கு ஏதாவது நிவாரணம் வழங்குவார் என்று நம்புகின்றேன். நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய காவல் துறைக்கு ஒரு பெருமை சேர்த்தது, மறுக்க முடியாதது. ஏனென்று சொன்னால், 20 ஆண்டுக் காலமாக கர்நாடகாவுக்கும், தமிழகத்திற்கும் இடையே நீண்ட மொழிப் பிரச்சினையும், இனப் பிரச்சினையும் ஏற்பட்டு இருந்தது. அது சந்தனக் கடத்தல் வீரப்பனாலே. அதற்குக் காவல் துறையின் சார்பாக, மீட்புப் பணியிலே ஈடுபட்டிருந்த நம்முடைய காவல் துறையினர் சிறப்பாகச் செயல்பட்டு வீரப்பனைச் சுட்டு வீழ்த்தி, ஓர் அமைதியை இன்றையதினத்திலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்றிருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும் இதை வரவேற்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக, காவல் துறைக்கு ஒரு மிகப் பெரிய தலை குனிவு ஏற்பட்டது. வீரப்பன் மூலமாக அதை மீட்டிருக்கிறோம். அந்தத் தலை குனிவு எப்படி ஏற்பட்டது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அது court–லே இருக்கிற விஷயம். ஜெயலட்சுமி என்கிற ஒரு பெண்ணால் பெரிய பிரச்சினைகள் எல்லாம் வந்து, (குறுக்கீடு) இல்லையா? காவல் துறைக்கு இப்படி ஒரு தலை குனிவு ஏற்பட்டுப் போய்விட்டதே என்கிற நிலையிலே, இந்த வீரப்பனைக் கண்டுபிடித்தது என்பது—அதை மூடி மறைத்து, சரி—காவல் துறை ஒரு

சிறப்பான காவல் துறையாக இருக்கிறது என்கிற பெயர் வந்திருக்கிறது. அதை உண்மையிலேயே நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தொடர்ந்து சத்தியமங்கலம் பகுதியிலே வீரப்பனால் அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று, அந்த ஆதிவாசி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று மீட்புப் பணியிலே ஈடுபட்டிருந்த நம்முடைய அதிரடிப் படையினரால் சில பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு 'சதாசிவம் கமிஷன்' என்கிற ஒரு கமிஷன், ஒரு Report கொடுத்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் சிலருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. உடனடியாக, அந்த 'சதாசிவம் கமிஷ'னுடைய பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து, வீரப்பனால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி, அதிரடிப் படையால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி, அந்த மக்களுக்கு நீங்கள் நிவாரணம் வழங்க வேண்டுமென்று, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, அந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த காவலர்கள், அதிரடிப் படையிலே இருந்த காவலர்கள் 250 பேர், அங்கே இருந்தவர்கள் சிலர், இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற அந்தச் சலுகைகளும், உதவிகளும் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்கிற ஆதாயம் இன்றைக்கு அவர்களிடத்திலே இருக்கிறது. அவர்கள் 250 பேர்தான். (குறுக்கீடு) ஆதங்கங்கள் இருக்கின்றன. வார்த்தைகள் அப்படித் தவறிப் போய் வந்துவிடுகின்றன. கொஞ்சம் மன்னிக்க வேண்டும். (குறுக்கீடு) பரவாயில்லை. அந்த ஆதங்கங்களை நீங்கள் குறைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–55*

குறிப்பாக, நம்முடைய காவல் துறைக்கு வானளாவிய அதிகாரங்களை நாம் வழங்கியிருக்கின்றோம். சாதாரண அதிகாரங்கள் கிடையாது. அந்த அதிகாரங்களில் சிலவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவது நல்லது என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று, தமிழ்நாட்டில்கூட, திருட்டு வி.சி.டி. கண்டுபிடிக்கப்பட்டு அது கடுமையாக ஒழிக்கப்பட்டிருக்கின்றது. அநேகமாக பட அதிபர்களுக்கெல்லாம்கூட மகிழ்ச்சியாக இருக்கின்றது. பரவாயில்லை,



நம்முடைய தொழில் மேலோங்கி இருக்கிறது என்று அவர்கள் மகிழ்ச்சியில் இருக்கின்றார்கள். நல்ல விஷயங்கள். அதேபோல, 2004–2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்த Video conferencing மூலமாக ஜெயிலிலிருந்து நேரடியாக கைதிகள் தங்களுடைய சாட்சியங்களை அளிக்கின்ற நிலையில் கொண்டு வந்திருக்கின்றோம். இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், British ஆட்சிக் காலத்திலேயிருந்து பொதுவாக சிறையிலே இருக்கக்கூடிய கைதிகள், வெளியிலே வரும்போதுதான் உற்றார், உறவினர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்றார், உறவினர்கள் சிறைச்சாலைக்கே சென்று கைதிகளைப் பார்க்கலாம். அதற்கு நேரமும் ஒதுக்கப்படுகின்றது. அனுமதியும் வழங்கப்படுகின்றது. ஆகவே, நீதிமன்றத்திற்குக் கைதிகளை அழைத்து வரும்போதுதான், உற்றார், உறவினர் பார்க்க முடியும் என்ற நிலை இல்லை. Video conferencing–மூலம் அரசுக்கு நிறைய பணம் மிச்சமாகிறது. அதோடு, காவல் துறையினருக்குப் பணிச் சுமையும் குறைகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஏனென்றால் இப்போது 9 மத்திய சிறைகள், 270 நீதிமன்றங்களுக்கு இதுபோன்ற வசதிகளை நாம் செய்யவேண்டி இருக்கிறது. அதைவிட மேலும் பார்த்தோம் என்றால், இப்படி அழைத்து வருவதைவிட, அதிகமான செலவுகள் இதில் ஆகின்றது. இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள்கூட, நேற்று சொன்னார்கள். நாடாளுமன்றத்திலே சில அறிவிப்புகள், உள் துறை இணை அமைச்சர் அறிவித்ததை இங்கே சொன்னார்கள். தமிழ்நாட்டிலே, காவல் துறை 7–வது இடத்திலே இருக்கின்றது. 8 காவல் துறை மரணங்கள் நடந்திருக்கின்றன. 85 பேர் இன்றையதினத்திலே மரணமடைந்திருக்கின்றார்கள் என்ற விவரங்களைச் சொன்னதையெல்லாம், இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே பதிலளித்திருக்கின்றார்கள். நான் அந்த விஷயங்களுக்குள் போகவில்லை. இன்னும் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். கோவையிலே நடந்த மதக் கலவரத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், 161 பேர் கைது செய்யப்பட்டு, இதுவரையிலே சிறையிலே இருக்கின்றார்கள். ஒருவர் இறந்துவிட்டார். அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று,

நான் சொல்லவில்லை. அவர்களுக்கு நீதிமன்றத்திலே தண்டனை வழங்கியிருந்தாலும்கூட, இதுவரையிலும் தண்டனையை முடித்து வெளியிலே வந்திருப்பார்கள். எந்தவொரு விசாரணையும் இல்லாமல் சிறையிலே இருக்கின்றார்கள். அவர்கள் குற்றம் செய்தார்கள் என்பதற்காக சிறையிலே இருக்க வேண்டுமா? அவர்களுக்கு தண்டனையை வழங்கக் கூடாதா? ஒருவர் இறந்துவிட்டார். ஆகையால் அவர்களுக்கு தண்டனையாவது வழங்கி, தண்டனைக் காலத்தையாவது முடித்து வெளியிலே வருவதற்கு தங்களுடைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அநேகமாக மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு தனி நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தண்டனையை விரைந்து, அரசு எப்படி வழங்க முடியும்? நீதிமன்றம்தான் வழக்கை முடித்து, விசாரணையை முடித்து, தண்டனையை வழங்க முடியும்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பாக அவர்களை விடுதலை செய்வதற்கு முயற்சி செய்ய முடியாது. காவல் துறையினர் ஒத்துழைப்பே இல்லாதவகையிலே, அதற்கான hearing–ஐ, ஒத்தி வைத்து, ஒத்தி வைத்து தொடர்ந்து அப்படிக் காலம் கடத்தப்படுகின்றது. அந்த வழக்கில் தீர்வு காண வேண்டுமென்பதில் காவல் துறை முயற்சியே எடுக்கவில்லை. இப்படி இருக்கின்ற காரணத்தால், அது காலம் கடத்தப்படுகின்றது என்பது அவர்கள் தரப்பிலிருந்து வருகின்ற வாதமாக இன்றையதினத்திலே அமைந்திருக்கின்றது என்பதை தங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிறகு பார்த்தீர்களென்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற தலைவர்கள் யாரையும் நாம் விட்டுவைத்தபாடில்லை. எல்லார்மீதும் நம்முடைய காவல் துறை வழக்கு போட்டுவிட்டது. 'எஸ்மா' சட்டத்தைப் போட்டது, 'டெஸ்மா' சட்டத்தைப் போட்டது. அநேகமாக இந்தச் சபையிலே, எதிர்க் கட்சிகளில், தமிழ்நாட்டில், ஒரு தலைவராவது வழக்கு இல்லாமல் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. நம்முடைய மாவீரன் ஜி.கே. மணிகூட, அவர் மேலேயும் வழக்கு போட்டதாக இங்கே சொன்னார்கள். (குறுக்கீடு) மாவீரன்தான். அவர்மீதே ஒரு வழக்கு. தம்பி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின்; அவர்மீதும் ஒரு வழக்கு இருக்கிறது என்று நேற்று முதலமைச்சர் சொல்லிவிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், வழக்கு போடுவதில் ஒன்றுப் சந்தேகமில்லை. அரசியல் கட்சிகள்மீது



வழக்கு போடுங்கள். ஆனால், போடுவதில் ஏதாவது ஒரு அர்த்தம் இருக்கின்றதா? இல்லை, இந்த வழக்குக்கு, குற்றம் சாட்டுவதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? ஒரு வழக்கையாவது இதுவரையில் காவல் துறை போட்டிருக்கின்ற வழக்கில் தண்டனை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றதா? எதுவுமே இல்லை. ஆகையால், இந்த 'எஸ்மா' சட்டம், 'டெஸ்மா' சட்டம் இவை எல்லாவற்றையும் நீக்கிவிடுங்கள். அவை வேண்டியதில்லை. சட்டம்–ஒழுங்கு நன்றாக இருக்கின்றது. நாடு அமைதியாக இருக்கிறது. அப்புறம் எதற்கு இந்தச் சட்டம்? தேவையேயில்லை. அமைதியாக நம் நாடு இருக்கட்டும். இந்தச் சட்டங்களே தேவையில்லை. (குறுக்கீடுகள்) இந்தச் சட்டம் தேவையில்லை. எப்பொழுதுமே என்னிடம் ஒரு பழக்கம். 'மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி' என்று பேசுகின்ற ஆள் கிடையாது. எப்போது பார்த்தாலும் யார் குற்றம செய்தாலும், குற்றம் என்று சொல்வோம். (குறுக்கீடு) இல்லை அண்ணே, சரியாகத்தான் சொல்கிறேன். 'மாமியார் உடைத்தால் மண் சட்டி'. ஏனென்றால், அது உடைந்துபோனால் மருமகள் கேட்க முடியாது. ஆனால், மருமகள் உடைத்தால், அது பொன்னால் செய்யப்பட்டது என்று சொல்வார்கள். அதற்காகத்தான் அப்படிச் சொல்வார்கள். அதனால், அந்த வாதத்திற்கு நான் போகமாட்டேன். இருந்தாலும் (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எதிர்க் கட்சிகள் மேலே பழி சுமத்தப்பட்டு, வழக்குகள் தொடுக்கப்படுகின்றன என்கின்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த முறை இதே மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். இன்றைக்கு, யார் தவறு செய்தாலும், அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும், சட்டத்தின்முன் நிறுத்தி, அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தருவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கத்தின் நோக்கம். ஆனால், அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள்மீது, 44 பொய் வழக்குகள் போட்டார்களே, அப்போது ஏதாவது மாண்புமிகு உறுப்பினர், வாய் திறந்து பேசியிருப்பாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, நான் ஒன்றும் அறியாதவன் அல்லன். நான் அறிந்தவன்தான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–லிருந்து கடந்த தி.மு.க. ஆட்சி, என்மீதும், என்னுடைய முன்னாள் அமைச்சர்கள்மீதும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்மீதும், என்னுடைய கட்சியினர்மீதும், போட்ட வழக்குகளை, ஜோடிக்கப்பட்ட, புனையப்பட்ட வழக்குகளை இன்னும் சந்தித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, ஏதோ நாங்கள் போடுகின்ற வழக்குகளுக்கு ஆதாரமே இல்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார். கடந்த தி.மு.க. ஆட்சியில் என்மீது போடப்பட்ட, ஜோடிக்கப்பட்ட வழக்குகளில் 12 வழக்குகளில், நீதிமன்றங்கள் என்னை விடுதலை செய்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர்கள்தான் ஆதாரமில்லாத, அடிப்படையில்லாத வழக்குகளை, பழி வாங்குவதற்காக என்மீது போட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. ஆட்சியில், அ.தி.மு.க.வின் தலைவராக இருக்கக்கூடிய முதலமைச்சர்மீதும், அவர்கள் அமைச்சர்கள்மீதும், பொய் வழக்குப் போட்டதாகச் சொன்னார்கள். அந்த வழக்குகள் எல்லாம் நீதிமன்றத்தில் பதிவு செய்தபோது, prima facie இருக்கிறது என்று நீதிமன்றம் சொன்னதற்குப் பிறகுதான் அந்த வழக்குகள் போடப்பட்டனவே தவிர, பொய் வழக்குப் போடப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வீராசாமி, பழனிசாமி அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, prima facie பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசக் கூடாது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், முன்னாள் தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன் அவர்கள், ஒரு கூலிப் படையால் தாக்கப்பட்டபோது, அவர் சற்றும் கூசாமல் பகிரங்கமாக என்மீதே பழி போட்டார். திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், அன்றையதினம், நானே, அந்தக் கூலிப் படையை அனுப்பி, திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்களைத் தாக்கச் செய்துவிட்டு, பின்னர்



நாடகம் ஆடி, அவர் இல்லத்திற்குச் சென்று, நான் நலம் விசாரித்தேன் என்றெல்லாம் பேசினார். அதற்கு வழக்கும் தொடரப்பட்டது, நீதிமன்றத்தில்.

அதுமட்டுமல்ல. 1998 ஆம் ஆண்டில், கோவையில் தீவிரவாதிகளால், பயங்கரவாதிகளால், தொடர் குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்டபோது, அந்தத் தீவிரவாதிகளுக்கு, குண்டுகள் வாங்கப் பணம் கொடுத்ததே நான்தான் என்று நா கூசாமல் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசியிருக்கிறார். அதற்கும் வழக்கு இருக்கிறது, சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே prima facie பற்றியெல்லாம் அவர் பேசக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. சொல்லட்டும். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. சொல்லட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் பழனிசாமி அவர்கள், (குறுக்கீடு) நான் எதையோ சொல்கிறேன். என்ன? (குறுக்கீடு) இல்லை, இல்லை. பழனிசாமி அவர்கள்மீதுகூட, சென்ற 1991–96–ல் (குறுக்கீடு) எனக்கு மைக் வந்திருக்கிறது. என்ன பேசுகிறீர்கள்? மைக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) அது அல்ல. இது வேறு பிரச்சினை. இது வேறு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்துக்கு, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லி இருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை இல்லை. இதற்குச் சொல்லவில்லை. பழனிசாமிக்குத்தான் சொல்கிறேன். பழனிசாமி அவர்கள் மீதேகூட, காவல் துறை 1991–96 ஆம் காலகட்டத்தில் அவருடைய வீட்டிற்கே சென்று, சாராய வழக்குப் போட்டதை மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்துக்கு நான் பதில் சொன்னேன். அவருக்குப் பேசத் தெரியும்.

அவருக்காக திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், ஏன் எழுந்து அவருடைய நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்மீது வழக்கு போட்டிருப்பதைப்பற்றி இங்கே சொன்னார். அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன. அதை நான் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நான் சொல்ல வந்தது, எங்கள்மீது போடப்படுகின்ற வழக்குகளைப்பற்றி நாங்கள் கவலைப்படவே இல்லை. (குறுக்கீடு) எந்த நீதிமன்றங்களாக இருந்தாலும் நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் பொய் வழக்குகள் என்று சொன்னதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்களும் எங்களைப்போல நீதிமன்றத்தில் அந்த வழக்குகளைச் சந்திக்கட்டும்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். திரு. பழனிசாமி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. ஜி. பழனிசாமி:** நான் முடித்துவிடுகிறேன். தலைவர், கொஞ்சம் அனுமதி கொடுங்கள். நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, கொஞ்சம் உட்காருங்கள். நீங்கள் அவர் நேரத்தை எடுக்காதீர்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் மீது வழக்கு போட்டதையோ, மற்றத் தலைவர்கள் மீது போட்டதையோ நான் மறந்தவன் அல்லன். மறக்கப் போவதும் இல்லை. எனக்குத் தெரிந்தது எல்லாம், பார்த்தால் 10 ஆண்டுக் கால survey–க்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே வந்திருக்கின்றன. 10 ஆண்டுக் காலம், ஓராண்டு அல்ல. 10 ஆண்டுக் கால ஆட்சியிலே என்ன நடந்திருக்கிறது, தமிழ்நாட்டிலே, காவல் துறையால்? கொலை, கொள்ளைகள், கற்பழிப்பு, திருடு, எல்லாமே வரிசைப்படுத்தி நம்பர் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலுக்குள்ளே போய், நான் நேரத்தை எடுத்துக்கொள்ள



விரும்பவில்லை. அவ்வளவும் போட்டிருக்கிறார்கள். எனக்குப் புரிகிறது, அது என்ன என்று? 10 ஆண்டுக் கால survey, ஏன் காவல் துறையினுடைய மானியத்திலே வருகிறது என்று எனக்குப் புரிகிறது. சென்ற ஆட்சியிலே என்ன சம்பவம் நடந்திருக்கிறது, இந்த ஆட்சியிலே என்ன நடக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால், ஒன்றை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதே காவல் துறையினர், ஏதோ 2 ஆண்டுகளுக்கு முன்னால், தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டவர்கள் அல்லர். குறைந்தபட்சம் 40 ஆண்டுக் காலம் service பெற்றிருக்கிற காவல் துறையினர்தான். வேண்டுமென்றால் ஒரு மாதத்திற்குள்ளோ, 2 மாதத்திற்குள்ளோ சீருடைப் பணியாளர்கள் பலரைத் தேர்வு செய்திருக்கலாம். ஆனால், இதே காவல் துறைதான் அந்த 5 ஆண்டுக் காலமும் இருந்திருக்கிறது. அதே காவல் துறைதானே, இந்த 5 ஆண்டுக் காலமும் இருக்கிறது? இந்தச் சட்டம்–ஒழுங்கு நிலைமையை ஏன் அந்தநேரத்தில் கடைபிடிக்க, காவல் துறை தவறி இருக்கிறது? என்ன காரணம்? (கூச்சல்) காவல் துறை என்று சொன்னால், காவல் துறை இன்று, அது அரசைச் சார்ந்து செயல்படக்கூடிய நிலைமை இதிலேயே தென்படுகிறது என்ற ஆதாரம் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்வது ஏதோ...

**மாண்புமிகு பேரவைர் தலைவர்:** பழனிசாமி, இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள். இன்னொருவர் பேச வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்வது என்ன என்று சொன்னால் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். காவல் துறை என்பது யாரையும் சார்ந்து இருக்கக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் அவர் செயல்படுத்த வேண்டும். இன்றைக்கு குற்றம் குறைந்திருக்கிறது. மதக் கலவரத்தில் உயிரிழப்பு இல்லை. வரவேற்கிறோம். நல்ல விஷயங்கள். நாடு அமைதியாக இருக்கிறது. சாதிச் சண்டை இல்லை. யார் இப்போது சாதிச் சண்டையை, மதச் சண்டையை உருவாக்குகிறார்கள் என்றால், இந்தப் பிள்ளையாரை உடைக்கிறார்கள் பாருங்கள், ஆத்திரப்பட்டு உடைக்கிறார்கள் பாருங்கள், அவர்களாலே வந்தால்தான் மதச் சண்டை; வேறு யாராலும் வரப் போவதில்லை. அவர்கள் ஏதாவது கிளப்பி விட்டுவிட்டுப் போய் விடுவார்கள், ஊரிலே இரண்டு பேர் இருந்துகொண்டு..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, அடுத்து பேசப் போகிறீர்கள் நீங்கள். அடுத்து பேசும்போது சொல்லுங்கள்.

226638

**திரு. ஜி. பழனிசாமி:** அதை மீறி ஒன்றும் வரப்போவதில்லை. நாட்டிலே மதச் சண்டையே வராது. இன்றைக்கு வராமல் பாதுகாப்பதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் மதக் கலவரங்கள் இல்லை, சாதிக் கலவரங்கள் இல்லை என்கிறார். ஆகவே, சட்டம்-ஒழுங்கு மிக நன்றாகப் பராமரிக்கப்படுகிறது என்று அவர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** அதை ஒப்புக்கொண்டுதான் பேசுகிறேன். ஆகையாலேதான் அது நிலைநாட்டப்பட்டிருக்கிறது. எனக்கு இருக்கிற ஒரே விளக்கம் என்பது, இதே காவல் துறை, இதே ஆயுதங்கள், அதனுடைய பலங்கள் எள்ளளவும் குறைந்ததில்லை. அன்றைக்கு ஏன் இந்தக் காவல் துறை செயல்படாமல் போனது என்கிற கேள்விதான் இன்றைக்கு இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு என்றால் என்றைக்கு? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள் 10 ஆண்டுக் கால survey-ஐ சொல்லி இருக்கிற காரணத்தால்தான் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகையால் (குறுக்கீடு) இது என்ன? என்றைக்காவது இருக்கட்டுமே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று நம்முடைய காவல் துறைக்கு இருக்கின்ற சில அதிகாரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இரண்டு மணித் துளிகளில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அந்தப் பிரிவிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் உங்களிடம் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குக் காவல் துறைக்கு வானளாவிய அதிகாரங்களை நாம் வழங்கி இருக்கும்போது, இங்கு நம்பிக்கை வைத்து...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு வானளாவிய அதிகாரங்கள் இருக்கின்றன என்று சொல்லுவதே தவறு. எல்லா தரப்பிலிருந்தும் அவர்கள் நீதிமன்றங்களால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, காவல் துறையினர் பயந்து, பயந்துதான் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு உண்மையில் எந்தச் சுதந்திரமும் இல்லை. அந்த அளவுக்கு நீதிமன்றங்கள் அவர்களுடைய நடவடிக்கைகளில் தலையிடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில அப்பாவி மக்கள் சார்பாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இதுதான். தமிழ்நாட்டிலே சில பகுதிகளிலே மக்கள் கூட்டம் கூடுகின்றபோது, அதைக் கலைக்கின்றபோது தடியடி நடத்துவதை நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேபோன்று துப்பாக்கிச் சூடு நடத்துவதை நிறுத்த வேண்டும். அதேபோன்று ஒரு குற்றவாளியைத் தேடி கிராமங்களுக்குச் செல்கிறபோது, நகரங்களுக்குச் செல்கிறபோது சம்பந்தப்பட்ட...(குறுக்கீடு)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள் திரு. பழனிசாமி. திரு. ரங்கநாதன், பின் வரிசையிலே இருந்துகொண்டு தொடர்ந்து குரல் எழுப்பி running commentary கொடுத்துக்கொண்டு பேசிக்கொண்டே இருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கவேண்டியது இருக்கும் என்பதை எச்சரிக்கிறேன். எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்திற்கும் சேர்த்துதான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். பழனிசாமி பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை சில குற்றவாளிகளைத் தேடிப் போவதில் தவறு கிடையாது. அவர்கள் தேடிப் போய், அங்கு அந்தக் குற்றவாளி இல்லையென்று, அந்தக் காவல் துறையினர் திரும்பி வந்துவிட்டால் பரவாயில்லை. அநேகமாக என்ன செய்கிறார்கள் என்றால், அவர் இல்லையென்று சொன்னால், அவருடைய குழந்தைகள் அல்லது மனைவியை அழைத்து

வருகிற போக்கு, காவல் துறையிலே சில இடங்களிலே இருக்கிறது. அவரைக் கொண்டுவந்து விட்டுவிட்டு, இவர்களைத் திரும்ப அழைத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லக்கூடிய நிலையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆகையினால், அப்படிப்பட்ட நிலைகளிலேயிருந்து அவர்களை மாற்றுவதற்கான விதிகளை நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, சிலர் கூட்டமாக இருக்கிறபோது, காவல் துறையினர் அவர்களைக் கலைப்பதற்கு முயற்சி எடுப்பது, இல்லையென்று சொன்னால், கூட்டமாக இருக்கிற குற்றவாளிகள், மற்றவர்கள் எல்லோரையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக வேனில் ஏற்றி, வழக்குளைப் போட்டு மற்றவர்களையும் கொண்டுபோய் சிறையில் அடைத்து வழக்குகளில் தொந்தரவுபடுத்துகிற போக்கு இருக்கிறது. உதாரணத்திற்கு,—ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள் என்று சொல்வீர்கள்—இந்த நாடாளுமன்றத் தேர்தல் நடக்கின்ற நேரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** வில்லாவதானம் என்ற கிராமத்திலே அநேகமாக இதேபோன்றுதான் இறால் bund-க்காக மக்கள் எதிர்த்து நின்றார்கள். மாணவர்கள், வயது முதிர்ந்தவர்கள் எல்லாரையும் சேர்த்து வழக்கில் போட்டு 3 மாதக் காலம், நான்கு, ஐந்து மாணவர்கள் தங்களுடைய தேர்வே எழுத முடியாமல் வீணாகப் போய் விட்டார்கள். இப்படிப்பட்ட போக்குகளில் இருந்து, காவல் துறையை நீங்கள் மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, இந்தக் கள்ளச் சாராய வழக்குகளை எல்லாம் பார்த்தீர்கள் என்றால், இப்போது நிறையக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், கஞ்சாவை மட்டும் பார்த்தீர்கள் என்றால், பெருகியிருக்கிறது. யார் பேரில் வழக்கு போட்டாலும், இன்று காவல் துறை, கஞ்சாவை வைத்துதான் case போடுகிறது. அதுவும் ஒரு கிலோ, இரண்டு கிலோ. யாரிடம் வாங்கிக்கொண்டு வருகிறார்களோ, காவல் துறை அவனைப் பிடிப்பதில்லை. ஆனால், அதை வைத்து case போடுவதற்கு மட்டும் ஆட்களைத் தேர்வு செய்கிறார்கள். இந்தப் போக்கிலிருந்து அதை மாற்றவேண்டும். இவ்வாறு, காவல் துறையினர் பல நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, கஞ்சாவை வைத்துப் போடுகிற case-களை, முதலில்



தமிழ்நாட்டில் தடுக்க வேண்டும். ஏனென்றால், யாரும் ஜெயிலிலிருந்து வரவே முடியவில்லை. இரண்டு கிராம், மூன்று கிராம் இருந்தால் வெளியே வரலாம். ஒரு கிலோ என்றால் அவன் ஒரு வருடத்திற்கு வரவே முடியாது. (மணியடிக்கப்பெற்றது) அதுவும் அப்பாவிகள் சிலபேர் பாதிக்கப்படுகிறார்கள். சாராய வியாபாரிகளே திருந்தியிருக்கிறார்கள். ஒருவர் இப்போது மலேசியாவிற்குப் போய்விட்டு வந்தார். வந்து ஒரு வாரம்கூட ஆகவில்லை. அவர்மீது கஞ்சாவை வைத்து, ஒரு case போட்டுவிட்டார்கள், திருத்துறைப்பூண்டியில். அதற்குப் பிறகு எஸ்.பி.-யிடம் சொன்னேன், என்ன ஐயா, இந்தமாதிரி பண்ணுகிறீர்களே, இப்போதுதானே மலேசியா போய்விட்டு வந்தான்; அவன் தொழில் செய்தான்; வறுமையால் தொழில் செய்தான்; இன்றைக்கு வேறு தொழிலுக்கு மாறி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். அடுத்து திரு. எச். ராஜா. (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு செய்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்பார்ப்பதைப் போன்று, ஆளுங் கட்சி மட்டும் காவல் துறையைப் பாராட்டினால், கண்ணாடியை வைத்து முகம் பார்ப்பது போன்றது; எதிர்க் கட்சிகள் பாராட்டினால், அதுதான் சிறந்த காவல் துறை. அதுமாதிரி நீங்கள் நடக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையினுடைய பணி முக்கியமான பணி. காவல் துறைக்காகச் செலவு செய்கின்ற தொகை அதிகமென்று எப்பொழுதுமே நான் சொல்லமாட்டேன். ஏனென்றால், சட்டம்-ஒழுங்கு, சீராக இருந்தால்தான், நாட்டிலே அமைதி இருந்தால்தான், பொருளாதார முன்னேற்றம்கூட இருக்க முடியும். ஆனால், எதிர்க் கட்சி என்கின்ற முறையிலே, குறைபாடுகளையும் விவாதத்திலே எடுத்து வைக்கவேண்டிய பொறுப்பு எதிர்க் கட்சிக்கு இருக்கிறது. குறைபாடுகளை எடுத்து வைப்பது என்பதைக் குற்றம் சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதை மாற்றிக்கொள்வதற்காக என்று எடுத்துக்கொள்ளவேண்டி இருக்கும்.

எனவே, மனம் திறந்த விவாதம் இருக்கவேண்டியது அவசியம் என்பது என்னுடைய கருத்து.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, முதல் para–விலேயே "காவல் துறையை நவீனமயமான, திறமையான மற்றும் நேர்மையானதொரு அமைப்பாக்கிட, இந்த அரசு உறுதி பூண்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. இது மிகவும் அவசியமானது என்று எனக்குப் புரிகிறது. ஆனால் அந்த இலக்கை நோக்கிச் செல்லுகின்ற பாதையிலே, முழுமையாகச் செல்கிறோமா என்று, கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருப்பதை இங்குப் பார்க்கும்பொழுது, காவல் துறையை நவீனமயமாக்குவதற்காக 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டுகளில் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியதோ, அதற்குச் சமமாக மாநில அரசு நிதி ஒதுக்கியது. ஆனால், கடந்த 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு ஒதுக்கியிருக்கின்ற நிதியிலே 60 சதவிகிதம்கூட, மாநில அரசால் ஒதுக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக, சென்ற ஆட்சி இருந்தபோது. மத்திய அரசு 59 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கியிருக்கிறது ஆண்டிற்கு. ஆனால், இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் 39 கோடி ஒதுக்கியிருக்கிறது.. மாநில அரசு, வெறும் 29 கோடிதான் ஒதுக்கியிருக்கிறது. ஆகவே, நவீனப்படுத்தப்பட வேண்டுமென்கின்ற முயற்சியிலே, சென்ற ஆண்டுகளில், 2001, 2002, 2003 ஆம் ஆண்டுகளில் இருந்த அளவிற்கான பங்களிப்பு, மாநில அரசாங்கத்திடமிருந்து இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11–15*

அதுபோல, காவல் துறையில் இருக்கின்ற காவலர்களுக்கான குடியிருப்புகள் இதுவரை 41,749 காவலர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Police Modernisation திட்டத்திற்காக, 2002–2003 வரை மத்திய அரசின் பங்கும், மாநில அரசின் பங்கும் சம அளவில் இருந்தன 50:50. ஆனால், 2003–2004–க்குப் பிறகு, மத்திய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40 சதவீதமும் அளித்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் குறைந்திருக்கிறது.



**திரு. எச். ராஜா:** மீதமுள்ள 53,930 காவலர்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்கப்படவில்லை. எனவே, மாநில அரசு அதற்கான முயற்சியிலே அதிக நிதி ஒதுக்கி, காவலர்களுக்கு வீடுகள் ஒதுக்குவதிலே முன்னுரிமை தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், காவல் துறையிலே பணியாற்றுபவர்கள் 24 மணி நேரமும் பணியாற்றக்கூடியவர்கள். வீட்டிலே பிரச்சினையில்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், அது இல்லையென்று சொன்னால், பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான். அங்கு இருக்கின்ற பிரச்சினை இங்கே பிரதிபலிக்கும். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுப்பதற்கு, எவ்வளவு நிதி ஒதுக்கினாலும், அது அதிகமென பாரதிய ஜனதா கட்சி கருதவில்லை. ஆனால், இன்றையதினம் காவல் துறையிலே பல குறைபாடுகளும் இருக்கின்றன. காவல் துறையினுடைய குறைபாடுகளைப் பற்றிகூட,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என அய்யன் திருவள்ளுவர் சொன்னதைப்போல, அதனுடைய காரணங்களைப் பார்த்து, அதை நாம் ஆராய வேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஒருமுறை 'நானி பால்கிவாலா' அவர்கள் சொன்னார்கள்; அரசியல் சட்டத்தினுடைய மறு ஆய்வு பற்றி பேசும்பொழுது, 'அரசியல் சட்டம் தோற்றுப் போகவில்லை'; 'It is not that the Constitution that has failed us, but those who have handled it, had failed the Constitution' என்று சொன்னார். ஆகவே, காவல்துறை தவறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம்கூட பொறுப்பாக இருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. கடந்த 4 ஆண்டுகளாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தால், நாம் காவல் துறையினுடைய ஒட்டுமொத்தமான ஒரு assessment செய்வதற்கான சரியான நேரம் இது என்று நான் கருதுகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு சில factual errors இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதோ casual–ஆக தயாரிக்கப்பட்டுள்ளதோ என்கிற எண்ணத்தை அது ஏற்படுத்துகிறது. ஏனென்றால், கடந்த பத்து ஆண்டுகளிலே, மதக் கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பக்கம் 10–லே தரப்பட்டிருக்கிறது. அதிலே, 1998–லே மதக் கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 1998 பிப்ரவரி 14 ஆம் தேதி, கோவையில் மாத்திரம் 60 பேர் கொல்லப்பட்டார்கள். அதேபோல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-ல் கோவையில் கொல்லப்பட்டவர்கள், தொடர் குண்டு வெடிப்புகளால் கொல்லப்பட்டவர்கள். அது மதக் கலவரம் என்ற தலைப்பின்கீழ் வராது.

**திரு. எச். ராஜா:** அதேபோல, பக்கம் 15-ல் காவல் துறையின் பாதுகாப்பின்கீழ், Police Custody-யில் ஏற்பட்ட மரணங்கள் என்ற தலைப்பில் இந்த ஆண்டு 28-2-2005 வரை, இவ்வகை மரணம் ஏதும் நிகழவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், முன்னாள் அமைச்சர் திரு. ஆலடி அருணா கொலை செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக, கைது செய்யப்பட்ட மதுரை ஆட்டோ பாஸ்கர், 24-1-2005 அன்று Police Custody-யிலே இறந்திருக்கிறார். ஆகவே, Police Custody-ல் அவர் இறந்தது மாநிலத்திற்கே தெரியும்; முழுமையாக மக்கள் அறிவார்கள். ஆகவே, இந்த மாதிரியான ஒரு error இருந்தால், that would affect the credibility of the whole policy statement.

அதேபோல, "தமிழக அரசின் தொய்வில்லா முயற்சிகளின் காரணமாக, சட்டம்-ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு, மாநிலத்தில் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு sweeping remark என்று...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள், death in Police custody என்பதைப் பற்றியதாகும். ஆனால், திரு. ஆலடி அருணா கொலை வழக்கில் accused ஒருவர் மரணம் அடைந்ததைப் பற்றி இங்கே மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டார். *திரு. ஆட்டோ பாஸ்கர் என்பவர், காவல் துறையால் துன்புறுத்தப்பட்டு இறந்தார் என்னும் பொருள்படக் குறிப்பிட்டார். இது முற்றிலும் தவறு. ஆட்டோ பாஸ்கர் என்பவர் பிடிபட்டு, காவல் துறையினால் கொண்டு வரப்படும்போது, அவர் ஏதோ விஷம் அருந்தி இறந்துவிட்டார். அவர் காவல் துறையினால் துன்புறுத்தப்படவில்லை. எனவேதான், இது காவல் பாதுகாப்பில் ஏற்பட்ட இறப்பு அல்ல என்று கணக்கிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-20*

**திரு. எச். ராஜா:** தமிழகத்திலே கடந்த சில நாட்களுக்கு முன்பு, ஆளும் கட்சியினுடைய முன்னாள் அமைச்சர் ஒருவர் அவர் வீட்டிலேயே கொல்லப்பட்டார். அதேபோல, ஆலடி அருணா கொலை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பட்டது.



செய்யப்பட்டு இருக்கிறார். இதுபோல பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து இருக்கின்றன. காவல் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மிகவும் கடுமையான பாதுகாப்புடன்கூடிய பகுதியாக இருக்கின்ற சிறைச்சாலையிலே, சட்டம்-ஒழுங்கு அமைதி சீர்குலைந்து இருப்பதை நேற்றையதினம் பத்திரிகைகளிலே பார்க்க முடிந்தது. கோவை மத்திய சிறைச்சாலையிலே, Jail Superintendent-ஒரு immoral activity-க்காக suspend செய்யப்பட்டு இருக்கிறார். அங்கு நேற்றையதினம் கோவை சிறையிலே கைதிகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதிலே blade-ஐயும், உருட்டுக்கட்டையையும் வைத்து தாக்கி இருக்கிறார்கள். கைதியின் கழுத்தில்—செந்தில் குமார் என்பவருடைய கழுத்தில்—மொய்தீன் என்பவருடைய ஆதரவாளர்கள் blade-ஐ வைத்து அறுத்து இருக்கிறார்கள். பாலமுருகன் என்பவர் உருட்டுக் கட்டையால் அடிக்கப்பட்டு இருக்கிறார். அதேபோல, கோவில்களிலே நகைகள், சிலைகள் திருட்டு, சமீபகாலமாகத் தொடர்ந்து நடக்கின்றன. காஞ்சி மாவட்டத்திலே, உத்திரமேரூரிலே முருகன் கோவிலினுடைய நகைகள் மூன்று வாரங்களுக்கு முன்பாக கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், அங்கு இருக்கின்ற காவல் துறை Superintendent-க்குப் பல்வேறு வேலைகள் என்ன இருக்கின்றனவோ தெரியவில்லை, இதுபற்றி எந்தவிதமான...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது சொந்தக் காரணங்களுக்காக மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் ஒரு காவல் துறை மாவட்ட கண்காணிப்பாளர்மீது, இப்படிப் பழிபோட்டு, கிண்டல் அடித்து, நையாண்டி செய்து பேசுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறையில் நடைபெற்ற கலவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அவ்வப்போது சிறைச்சாலைகளில் கலவரங்கள் ஏற்படத்தான் செய்யும். இந்தக் கலவரம் உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கோயில் நகைகள் திருடப்பட்டதாகச் சொன்னார். அவ்வப்போது இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவது உண்டு. இப்படித் திருட்டுப்போன எத்தனையோ நகைகளைக் காவல் துறையினர் கண்டுபிடித்து மீட்டு இருக்கிறார்கள். ஆகவே, பொத்தாம் பொதுவாக இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்வது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு வேறு என்ன வேலையோ தெரியவில்லை என்றால், அவருடைய கடமையைத்தான் அவர் செய்து கொண்டு இருக்கிறார். காவல் துறைப் பணியைத் தவிர, வேறு எந்தப் பணியும் அவருக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 மார்ச் 15

**திரு. எச். ராஜா:** முசிறிக்கு அருகிலே திருஈங்கோ மலையிலே மரகதச் சிலை திருடுப்போய் இருக்கிறது. இன்றுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதேபோல அரசே, கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளதாக ஏற்கெனவே உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல, கற்பழிப்பு வழக்குகள் ஓராண்டிலே 71 சம்பவங்கள் அதிகரித்து இருக்கின்றன; ஆள் கடத்தல் வழக்குகள், ஓராண்டிலே 51 சம்பவங்கள் அதிகரித்து இருக்கின்றன; வரதட்சனைக் கொடுமை வழக்குகள் கூடி இருக்கின்றன; பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கூடி இருக்கின்றன. இந்த விஷயத்திலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த விளக்கத்தை நான் இந்த அவையில் தந்தேன். பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரித்துக்கொண்டு இருக்கின்றன என்று கூறுவது தவறாகும். முன்பெல்லாம் பெண்களுக்கு எதிரான பல கொடுமைகள், குற்றங்கள் நிகழ்ந்தாலும், அவர்கள் தைரியமாக முன்வந்து, காவல் நிலையங்களுக்குச் சென்று, புகார்கள் தர தயங்கினார்கள், அச்சப்பட்டார்கள். ஆனால், அந்த நிலை இன்று மாற்றப்பட்டு, பெண்கள் தைரியமாக தமிழ்நாட்டில் எந்தக் காவல் நிலையத்திற்கும் சென்று புகார் செய்யலாம் என்ற நிலை, ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே, இன்றையதினம், அதிகமான பெண்கள் முன்வந்து புகார் செய்கிறார்கள். காவல் நிலையங்களுக்குச் சென்று புகார்களைப் பதிவு செய்துகொள்கிறார்கள். ஆகவே, ஓர் ஆரோக்கியமான வளர்ச்சியைத்தான் இது காட்டுகிறதே தவிர, குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டன என்று எடுத்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, ஐந்து மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா :** இல்லை, நேற்றையதினம்....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் முழுமையான அளவுக்கு தடுத்து நிறுத்தப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்பெறவேண்டும் என்கின்ற முனைப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள், பல்வேறு நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். குற்றங்கள் நடந்தால், அவற்றை விசாரித்து, உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்கின்ற அடிப்படையிலே, எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டிலே, முதல் கட்டமாக, பெண்களுக்காக ஆறு நீதிமன்றங்களை



2005 மார்ச் 15] [திரு. டி. ஜெயக்குமார்]

அமைத்து உத்தரவிட்டு இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, நீதிமன்றங்களிலே, குற்றங்கள் விரைவாக விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டு நீதிமன்றங்கள் கடலூரிலும், அதேபோல பெரம்பலூரிலும், மகளிர்க்காக மட்டுமே அமைப்பதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, ஒரு விண்ணப்பம்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் கோவிலில் நடைபெற்றதைப் பற்றி இங்கு சொன்னார்கள். மேற்படி களவு குறித்து உத்திரமேரூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, குற்ற எண் 151/2005, நாள் 5–3–2005 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையினர், மோப்ப நாய், கை ரேகை நிபுணர்கள் முதலிய வழிகள்மூலம் புலனாய்வு மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை, விண்ணப்பம், விஞ்ஞாபனம் எதுவாக இருந்தாலும், நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சொன்ன பிறகு, என் பதில் உரையிலே சொல்கிறேன் என்று சொன்னார்கள். இடையிடையே மறிக்காமல், நாங்கள் பேசிய பிறகு, இறுதியிலே பதில் சொல்லும்போது நாங்கள் அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

நேற்றையதினம், இரண்டு பெண் உறுப்பினர்கள் பெண் காவல் நிலையத்தில் நடப்பதைப் பற்றிப் பேசினார்கள். அது, பல ஊர்களிலும் நடக்கின்ற விஷயம்தான். ஏனென்றால், பெண் காவல் நிலையத்திற்குச் சென்று—மகளிர் காவல் நிலையத்தில்—நாம் புகார் கொடுக்கும்போது, 'எங்களிடம் குற்றவாளிகளைப் போய் அழைத்து வருவதற்கு வாகனம் கிடையாது; இது எங்கள் வேலை இல்லை; நாங்கள் செய்யமாட்டோம்' என்று சொல்லி, பல வழக்குகள் பெண் காவல் துறை அலுவலர்களால் கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்பது உண்மை. ஆகவே இதுவரையில் எவ்வளவு complaints கொடுக்கப்பட்டிருக்கின்றன; அவற்றில் எவ்வளவு actions எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அரசாங்கமே, பெண் காவல்

நிலையங்களில் இருந்து ஓர் அறிக்கை பெற்று, அதைச் சபைக்குக் கொடுக்குமானால், அது நல்லது என்று நான் நினைக்கிறேன். இன்றைக்குக் காலையிலேகூட வேப்பேரியிலே ஒரு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். விளக்கம் தர முன்வந்தால், சொல்லாதீர்கள் என்கிறார். ஆகவே, அவர் விவரம் வேண்டும் என்று கேட்டதால், சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து மகளிர் காவல் நிலையங்களால், 2002 முதல் 2004 வரை விசாரிக்கப்பட்ட வழக்குகள்: ஆண்டு 2002; பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை–1,538; விசாரணையில் உள்ளவை– 32; Pending trial– 463; தண்டனை வழங்கப்பட்டவை, Conviction வழங்கப்பட்டவை–356; Acquittal செய்யப்பட்டவை, Compromise செய்யப்பட்டவை–204; வேறு காரணங்களால் Acquittal செய்யப்பட்டவை–132; Action dropped, நடவடிக்கை கைவிடப்பட்டவை–210; Mistake of fact–106; Referred cases 35.

2003 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை–2,279. விசாரணையில் உள்ளவை–31; Pending trial–1,152; தண்டனை வழங்கப்பட்டவை 365; சமரசம் செய்யப்பட்டதால் விடுதலையானவை-168; வேறு காரணங்களால் விடுதலையானவை–116; Action dropped–282; Mistake of fact–135. Referred cases 30.

2004 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை–2,685. விசாரணையில் உள்ளவை–374; Pending trial–1,360; தண்டனை வழங்கப்பட்டவை–428; சமரசம் செய்யப்பட்டதால் விடுவிக்கப்பட்டவை–40; வேறு காரணங்களால் விடுவிக்கப்பட்டவை–57; Action dropped–241; Mistake of fact–112; Referred–73. ஆகவே, அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாடுகளை அவ்வப்போது ஆய்வு செய்து கொண்டுதான் இருக்கிறோம். இன்னும் விவரங்கள் வேண்டுமானாலும் நான் வைத்திருக்கிறேன். ஆனால், இதற்குமேல் மதிப்பிற்குரிய உறுப்பினரின் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** இல்லை, 5 மணித் துளிகள் என்று சொல்லியே நான் கேட்டேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எச். ராஜா:** நான் அதிகமாகப் பேசவேயில்லை. மொத்தமே 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் இதைப் பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** தயவுசெய்து 5 மணித் துளிகள் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு முக்கியமான விவரத்தை, மதிப்பிற்குரிய உறுப்பினரின் கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பெறப்பட்ட மனுக்கள், 2002–ல் 31,324. நடவடிக்கை எடுக்கப்பட்டவை 100 சதவிகிதம். 31,324 மனுக்கள்மீதும், நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 45,925. நடவடிக்கை எடுக்கப்பட்டவை, disposed 100 சதவிகிதம்—45,925. 2004 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 55,076. Disposal செய்யப்பட்ட, முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 50,721. நடவடிக்கை எடுக்கப்பட்டு pending–ஆக இருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை 4,355. ஆகவே அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், மிகவும் விரைந்து, முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு, காலையில் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு காவல் துறை அதிகாரி தவறு செய்தால், அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னார்கள். இங்கு, அரசாங்கமானது 21–5–2003 அன்று ஒரு காவல் துறை அதிகாரியின்மீது நடவடிக்கை எடுப்பதற்காக Section 197, sub–section 1 (b) மூலமாக அனுமதி வழங்கியது. அதேசமயத்திலே, 31–12–2003 அன்று டி.ஜி.பி. திரு. ஐ.கே. கோவிந்த் அவர்கள், "I wish to inform you that necessary action has already been taken on your petition and the matter is pending with the Government" என்று சொன்னார். ஆனால், இன்றுவரை அந்தக் காவல் துறை அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை

எடுக்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல; அவருடைய வழக்குகளைக் கவனிப்பதற்காக அரசாங்கமே மக்கள் வரிப் பணத்திலே இன்று வக்கீலை நியமித்திருக்கிறது என்று சொன்னால், தவறு செய்த ஒரு காவல் துறை அதிகாரிக்காக அரசாங்கம் எதற்காக வழக்குரைஞரை நியமிக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரியாகச் செய்வது என்பது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தவறான தகவல்களை மாண்புமிகு உறுப்பினர், இந்த அவையில் தெரிவிக்கக் கூடாது. ஒரு காவல் துறை அதிகாரி தவறு செய்தாரா இல்லையா என்பதை நிர்ணயிக்கக்கூடிய தகுதியும், அதிகாரமும் மாண்புமிகு உறுப்பினருக்கு இல்லை.

**திரு. எச். ராஜா:** அதாவது, அந்தக் குறிப்பிட்ட காவல் துறை அதிகாரி, காவல் துறையினருக்கு எதிராக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட காவல் துறை அதிகாரி என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே தவிர, யாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று புரியவில்லை.

**திரு. எச். ராஜா:** **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட ஒரு காவல் துறை அதிகாரியைப் பெயர் சொல்லி இப்படி இந்த அவையில் அவர்மீது குற்றம் சுமத்துவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை அதிகாரி பெயரைச் சொன்ன காரணத்தினாலே அது நீக்கப்படுகிறது. ராஜா உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணித் துளிகளிலே உரையை முடியுங்கள். வேறு ஏதாவது சொல்லி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு important matter, **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு, ஒரு காவல் துறை அதிகாரிமீது ஏதாவது கோபம் இருந்தால், வருத்தமிருந்தால், அவர்மீது குற்றஞ்சாட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றன.



வேண்டுமென்று விரும்பினால், அவர்மீது வழக்குத் தொடரட்டும். அவர் நீதிமன்றத்தில் சந்திப்பார், அங்கே வாதாடுங்கள். ஆனால், இந்த அவையிலே தனக்கு இருக்கின்ற உரிமையை, மாண்புமிகு உறுப்பினர் இப்படித் தவறாக பிரயோகப்படுத்தக் கூடாது. அந்தச் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி, இந்த அவைக்குள்ளே வந்து பதில் சொல்ல முடியாது. அப்படி விதிகளைத் தளர்த்தி, அந்தக் காவல் துறை அதிகாரியை இங்கே வர அனுமதித்து பதில் சொல்ல அனுமதித்தால், அப்போது இவர் சொல்கின்ற குற்றச்சாட்டுக்களையும் சொல்ல அனுமதிக்கலாம். அவர் இந்த அவைக்கு வரக்கூடாது, பதில் சொல்ல முடியாது என்றால் இவரும் குற்றச்சாட்டுக்களைச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரி பெயரைச் சொல்லி நீங்கள் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்ததைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் பெயரைச் சொல்லச் சொல்லி என்னைச் சொன்னார்கள். நான் முதலிலேயே சொல்ல விரும்பவில்லைதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரைப் பார்த்து கடலில் போய் குதியுங்கள் என்று நான் சொன்னால் நீங்கள் குதித்து விடுவீர்களா?

**திரு. எச். ராஜா:** அப்படியில்லை, என்னவென்றால் பத்திரிகையாளர்களை அழைத்து ஒரு காவல் துறை அதிகாரி, ஒரு Chartered Accountant அவருடைய விதிமுறைகளின்படி கட்டுரை எழுத முடியாது என்கிறார். I am a Chartered Accountant. விதிமுறை இங்கே இருக்கிறது. கட்டுரை எழுதுவதற்கு யாரிடமும் permission வாங்கத் தேவையில்லை. Chartered Accountant regulation 166 says members of Institute in practice ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் ** பாதிக்கப்பட்டதாகக் கருதினால் வழக்குத் தொடரலாம். அதை நீதிமன்றத்தில் சந்திக்கலாம். அங்கே வாதாடலாம். எதற்காக இந்த வழக்கைப்பற்றி இந்த அவையிலே பேச வேண்டும்?

**திரு. எச். ராஜா:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாமல், அடிப்படை இல்லாமல் இப்படிக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களைத் தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ராஜா, உங்கள் நேரம் முடிந்துவிட்டது, தயவுசெய்து அமருங்கள். திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவ்வளவுதான். திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா பேசியது, பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் துயர் துடைப்புத் துறை (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள். வீணாக சத்தம் போடாதீர்கள். உட்கார்ந்து தண்ணீர் குடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்)

*(பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*முற்பகல் 11–35*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் துயர் துடைப்புத் துறை ஆகியவற்றிலே என்னுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கு, என்னுடைய உள்ளபூர்வமான நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன். காவல் துறையினுடைய செயல்பாட்டின் மூலமாகத்தான் ஒரு நாட்டினுடைய அமைதி, சட்டம்–ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது. காவல் துறைதான் மிக முக்கியமான துறை என்பதை இந்த நாடு அறியும். அதன் காரணமாகத்தான் வள்ளுவர் குறிப்பிடும்போதுகூட,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்று சொல்வார். நாம் செய்கின்ற தொழிலிலே ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை உழுது பண்படுத்தி, உரமிட்டுப் பயிரை வளர்த்தாலும்கூட, அந்தப் பயிர் வளர்ந்து மணியாக நிற்கின்ற நேரத்தில் அதைக் காப்பதுதான் சிறப்பான ஒன்று என்று சொல்வார்கள். அதைச் சரியான முறையில் காக்கவில்லை என்று சொன்னால், நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அத்தனையும் வீணடிக்கப்பட்டுவிடும். அது திருடு போகுமேயானால், நம்முடைய உழைப்பினுடைய பலன் நமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்கின்ற காரணத்தினால்தான், அதனுடைய காப்பை நாம் பாதுகாக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதைச் செய்கின்ற துறை காவல் துறை. நமது உடைமைகளுக்கும், உயிருக்கும் பாதுகாப்புக் கொடுப்பது இந்தக் காவல் துறை.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஏனென்றால், இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், அந்தத் துறைக்கு நிதியை அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள்; வளர்ச்சிப் பணிகளுக்கெல்லாம் அதிகமாக ஒதுக்கவில்லை என்று குறைபட்டார்கள். ஆனால், எத்தனை வளர்ச்சிப் பணிகள் செய்தாலும்கூட, அதைக் காக்கின்ற நிலை இல்லை என்று சொன்னால், அந்த வளர்ச்சிப் பணிகள் எல்லாம் இல்லை என்கின்ற நிலை ஏற்பட்டுவிடும்.

உதாரணத்திற்கு, அமெரிக்க நாட்டிலே இருந்த பெரிய உலக வர்த்தக மையம், ஒரு நிமிடத்திலே இடித்துத் தள்ளப்பட்டது. அது எத்தனை ஆண்டுகள், எவ்வளவு சிரமங்களை மேற்கொண்டு, எவ்வளவு பொருள் செலவிலே கட்டப்பட்டிருந்தாலும் அது ஒரு வினாடியிலே அழிக்கப்பட்டது. அதற்குக் காரணம் சரியான காவல் இல்லை என்கின்ற நிலைதான். எனவே, நாம் அத்தனை வளர்ச்சிப் பணிகளுக்கும் அதிகப்படியாக நிதி ஒதுக்கி அவற்றைச் செய்தாலும்கூட அதைக் காக்கின்ற தன்மை இல்லை என்று சொன்னால், அத்தனையும் நமக்குப் பயன் இல்லாமல் ஆகிவிடும் என்கின்ற காரணத்தினால்தான், காவல் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும். அவர்கள் மனக் குறை இல்லாமல் செயல்படுவதன் மூலமாகத்தான், இந்த நாட்டினுடைய சட்டம்–ஒழுங்கு காப்பாற்றப்படும் என்கின்ற எண்ணத்தோடுதான் இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் காவல் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, காவலர்கள் முதல் மிகப் பெரிய அதிகாரிகள் வரை அத்தனை பேரையும் நேரிலே அழைத்து அவர்களுடைய

குறைகளைக் கேட்டறிந்தார்கள். அவர்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற முதலமைச்சர் ஒருவர் இருக்கிறார்கள் என்று சொன்னால், அது தமிழகத்தின் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்தான் என்பதிலே எந்தக் கருத்து மாறுபாடும் யாருக்கும் இருக்க முடியாது.

இங்கு குறிப்பிட்டவர்கள் எல்லாம், அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ஏதோ இந்த அரசின் பக்கமாகச் செயல்படுகிறார்கள்; அதற்காகச் சில சலுகைகள் வழங்கப்படுகின்றன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அரசிலே பணிபுரிகின்ற அதிகாரிகள், அந்தந்த அரசுக்குத் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்குக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் வேலையிலே சேருகின்ற நேரத்தில்கூட, நாங்கள் இந்த அரசுக்கு விசுவாசமாக இருப்போம், அரசு செய்கின்ற காரியங்களில் உள்ளசுத்தியோடும் அந்த அரசிடத்திலே விசுவாசத்தோடும் செய்கின்றோம் என்கின்ற நிலையிலேதான் அந்தப் பொறுப்புக்கு வருகிறார்கள். எனவே, அரசு அதிகாரிகளைப் பொறுத்த அளவிலே எந்த அரசு வந்தாலும், அந்த அரசுக்குக் கடமை உணர்வோடு செயலாற்றுவதுதான் அவர்களுடைய கடமை என்கின்ற முறையிலே, அவர்களை குறை சொல்வதோ, அவர்கள் செய்கின்ற காரியங்களை பழித்துச் சொல்வதோ, ஜனநாயக மரபு அல்ல. இதற்கு ஒரு எடுத்துககாட்டை இங்கே நான் சொல்ல விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்திலே, தமிழகத்தினுடைய காவல் துறைத் தலைவராக இருந்தவர் திரு. அருள், ஐ.ஜி. அவர்கள். அண்ணா அவர்கள், 1967—லே ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால், ஓரிரு மாதங்களுக்கு முன்னாலேயே அவர்களைக் கைது செய்தார்கள் ஒரு வழக்கிலே. அண்ணா அவர்களைக் கைது செய்கிறார்கள். அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே தேர்தல் வருகிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இந்த மாநிலத்திற்குப் பொறுப்பேற்கிறார். அவரைப் பார்ப்பதற்காக உயர் அதிகாரி என்கின்ற முறையிலே, அந்த ஐ.ஜி. திரு. அருள் அவர்கள், அண்ணாவிடத்திலே செல்கின்றபோது, அவரை அழைத்து வைத்து, உட்கார வைத்து மிகப் பக்குவமாக நீங்கள் சென்ற ஆட்சிக் காலத்திலே உங்களுடைய கடமையைச் சரியாகச் செய்தீர்கள். என்னைக் கைது செய்ததுகூட, அந்த அரசினுடைய நடவடிக்கை. அந்த அரசுக்கு நீங்கள் விசுவாசமாகச் செயல்பட்டிருக்கிறீர்கள். அதுபோல, நான் ஏற்றிருக்கின்ற அரசுக்கும் நீங்கள் விசுவாசமாகச் செயல்பட வேண்டுமென்று சொல்லி, அவரைத் தட்டிக் கொடுத்தார் என்பது வரலாறு. அப்படி அந்த அளவிற்கு ஜனநாயகத்திலே ஒரு பெருந்தன்மை கொண்ட அண்ணாவினுடைய ஆட்சிதான் இன்றைக்கு இங்கு நடந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எந்தவித மாறுபாடும் கிடையாது.



காவல் துறை, கடந்த 4 ஆண்டுகளாக இந்த ஆட்சியிலே பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறது. ஜாதி, மதக் கலவரங்கள் வேரோடு ஒழிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல 20 ஆண்டுக்காலம் நமது மாநிலத்தை மட்டுமல்ல; கர்நாடக மாநில மக்களையும் அச்சுறுத்திக் கொண்டிருந்த வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். அதுமட்டுமல்ல, பல்வேறு கொலை வழக்குகளிலே மிக முனைப்போடு செயல்பட்டு, இந்த வழக்குகளில் எல்லாம் உடனடியாக குற்றவாளிகளைக் கண்டறிந்திருக்கிறது. உதாரணத்திற்கு நமது சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சராக மாண்புமிகு சுதர்சனம் இருந்தவர்கள். அவரை ஆந்திராவிலேயிருந்து பார்வாரி கும்பல் என்கின்ற ஒரு கும்பல்—அது பல்வேறு, ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் பல குற்றங்களைச் செய்திருக்கின்ற அந்தக் கும்பலைக் கண்டுபிடிப்பதற்கு...

முற்பகல் 11—40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்களைக் கொலை செய்தவர்கள் ஆந்திராவில் இருந்து வந்த கொள்ளைக் கூட்டம் அல்ல. வட இந்தியாவில் இருந்து வந்த கொள்ளைக் கூட்டம்.

**திரு. லா. சந்தானம்:** நான் சொல்ல வந்தது அந்தக் கும்பல் ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலே பல கொள்ளைகளையும், கொலைகளையும் செய்திருக்கிறது. அப்படிப்பட்ட அந்தக் கூட்டத்தையே நமது காவல் துறை மிகச் சிறப்பாகக் கண்டறிந்திருக்கிறது. அந்த மாநிலங்களில் இருக்கின்ற காவல் துறைகள் எல்லாம் அவர்களைக் கண்டுபிடிக்காத நேரத்திலே நமது காவல் துறை அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனையை வாங்கிக் கொடுப்பதற்காக இப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் கொல்லப்பட்டது. அதையெல்லாம், உடனடியாக இந்தக் காவல் துறை கண்டறிந்திருக்கிறது.

அதுபோல, தேவராஜ் என்பவர் இங்கு, நமது விமான நிலையத்திலிருந்து 17–1/2 கிலோ தங்கம் கொண்டு வருகின்ற நிலையிலே அவரிடமிருந்து அந்தத் தங்கம் பறிக்கப்படுகிறது. உடனடியாக அன்றே நமது காவல் துறை கண்டுபிடித்து பப்பு என்கின்ற சித்தன் என்பவர் அந்தத் திருட்டைச் செய்திருக்கிறார் என்று உடனடியாக அவரைக் கண்டுபிடித்து, அந்தப் பொருட்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இது இந்தக் காவல் துறையினுடைய சரியான நடவடிக்கை.

அதுபோல, பாண்டி பஜாரிலே, Forex Bureau என்கின்ற நிறுவனத்திலே, 28–2–2005 அன்று பகலில் கொள்ளையடிக்கப்பட்ட 11–1/2 இலட்சம் ரூபாயை 36 மணி நேரத்திற்குள்ளாகக் கண்டுபிடித்துக் கொடுத்த பெருமை, இந்தக் காவல் துறையைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, கோவை மாவட்டத்திலே, ஒரு சிறுவன் கடத்தப்பட்டு, அந்தச் சிறுவனை மீட்க வேண்டுமென்று சொன்னால், 3 இலட்சம் ரூபாய் பிணையத் தொகை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில், 24 மணி நேரத்திலே அந்தச் சிறுவனை மீட்டு, பெருமை சேர்த்தது நமது சென்னைக் காவல் துறை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, சென்னை, வடபழனி காவல் நிலையத்திலே நடந்த கொலையை 44 நாட்களுக்குள்ளாக முடித்து, நீதிமன்றத்திலே அந்தக் குற்றவாளிகளுக்குத் தண்டனையும் பெற்றுக் கொடுத்தது தமிழகக் காவல் துறை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எண்ணற்ற செய்திகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்குச் சிறப்பாக தன்னுடைய பணிகளை மேற்கொண்டிருக்கின்ற இந்தக் காவல் துறைக்கு நாம் ஊக்கம் அளிக்கவேண்டும்; ஆக்கம் கொடுக்க வேண்டும்; அவர்கள் செய்கின்ற காரியங்களைத் தட்டிக் கொடுத்து அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதன் மூலமாகத்தான், அவர்கள் பணி நிறைவுறும் என்கின்ற நிலையிலே நான் இந்தக் காவல் துறையினுடைய பணியைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு நேற்றுகூட, இங்கு ஒரு சர்ச்சை எழுந்தது. இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு காவல் துறை அதிகாரியோடு பிரச்சினை ஏற்படுத்திக்கொண்ட விவகாரம் பற்றி இங்கே பேசப்பட்டது. அந்தக் காவல் துறை அதிகாரி அந்தத் தகராறு குறித்து, அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்து அவர் ஒன்றும் புகார் செய்யவில்லை என்கின்ற நிலையெல்லாம் இங்கே சொல்லப்பட்டது.



*முற்பகல் 11–45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழும்போது உடனுக்குடன், அந்த நாளே, அந்த நிமிடமே புகார் செய்ய வேண்டும் என்று அவசியமில்லை; பின்னர்கூட புகார் கொடுக்கலாம். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி, உடனடியாக புகார் கொடுப்பதற்குத் தயங்கியதற்குக் காரணங்கள் இருக்கலாம். அந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர், ஒரு முன்னாள் முதலமைச்சரின் மகன் தற்போது இந்த அவையின் சட்டமன்ற உறுப்பினர், செல்வாக்குப் படைத்தவர், மத்திய அரசிலேயும் அவர்கள் செல்வாக்குப் படைத்தவர்கள்.

முன்பு, தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், 2001 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டபோது, சம்பந்தப்பட்ட மூன்று காவல் துறை அதிகாரிகளைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், மத்தியிலே தி.மு.க.-வுக்கு இருக்கின்ற, மத்திய அரசிலே இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த மூன்று காவல் துறை அதிகாரிகளையும், இங்கிருந்து மாற்றம் செய்து, வட இந்தியாவில், எல்லைப் பகுதிகளுக்கு transfer செய்ய உத்தரவு போட்டார்கள். அது பழி வாங்குகின்ற நடவடிக்கை. அந்தக் காவல் துறை அதிகாரிகள், அதை எதிர்த்து வழக்குப் போட்டு, இன்னமும் அந்த வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது தனக்கு நிகழலாம் என்றுகூட சம்பந்தப்பட்ட இந்தக் காவல் துறை அதிகாரி அச்சப்பட்டிருக்கலாம். ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காவல் துறை அதிகாரிகளைத் தாக்குவது என்பது தி.மு.க.-வினருக்கு ஒன்றும் புதிதல்ல. முன்பு 2001 இல் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கைது செய்யப்பட்டபோது நடைபெற்ற சம்பவங்களை அனைவரும் தொலைக்காட்சியிலே பார்த்தார்கள். அப்போது திரு. முரசொலி மாறன் அவர்கள் அந்தக் கைது சம்பவத்தில் ஈடுபட்டிருந்த காவல் துறை அதிகாரி, முகமது அலி அவர்களை, முகத்திலே குத்தி, கண்ணிலே காயப்படுத்துவதை அனைவரும் பார்த்தார்கள். (குறுக்கீடு) அன்றையதினம் திரு. கருணாநிதி அவர்களை அரசினர் தோட்டத்தில் உள்ள காவல் துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே அவரை விசாரித்துக் கொண்டிருந்தபோது, மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு அவர்கள் தன்னுடைய பெரிய வாகனத்தை, ஜீப் போன்ற ஒரு காரைக் கொண்டு, அந்த வளாகத்தின் gate–கள்மீதும், கதவுகள்மீதும் மோதி, அங்கே காவலுக்கு இருந்த காவல் பணியாளர்களைக் கொல்லவே முயற்சி நடந்தது. அந்தக் காவல் துறையினர் சிதறி, அங்கும்

இங்கும், தப்பித்துக்கொள்வதற்காகப் பாய்ந்ததை அனைவரும் தொலைக்காட்சியிலே பார்த்தார்கள். அதுமட்டுமல்ல; நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், அன்றையதினம் அந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று காவல் துறை அதிகாரிகளைப் பழி வாங்க வேண்டும் என்பதற்காகவே, தி.மு.க., மத்திய அரசில் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த மூன்று அதிகாரிகளுக்கும் transfer order போட்டார்கள். ஆகவே, எப்போதெல்லாம் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்களோ, அவர்களைத் திட்டித் தீர்ப்பதும், அவர்களைத் தாக்குவதும், தி.மு.க.-வினருக்கு வாடிக்கைதான். அன்றையதினம் கைது செய்யப்பட்டபோது, திரு. கருணாநிதி அவர்கள் அமர வைக்கப்பட்ட வாகனத்தில், அன்றையதினம் மத்திய அமைச்சராக இருந்த திரு. முரசொலி மாறன் ஏறி உட்கார்ந்தார். காவல் துறையினர் எவ்வளவோ கேட்டுக்கொண்டும், அவர் அந்த வாகனத்தை விட்டு வெளியே வர மறுத்தார். ஆகவே, அந்த வாகனத்தைவிட்டு அவர் அப்புறப்படுத்தப்பட்டார். அப்போது காவல் துறை அதிகாரிகளை அவர் காலால் ஏட்டி உதைத்ததையும், கைகளால் அடித்ததையும் அனைவரும் தொலைக்காட்சியிலே பார்த்தோம். ஆகவே, எப்போதுமே இது தி.மு.க.-வினருக்கு வாடிக்கை என்பதைக் காட்டுகிறது. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, என்னைப் பொறுத்தவரை, என்னைச் சார்ந்தவர்களைப் பொறுத்தவரை, எங்கள்மீது முந்தைய ஆட்சி, ஜோடிக்கப்பட்ட வழக்குகளைப் போட்டு, எங்களை அவமானப்படுத்தினாலும், எந்தச் சூழ்நிலையிலும், நாங்கள் காவல் துறை அதிகாரிகளைத் திட்டித் தீர்த்தது இல்லை. அவர்களைத் தாக்கியதில்லை. எப்போதுமே கண்ணியத்தோடு நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையினரையும் மரியாதையோடு, கண்ணியத்தோடு நடத்தியிருக்கிறோம்.

முற்பகல் *11–50*

இன்னும் சொல்லப்போனால், கடந்த ஆட்சிக் காலத்தின்போது என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும், முன்னாள் அமைச்சர்களையும் பழிவாங்கிய பல காவல் துறை அதிகாரிகளுக்கு இன்றையதினம் இந்த ஆட்சியில் நல்ல பொறுப்புகளைத் தந்து, அவர்களுக்குப் பதக்கங்களையும் தந்து, விருதுகளையும் தந்து நான் கௌரவித்து இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு தி.மு.க. அரசால் புனையப்பட்ட வழக்குகளில், ஜோடிக்கப்பட்ட பொய் வழக்குகளில், எனக்கு எதிராகவும், என்னைச் சார்ந்தவர்களுக்கு எதிராகவும், சாட்சியம் சொன்ன பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குக்கூட நீதிமன்றத்திலேயே எனக்கு எதிராக சாட்சியம்



சொன்ன ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குக்கூட, இன்றைக்கு நான் மன்னிப்பு வழங்கி அவர்களுக்கு நல்ல பொறுப்புகளைக் கொடுத்து மரியாதையோடு நடத்திக்கொண்டிருக்கிறேன். ஆகவே, தி.மு.க.-வின் தலைவரும், தொண்டர்களும் எப்படி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தொண்டர்களும் எப்படி என்பதை இதிலிருந்தே பொதுமக்கள் புரிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏனென்றால், வரலாறுகளை மாற்றக் கூடாது. முரசொலி மாறன் மத்திய அமைச்சராக இருந்தவர். இருதய ஆபரேஷன் செய்து நோயாளியாக இருந்தவர். அவர் கலைஞரை கைது செய்கிறார்களே என்பதற்காக வீட்டுக்குப் போனார். அவரை அழைத்துக் கொண்டு போகும்போது காரிலே ஏறினார். **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை தாங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள், அதாவது தாக்கப்பட்டார் என்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லலாம். அதாவது தொடர்ச்சியாக ** என்று தாங்கள் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையினர் வழங்கிய தகவல்களை அவர்கள் தெரிவித்தார்கள். நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள் பிரச்சினை முடிந்தது. சந்தானம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. சந்தானம் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இருந்து இந்த விளக்கத்தைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அதைச் சொன்னேன். சில கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம் அவர்கள், கோரிக்கைகளை அப்புறம் எழுதிக் கொடுத்து விடலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. லா. சந்தானம்:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு ஆர்பாட்டத்தோடு கலைஞரைக் கைது செய்து, அதன்மூலமாக நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் விவரித்துச் சொன்னாரே, அப்படிக் கைது செய்து என்ன சாதித்தார்கள்? என்ன குற்றச்சாட்டைச் சொன்னார்கள்? Charge–sheet போட்டு இருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைபெற்ற நிகழ்ச்சியைச் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை. இல்லை. அப்படியென்றால், அதைத்தான் சொல்கிறோம். எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாமல் கலைஞரையும், கலைஞர் குடும்பத்தையும் பழி வாங்க வேண்டுமென்று (மணியடிக்கப்பெற்றது) எடுக்கப்பட்ட நடவடிக்கைதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம் அவர்கள் சொன்னதற்குரிய பதிலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கின் தன்மைக்குள் இப்போது போகவில்லை. கைது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது தி.மு.க. தலைவரும் அவரைச் சார்ந்தவர்களும் எப்படி நடந்து கொண்டார்கள், எப்படிக் காவல் துறையினரை அவமானப்படுத்தினார்கள், எப்படி அவர்களைத் திட்டித் தீர்த்தார்கள், எப்படி அவர்களைத் தாக்கினார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதேநேரத்தில், என்னையும் என்னைச் சார்ந்தவர்களையும் கைது செய்தபோது, காவல் துறையினரிடம் நாங்கள் எவ்வாறு கண்ணியத்துடன் நடந்து கொண்டோம் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அனைத்தும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. சந்தானம், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** என்ன காரணம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இப்படிப் பேசுவது முறையற்றது. திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியிலே, விக்கிரமங்கலத்திலே இருக்கிற காவல் நிலையம் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அனுமதிக்க முடியாது

**திரு. லா. சந்தானம்:** ஒரு வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் அனுமதிக்க முடியாது. தொடர்ந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால்...

**திரு. லா. சந்தானம்:** அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதியதாகக் கட்டடத்தைக் கட்டித் தரவேண்டும் என்றும், (குறுக்கீடுகள்) அதற்குரிய இடங்களும் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும். (குறுக்கீடுகள்) அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும். (குறுக்கீடுகள்) எச்சரிக்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியவை அனைத்துமே முறைகேடானவை. தவறானவை. (குறுக்கீடுகள்) தாங்கள் பேசிய, பயன்படுத்திய வார்த்தைகள் முறைகேடானவை. ஆகவே, அனைத்தும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், நான் அவையை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும். (குறுக்கீடுகள்) துரைமுருகன்

அவர்களே, புகழேந்தி அவர்களே, பரிதி இளம்வழுதி அவர்களே, (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், நான் அவையைவிட்டு உங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும். எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், நான் அவையைவிட்டு நீக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) வெளியேற்ற வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) கடுமையாக எச்சரிக்கிறேன். திரு. சந்தானம், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே (குறுக்கீடுகள்) கடந்த 1979 ஆம் ஆண்டு...(குறுக்கீடுகள்)

*(திரு. துரைமுருகன் பின்புறம் திரும்பிப் பேசிக்கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இப்படிப் பின்னாலே திரும்பிப் பேசினால், (குறுக்கீடுகள்) துரைமுருகன், தங்களுடைய நடவடிக்கைகள் சரியில்லை.

**திரு. லா. சந்தானம்:** 1979 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்...

*(திரு. துரைமுருகன் சுழன்றுகொண்டும், மேலே பார்வையாளர்கள் மாடத்தைப் பார்த்தும் கைகூப்பிப் பேசினார்.)*

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவைப் பணிகளினின்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், தங்களுடைய நடவடிக்கை சரியில்லை. (குறுக்கீடுகள்) இப்படிச் சுழன்றுகொண்டு எல்லாம் பேசுவது சட்டமன்றத்தினுடைய கௌரவத்தைப் பாதிக்கும். அவையைப் பாதிக்கும்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவே, நின்றுகொண்டு இப்போது குழப்பம் விளைவிக்கிற தி.மு.க. உறுப்பினர்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நின்றுகொண்டு குழப்பம் விளைவிக்கிற தி.மு.க.



உறுப்பினர்களை எச்சரிக்கிறேன். இவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நின்றுகொண்டு குழப்பம் விளைவிக்கிற தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், தீர்மானமாகக் கொண்டு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையின் கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையிலும், பேரவைத் தலைவர் அவர்களை அவமானப்படுத்துகிற வகையிலும், அவையிலே குழப்பம் விளைவித்து, கலாட்டா செய்கின்ற தி.மு.க.–வினரை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையை நடக்கவிடாமல், வேண்டுமென்றே முறைகேடான வார்த்தைகளைப் பயன்படுத்தி, குழப்பம் விளைவிக்க முற்படக்கூடிய தி.மு.க. உறுப்பினர்களை அவையை விட்டு நீக்க வேண்டும் என்கிற அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அவர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

## 2. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்**

**(ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்** } —*தொடர்ச்சி*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *பேரவைத் தலைவர் அவர்களே...*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் பேசும்போது திரு. ஆட்டோ பாஸ்கர் என்பவர் காவல் துறையால் துன்புறுத்தப்பட்டு இறந்தார் என்னும் பொருள்படக் குறிப்பிட்டார். இது முற்றிலும் தவறு. ஆட்டோ பாஸ்கர் என்பவர் பிடிபட்டு, காவல் துறையினால் கொண்டு வரப்படும்போது, அவர் ஏதோ விஷம் அருந்தி இறந்துவிட்டார். அவர் காவல் துறையினால் துன்புறுத்தப்படவில்லை. எனவேதான், இது காவல் பாதுகாப்பில் ஏற்பட்ட இறப்பு அல்ல என்று கணக்கிடப்பட்டுள்ளது. நீதிமன்றக் காவலில் அவர் இறந்ததாகச் சொன்னதை, அவைக்குறிப்பில் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.* Judicial custody–*யில் இறந்தார் என்று சொன்னேன். அதைத் திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்தத் திருத்தம் ஏற்கப்படுகிறது. திருத்தியவாறே அவைக்குறிப்பிலே சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சருடைய மானியக் கோரிக்கை இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்கள் இந்த மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெறும் என்று சொன்னீர்கள். நாங்கள் ஏற்றுக்கொண்டோம். வழக்கமாக இரண்டு நாட்கள் விவாதம் என்று சொன்னால், நிச்சயமாக எதிர்க்கட்சிகளின் சார்பில் இரண்டு, இரண்டு பேர்களைப் பேச அனுமதித்திருக்க வேண்டும்.*



*அதுமட்டுமல்ல; முடிக்கும்போது, முதலமைச்சர் பேசுவதற்கு முன்பாக, எதிர்க்கட்சியின் சார்பில்தான் ஒருவர் பேச முடியுமே தவிர,* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்,* ** *அப்படிக் குறிப்பிடுவது முறையல்ல.*

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** *என்னுடைய கண்ணோட்டத்திலே..*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *அது நியாயம் இல்லை. நீங்கள்...(குறுக்கீடுகள்) அது நியாயம் இல்லை. என்ன* unparliamentary word–*ஐ நான் சொன்னேன்?* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை.* ** *அப்படிப் பேசுவது முறையற்றது.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *இது முறை இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** *அப்படிப் பேசுவது முறையற்றது.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *இது முறை அல்ல. எதுவாக..*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** *அப்படிப் பேசுவது முறையற்றது. (குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளின் சார்பில் பேசிய பிறகுதான் முதலமைச்சர் பதில் அளிப்பது முறையாக இருந்திருக்குமே தவிர,...*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளின் சார்பில், இப்போது மதிப்பிற்குரிய திரு. எஸ்.ஆர்.பி. பேசிவிட்டார். ஆகவே, தாங்கள் எனக்குப் பதிலுரை அளிக்க வாய்ப்பு அளிக்கலாம்; நேரம் அளிக்கலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முறை அல்ல. இரண்டாவது, ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். குற்றச்சாட்டைச் சொன்னதற்கு எதிர்க் கட்சியின் சார்பில்*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

ஒரு பதில் வருகிறது. குற்றச்சாட்டு அவைக்குறிப்பிலே இருக்கும்போது, பதிலும், அவைக்குறிப்பிலே இருந்தால்தான் முறையாக இருக்குமே தவிர, பதில் அவைக்குறிப்பிலே...

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, நேற்றிலிருந்தே தாங்கள் புரிந்துகொள்ளாமலேயே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நேற்று ஒரு குற்றச்சாட்டு வந்தபோது, அதனுடைய பொறுப்புள்ள உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்களை அதற்கு விளக்கம் அளிப்பதற்கு நான் அனுமதித்தேன். அவருடைய விளக்கமும் வந்திருக்கிறது. இப்போது முதலமைச்சர் அவர்கள் பேசியவுடனே திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுவதற்கும், விளக்கம் அளிப்பதற்கும் நான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளின்படி, விதி 93–ன்படி, அவையிலே இருக்கின்ற ஓர் உறுப்பினர்மீது ஒரு குற்றச்சாட்டுச் சொல்லும்போது, அவருக்கு முன்பே நோட்டீஸ் கொடுத்திருக்கவேண்டுமென்றுதான் சொன்னேனேதவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் மீண்டும் மீண்டும் அந்த விதிகளைச் சொல்லிச் சொல்லிக் குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள், நேரம் இல்லை. மாண்புமிகு திரு. சந்தானம் அவர்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய கோரிக்கையைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிடம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்மீது குற்றச்சாட்டு சொல்லவில்லை. அதற்கு விளக்கம்தான் கேட்டேனேதவிர, அவரைக் குற்றம் சொல்லி நான் பேசவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் ஒன்றும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய மத்திய ஆட்சிக்குக்கூட நாங்கள் ஆதரவாகத்தான் இருக்கிறோம். (குறுக்கீடுகள்) அங்கு எங்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொண்டுதான் அவர்கள் இப்போது இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், உங்களுடைய கட்சியின் ஆதரவாளர் அவர். (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி பேசுகிறார், உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சில தி.மு.க. உறுப்பினர்களை வெளியேற்றியிருக்கிறீர்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே போக விரும்பவில்லை. ஏன், திரு. துரைமுருகன் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தி.மு.க.மீது திட்டமிட்டு முதலமைச்சர் அவர்கள், ஒரு கருத்து சொன்ன காரணத்தால், (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், சொன்ன காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே, திரு. சந்தானம் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அந்தப் பிரச்சினையினுடைய தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கமளித்தார்கள். நேற்றையதினமே இந்தப் பிரச்சினை வந்தபோது, திரு. சேகர்பாபு அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியபோது, அதற்குரிய விளக்கத்தை திரு. ஸ்டாலின் அவர்கள் சொல்வதற்கும் நான் அனுமதித்தேன். அதனுடைய தொடர்ச்சியாக விசாரிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது தொடர்பான சில கருத்துகளை அவர்கள் சொன்னார்கள். அதற்கும் நீங்கள் பதில் சொல்லவேண்டுமென்று விரும்பினீர்கள். உங்களை பதில் சொல்வதற்கும் அனுமதித்தேன். பிரச்சினை முடிந்துவிட்டது. திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்து, அவர் பயன்படுத்திய வார்த்தைகளையெல்லாம் அவைக்குறிப்பிலே ஏற்றமுடியுமா? அவர் பயன்படுத்திய அந்த வார்த்தைகளையெல்லாம் சட்டமன்ற அவைக்குறிப்பிலே ஏற்றமுடியுமா என்பதைத் தாங்கள்தான் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(எஞ்சிய தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளைக் குந்தகப்படுத்தக்கூடிய வகையில் இதுபோல தவறான, முறைகேடான, காட்டுமிராண்டித்தனமான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடிய தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்) தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசியதை நீங்கள் அவையிலே ஏற்றிவிட்டு, மற்றவற்றைப் பதிவு செய்ய அனுமதிக்காததைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

(எஞ்சிய தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டே அவையிலிருந்து ஒவ்வொருவராக வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறைகேடாகப் பேசக்கூடாது. பேசினால் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக வேண்டியதிருக்கும். (கூச்சல்–குழப்பம்)

## 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை கூட்டத் தொடர் முடிகின்ற வரை நீக்கிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் அவையைக் குந்தகப்படுத்தக்கூடிய வகையில், அவை நடவடிக்கைகளைக் கேவலப்படுத்தக்கூடிய வகையில் பேசிய காரணத்தால், இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரைக்கும் அவரை அவையிலிருந்து அகற்றவேண்டுமென்கிற தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“அவையிலே கெட்ட வார்த்தையில் பேசி, அவைத் தலைவரை, அவையை அவமதிக்கிற முறையில் பேசிய திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை அவைக் கூட்டத் தொடர் முடிகின்றவரை நீக்கி வைக்க வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரைக்கும் அவையிலே நுழைய வேண்டாம் என்று ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயன்றவரையில் எதிர்க்கட்சிகளையும் அரவணைத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகளையும் அவைக்குள்ளே வைத்துக்கொண்டு பேசுவதுதான் முறையாக இருக்குமேதவிர, பிரதான எதிர்க்கட்சியை வெளியேற்றிவிட்டு, மற்ற எதிர்க்கட்சிகளைப் பேசவிடாமல் செய்துவிட்டு அவையை நடத்துவேன் என்று சொல்வது முறையல்ல. அதுதான் உங்களது முடிவு என்றிருக்குமேயானால், நிச்சயமாக இந்த அவை நடவடிக்கைகளிலே எங்களால் கலந்து கொள்ளமுடியாத சூழ்நிலையில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், கெட்ட வார்த்தையில், அமங்கல வார்த்தையில் தி.மு.க.-காரர்கள் பேசுவதற்குத் தொடர்ந்து ஊக்கம் தருகிற

காரணத்தால்தான், அவையில் இத்தகைய அமளி ஏற்படுகிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–0.5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே எந்த உறுப்பினர் பேசினாலும், ஜனநாயக மரபுக்குட்பட்டு, அவை மரபை மீறாமல் பேசினாலும்கூட, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொல்வது முறைகேடானது; தவறானது; அநீதியானது; அக்கிரமமானது; ஆகவே, தாங்கள் சொல்வதை ஏற்கமுடியாது. மிக மோசமான, மிகக் கேவலமான, மிகக் கெட்ட வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்திய காரணத்தினால்தான், நீக்கப்பட்டு இருக்கிறார்கள். தாங்கள் அதை ஆதரிக்கமாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை நீங்கள் தயவுசெய்து திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடுமையான தண்டனை வேண்டாம். கூட்டத் தொடர் முழுவதும் என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பயன்படுத்திய வார்த்தைகளை நீங்கள் கேட்டீர்களா? அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? தயவுசெய்து அதை மட்டும் நீங்கள் விசாரித்துச் சொல்லுங்கள். சுவாமிநாதன் போன்றவர்கள் பயன்படுத்திய வார்த்தைகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? என்ன வார்த்தைகளைச் சொன்னார்கள் என்பதை நீங்கள் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தண்டனையை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உறுப்பினர் ஒருவருடைய உரிமையைப் பறிக்கக் கூடாது. நீங்கள்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி அவர்களே, அளவுக்கு அதிகமாக எவ்வளவு பொறுமையைக் காட்டவேண்டுமோ நான் காட்டிவிட்டேன். தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து அவர்கள் செய்து கொண்டிருக்கக்கூடிய, அவ்வளவு நடவடிக்கைகளையும் தாங்கிக்கொண்டு இருக்கிறேன். என்னென்ன பேசுகிறார்கள் என்று தெரியும். யார் பேசினாலும் running commentary அடிக்கிறார்கள். கூடவே பேசுகிறார்கள். கேவலமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். முதலமைச்சராக இருக்கக்கூடியவர், ஒரு தாய்க்குச் சமமானவர் என்கிற அந்த உணர்வுகூட இல்லாமல், அவர்கள் அமர்ந்திருக்கும் நேரத்திலே மிக அசிங்கமான வார்த்தைகளையெல்லாம் பேசுகிறார்கள். நானும் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டுவிட்டேன். இவ்வளவு தாங்கியதற்குப் பிறகும்கூட, இனியும் இதை அனுமதித்தால், அவையினுடைய மரபுகளைக் காப்பதற்கு நான் தவறிவிட்டேன் என்கிற கெட்ட பெயரை நான் அடைந்து, அப்படியொரு அவமானத்தைப் பெற நான் விரும்பவில்லை. ஆகவேதான், இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காக்க, அவை என்பது எல்லாருக்கும் பொதுவானது, சட்டமன்றம் என்பது எல்லாருக்கும் பொதுவானது. ஆளுங்கட்சியோ, எதிர்க் கட்சியோ எல்லோருக்கும் பொதுவானது. ஒரு பொதுவான அமைப்பிலே, எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்கின்ற ஒரு அடிப்படையான அறிவுகூட இல்லாமல் நடக்கக்கூடியவர்களை, அவையைவிட்டு அகற்றுவதைத்தவிர, வேறு என்ன செய்யமுடியும்? தயவுசெய்து நீங்கள் அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகள், தொடர்ந்து பயன்படுத்திக்கொண்டிருக்கிற வார்த்தைகள், எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்தால், நீங்களே இவர்களை நீக்கவேண்டுமென்று பரிந்துரை செய்வீர்கள். ஆகவே, தயவுசெய்து, கூட்டணி என்பதற்காகவோ, வேறு காரணத்திற்காகவோ இல்லாமல் கொஞ்சம் நியாய உணர்ச்சியோடு நீங்கள் நடந்துகொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் சொன்ன உணர்வுகளை நாங்களும் மதிக்கிறோம். நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், அவர்களை இன்று ஒரு நாளைக்கு வெளியேற்றுங்கள், முழு period–லேயும் வெளியேற்றி இருக்கிறதை, reconsider பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எல்லாரையும் பண்ணவில்லை. தி.மு.க உறுப்பினர்கள் அனைவரையும் பண்ணவில்லை. திரு. சுவாமிநாதன் அவர்களை மட்டும்தான் பண்ணியிருக்கிறேன். மற்றவர்கள் அனைவரும் வரலாம். (குறுக்கீடு)

[2005 மார்ச் 15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கொஞ்சம் இருங்கள், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பழனிசாமி கொஞ்சம் இருங்கள்.

### (இ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களை ஐந்து நாட்களுக்கு மட்டும் நீக்கி வைத்தல்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it is too high என்று சகோதரர் கூறுகிறார். கெட்ட வார்த்தை சாமிநாதன் மட்டும் பேசவில்லை. மதிப்பிற்கும், மரியாதைக்கும், கண்ணியத்திற்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர்கள் நீங்கள், அவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும். அவையிலே, அமங்கலமான சொற்கள், கெட்ட வார்த்தைகள், கோரசாக எல்லாரும் ஒன்று சேர்ந்துகொண்டு தினமும் (குறுக்கீடு) இருங்கள். தயவுசெய்து, கேளுங்கள், இருங்கள், நீங்கள், சொல்லுவதைக் கேளுங்கள். (குறுக்கீடு) சொல்லுவதைக் கேளுங்கள். அந்தமாதிரி (குறுக்கீடு) சொல்லி முடிக்கிறேன். இருங்கள். எனக்கு அனுமதி கொடுங்கள், தயவு செய்து. I am not yielding. ஜி.கே. மணி, you speak later. அப்படி அமங்கல சொற்களைத் தொடர்ந்து பேசுவதைக் கூட்டணிக் கட்சியில் இருக்கின்ற நீங்கள் கண்டித்து அதைத் தடுக்கவேண்டும் என்று, திரு. ஹேமச்சந்திரன் அவர்களைக்கூட நான் கேட்டுக்கொண்டேன். இருப்பினும், மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. ஹேமச்சந்திரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் கூட்டத்தொடர் பூராவும் என்பதற்குப் பதிலாக ஐந்து தினங்களுக்கு மட்டும், ஐந்து தினங்களுக்கு மட்டும் நீக்கி வைக்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்து இன்று ஒருநாளோடு நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று எல்லா எதிர்க்கட்சிகளின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து...

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இப்படி ஒரு நாள் நீக்கியிருக்கிறோம். அன்றைக்குகூட திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டார்கள். திரு. பரிதி இளம்வழுதி மிகக் கடுமையான ஒரு கேவலமான வார்த்தையை என்னை நோக்கியே பேசினார். பேசியபோது நானும்



2005 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

அவரை அவையைவிட்டு நீக்குமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிட்டேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வேண்டுகோள்விட்டார். சரி, உரிய அறிவுரையைச் சொல்லி, நீங்கள் நாளைக்கு வரச் சொல்லுங்கள் என்று நான் சொன்னேன். இரண்டு முறை ஒருவர் தொடர்ந்து அவையைவிட்டு நீக்கப்பட்டால் அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்க வேண்டுமென்பதுதான் விதி. ஆனாலும்கூட, அந்த விதியை மாற்றி திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக, பெருந்தன்மையோடு அடுத்த நாளே வரச் சொல்லுங்கள் என்று நான் சொன்னேன். ஆகவே பெருந்தன்மை காட்டுவதிலே ஒன்றும் தவறு இல்லை. ஆனால், இப்படி ஒரு நாளைக்கு மட்டும் நீக்கி வைப்பது என்றால், அடுத்த நாள் வந்து இதையேதான் பேசுகிறார்கள். அடுத்தநாள் வந்து, இதையேதான் அரங்கேற்றுகிறார்கள். இதே தவறைத்தான் செய்கிறார்கள். ஆகவே மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு இணங்க, ஐந்து நாட்கள் மட்டும் அவர்களை அவையிலிருந்து நீக்கிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*முன்னவர் அவர்களுடைய தீர்மானம் ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்)*

### (ஈ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களைஒரு நாள் மட்டும் நீக்கிவைத்தல்

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாள் போதும். கூட்டத் தொடர் முழுவதும் என்று போட வேண்டாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாள் இல்லை, ஒரு மணி நேரம் அவையில் இருந்து ஒரு உறுப்பினரை நீக்கி வைத்தாலுமே தண்டனைதான்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாள் போதும்.....

[2005 மார்ச் 15

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாள் மட்டும் போதும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாண்புமிகு ஜி.கே. மணி அவர்களும், ஹேமசந்திரன் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு நாள் தண்டனை மட்டும் போதும், அவர்கள் திருத்திக்கொள்வார்கள், கெட்ட வார்த்தையில் பேசமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நாள் மட்டும் போதும் என்று கூறிய காரணத்தால், ஒரு நாள் மட்டும் அந்தத் தண்டனையை அவருக்குத் தரலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அதோடு இணைத்து ஒன்றை நான் சொல்லிவிட விரும்புகிறேன். நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட காரணத்தால், நீங்கள் வற்புறுத்திய காரணத்தால், அவர்களை மன்னித்து நாளை கலந்துகொள்ள வேண்டும் என்கிற தீர்மானம் இப்போது ஏற்கப்பட்டிருக்கிறது. நாளையும் வந்து தொடர்ந்து இதே போல நடந்து கொண்டால் இதேபோல நடவடிக்கை எடுத்தால் ஜி.கே. மணியோ, ஹேமசந்திரனோ, பழனிசாமியோ தயவுசெய்து இதிலே தலையிடக்கூடாது என்று நான் வேண்டி விரும்பி உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2005 மார்ச் 15]

## 2. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்**
**(ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்** —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்ற விவாதங்களுக்கு இப்போது எனது பதிலை அளிக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்மீது பேசும்போது, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார். நேற்று இந்த அவையில் பேசிய தி.மு.க உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களும், காங்கிரஸ் உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்களும், இதே கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். காவல் துறைக்கு, அளவுக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய துறைகளை விட்டுவிட்டுக் காவல் துறைக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். நேற்றே இந்த அவையில், இந்தக் கருத்தை மறுத்து ஏனைய துறைகளுக்கு இதைவிட அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை விவரமாகச் சுட்டிக்காட்டினேன்.

இந்தப் பேரவையில் பேசிய ஒவ்வொருவரும், குறிப்பாக, ஒவ்வொரு எதிர்க்கட்சியினரும் வளர்ச்சிப் பணிகளின் தேவை குறித்தும், அனைத்துத் துறைகளிலும் ஏற்பட வேண்டிய மேம்பாடு குறித்தும் தொடர்ந்து பேசி வருகிறார்கள். எந்த ஒரு மாநிலத்திலும் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக நிலை நிறுத்தப்படாவிட்டால் – அமைதி அங்கு ஆட்சி செய்யாவிட்டால் – எந்த வளர்ச்சிப் பணியும் அங்கு நடைபெறாது — அர்த்தம் உள்ள வளர்ச்சி எதையும் நாம் அங்கே எதிர்பார்க்க முடியாது.

ஏனைய அனைத்துத் துறைகளின் வளர்ச்சியும், சட்டம்-ஒழுங்கு நிலைநிறுத்தப்படுவதைப் பொறுத்தே அமையும். ஆகவே, காவல் துறையை

முழுமையாக வலுப்படுத்த, காவல் துறையினருக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதோடு, அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம் ஆகும். அப்போதுதான் காவல் துறையினர் தங்களுடைய முழுத் திறனையும் பயன்படுத்தி, சட்டம்–ஒழுங்கு நிலைமையைச் செவ்வனே பராமரிக்க முடியும்.

மத்திய அரசு, 2003–2004 ஆம் ஆண்டில், பல்வேறு தலைப்புகளின்கீழ், ஒட்டுமொத்தமாக ஓய்வூதியங்கள் உட்பட இராணுவத்திற்கு என ஒதுக்கிய தொகை, 71,771.60 கோடி ரூபாய் ஆகும்.

மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த பிறகு, 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை, 89,922 கோடி ரூபாய் ஆகும். 2005–2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி, 96,952 கோடி ரூபாய் இராணுவத்திற்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் நிகர வருவாயில் 22.76 சதவீதம் ஆகும். இவ்வாறு கூடுதல் ஒதுக்கீடு செய்வது சரியான நடவடிக்கைதான். நாட்டின் பாதுகாப்பிற்காகப் பெருந்தொகை செலவிடப்படாவிட்டால், நமது நாடு வலுவற்ற நாடாகக் கருதப்பட்டு, எதிரிகள், தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு எளிதில் இலக்காகக் கூடும்.

பிற்பகல் 12–15

அண்மையில், நமது நாட்டின் எல்லைப் பகுதியில் என்ன நடந்தது? மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள படையின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று அறிவித்தார். அதனால் செலவுகள் குறையும் என்றாலும், காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் கொடுமைகள் அதிகரித்துவிட்டன.

எனவே, ஒரு நாடு வலிமையாக இருக்க வேண்டும் என்றால், தனது இறையாண்மையையும், தன் எல்லைமீது தனக்கு உள்ள ஆதிபத்தியத்தையும் பாதுகாக்க வேண்டும் என்றால், அன்னியரிடமிருந்து தனது மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவது மிகவும் அவசியம். இந்த ஒதுக்கீடு குறைக்கப்படுமானால், ஒட்டுமொத்த நாடும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலை உருவாகும்.

மத்திய அரசுக்குப் பொருந்தும் இந்தக் கோட்பாடு, மாநில அரசுக்கும் பொருந்தும். இன்று அனைத்து வணிக நிறுவனங்களும், வெளிநாட்டுக் குழுமங்களும், பன்னாட்டுத் தொழில் அமைப்புகளும், பெரும் தகவல்



தொழில்நுட்ப நிறுவனங்களும் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்கின்றன என்றால், அதற்குக் காரணம், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு நிலைமை மிகச் சிறப்பாகப் (மேசையைத் தட்டும் ஒலி) பராமரிக்கப்படுவதே ஆகும். இது எவ்வாறு சாத்தியமாயிற்று? காவல் துறைக்காக, இந்த அளவுக்கு நாம் செலவு செய்ததனால் மட்டுமே, இது சாத்தியமாயிற்று. அண்டை மாநிலங்களாகிய கர்நாடகத்திலும், ஆந்திரப்பிரதேசத்திலும் நிலவுகின்ற சூழ்நிலைபற்றி நான் ஏற்கெனவே இந்தப் பேரவையில் எடுத்துக்காட்டியுள்ளேன். ஆந்திரப்பிரதேசத்தை நலிவுபடுத்திக்கொண்டிருக்கும் நக்சலைட் என்னும் நச்சு நோய் தமிழ்நாட்டில் தடுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு, தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று, நாட்டிலேயே முதன்மையான இடத்தை நோக்கிப் பீடுநடை போடுகிறது என்றால், சட்டம்–ஒழுங்கு நிலைமை இங்குச் சிறப்பாகப் பராமரிக்கப்படுவதும், (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியும், நல்லிணக்க வாழ்வும், தமிழக மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதும் முக்கியக் காரணங்களாகும். இது, நடைமுறை சாத்தியம் ஆனது எப்படி? நாட்டிலேயே சிறந்த காவல் துறையாக தமிழ்நாடு காவல் துறை விளங்குவதால் மட்டுமே இது சாத்தியமானது.

இதனைக் கருத்தில்கொண்டுதான், காவலர்களுக்கு நவீன ஆயுதங்கள், மிகச் சிறந்த தொழில்நுட்பச் சாதனங்கள் வழங்குவதற்காகவும், அவர்களது நலனைப் பேணிக் காப்பதற்காகவும், நாம் இவ்வளவு தொகையைச் செலவிடுகிறோம். இதுகுறித்து, யாரும் பொருமவோ, பொறாமைப்படவோ தேவையில்லை. மிக முக்கியமான, இன்றியமையாத செலவாகவே இந்தச் செலவு கருதப்பட வேண்டும். இராணுவ வீரர்களும், காவல் துறை வீரர்களும்தான் நாட்டிற்காக மிக உயரிய தியாகமாகிய உயிர்த் தியாகத்தைச் செய்கிறார்கள். பலர் நிரந்தரமாக ஊனமடைகிறார்கள், முடம் ஆகிறார்கள், கடுமையாகக் காயப்படுகிறார்கள். அரசின் வேறு எந்தத் துறையிலும் பணியாற்றுபவர்களுக்கு இத்தகைய நிலை இல்லை. எனவே, எப்போதும் இத்தகைய வீரர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவதோடு, அவர்களது தியாகத்தை என்றென்றும் மனதில் கொண்டு, நாம் நன்றிபாராட்ட வேண்டும். இராணுவத்தினரின் ஊக்கம் குறைந்தால், அது நாட்டையே பாதிக்கும். அதுபோலவே, காவல் துறையினரின் ஊக்கம் குறைந்தால், அது அந்த மாநிலத்தைப் பாதிக்கும்.

காவல் துறையைத் தாக்கிப் பேசுவதும், அவர்கள்மீது அவதூறுகளை அள்ளி வீசுவதும் இப்போது ஒரு வாடிக்கையான புதுமைப் போக்காக, அதாவது, fashion–ஆக மாறி வருகிறது. 5–3–2005 அன்று பத்திரிகையாளர்களைச் சந்தித்த திரு. கருணாநிதி, E.V.K.S. இளங்கோவன்

பிரச்சினையையடுத்து, திமுக. எதிர்ப்புச் சுவரொட்டிகளை, "பொறுக்கிகள் ஒட்டியிருப்பார்கள், அல்லது சில போலீசார் ஒட்டியிருப்பார்கள்" என்று பேசியிருக்கிறார். காவல் துறையினர்மீது இப்படிப்பட்ட அவதூறுகளை அள்ளிவீசுவதும், களங்கப்படுத்தும் கடும்மொழிகளைப் பொழிவதும், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதிக்குப் புதியதும் அல்ல; அப்படி அவர் செய்வது முதன்முறையும் அல்ல.

*பிற்பகல் 12–20*

1996 ஆம் ஆண்டில் அவர் ஆட்சிக்கு வந்ததும் காவல் துறையைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'தமிழகத்திலே காவல் துறை என்ற ஈரல் முக்கால் பகுதி கெட்டுப்போய், கால் பகுதிதான் மிச்சம் இருக்கிறது' என்று சொன்னார். பின்னர், 2001 ஆம் ஆண்டில் அவர் கைது செய்யப்பட்டதும் காவலர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'ஏவி விடப்படும் போலீஸ் மிருகங்கள்' என்று கூறினார். ஆக்கபூர்வமான விமர்சனத்தை அளிக்க வேண்டியவர், இப்படித் திட்டித் தீர்ப்பதிலும், நிதானம் இல்லாமல் வார்த்தைகளைக் கொட்டித் தீர்ப்பதிலும், நாளுக்கு நாள் கெட்டிக்காரர் ஆகி வருகிறார் என்பதையே இந்த விரும்பத்தகாத வார்த்தை பிரயோகங்கள் காட்டுகின்றன. காவல் துறையினரின் பிரச்சினை பற்றி ஆய்வு செய்து, பரிந்துரைப்பதற்காக ஆணையம் அமைத்த பெருமையும், காவல் துறையினரின் அரைக்கால் சட்டை சீருடையை மாற்றி, முழுக்கால் சட்டையாக மாற்றிய பெருமையும் தனக்குத்தான் என்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி ஓயாமல் தம்பட்டம் அடித்துக்கொள்ளத் தவறுவது இல்லை. ஆனால், அவருடைய அறிக்கைகளோ, பேச்சுக்களோ காவல் துறையினரின்மீது அவருக்கு இருக்கின்ற உள்ளார்ந்த வெறுப்பு உணர்ச்சியையே காட்டுகின்றன. இது வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். காவல் துறையைப் புண்படுத்தி, காயப்படுத்தி, அவர்களுக்கு மனச் சோர்வை ஏற்படுத்தி, அவர்களது ஊக்கத்தை உருக்குலைக்கும் செயலில் ஈடுபடுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

தங்கள் நாட்டிற்காகவும், தங்களது சகோதர மக்களுக்காகவும் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ய எந்த நேரத்திலும் ஆயத்தமாக இருக்கின்ற இராணுவத்தினர் மற்றும் காவல் துறையினரின் உணர்வுகளைப் புண்படுத்துகின்ற விதத்தில் எதுவும் பேச வேண்டாம் என்று நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இராணுவத்தையும், காவல் துறையினரையும் தளர்வுபடுத்தும் வார்த்தைகளைக் கூறுவதற்கு முன்னால், இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வேண்டி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



இந்தியத் திருநாட்டின் இறையாண்மை காக்கப்பட வேண்டும் என்பதில் எந்த இந்தியத் தலைவரை விடவும் நான் முன் நிற்கிறேன். அதேசமயம், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக இருக்க வேண்டும் என்பதில் எந்த தமிழகத்துத் தலைவரைக் காட்டிலும் நான் முன் நிற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வலிமையான இந்தியா, அதில் வளம் மிக்க தமிழ்நாடு, இதுதான் எனது இலட்சியம். எனது இயக்கத்தின் கோட்பாடு, எனது தலைமையிலான அரசின் செயல்பாடு! அந்த இலட்சியம் ஈடேற வேண்டும் என்றால், அந்தக் கோட்பாடு செயலாக்கப்பட வேண்டுமென்றால், அந்தச் செயல்பாடு மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால், தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும்.

வளர்ச்சி என்னும் செடி அமைதி என்னும் மண்ணில்தான் விளையும்! எந்த வளர்ச்சிக்கும் முதல் தேவையாக இருப்பது அமைதியான சூழ்நிலை! அந்த அமைதிக்கு அடித்தளமாக அமைவது காவல் துறை.

காவல் துறை என்பது, வளரும் பயிரைக் காக்கும் வேலி மட்டுமல்ல; வளர்ச்சிக்கே அடிப்படையாக விளங்கும் நிலமும் அதுதான் என்பது, எனது அசைக்க முடியாத நம்பிக்கை. எனவேதான், காவல் துறைக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் தந்து வருகின்றேன். மிகுந்த முக்கியத்துவம் என்பதைவிட, உரிய முக்கியத்துவம் என்பதே சரியான வாசகம் ஆகும். எனக்கு முன்பு இருந்த ஆட்சி, உரிய முக்கியத்துவத்தைக் காவல் துறைக்குத் தரவில்லை. அப்படித் தர வேண்டுமென்ற எண்ணமும் அதற்கு இருக்கவில்லை. நான், முதன்முறை முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, கண்ட இரண்டு காட்சிகள், அன்று நிலவிய அபாயகரமான நிலையை உணர்த்துவதாக இருந்தன.

அன்றைய தமிழகத்தில் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்த L.T.T.E. இயக்கத்தினர் எவ்வளவு சுதந்திரமாக உலவ முடிந்தது, செயல்பட முடிந்தது என்பது ஒன்று. தமிழகக் காவல் துறை எவ்வளவு பரிதாபகரமாகக் காட்சி அளித்தது என்பது மற்றொன்று. கட்டற்ற முறையில், எங்கும் செல்லலாம்; எதையும் செய்யலாம் என்றிருந்த L.T.T.E. இயக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், தமிழ்நாடு காவல் துறை வலிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கண்டேன். தீவிரவாதத்தின் கோரச் செயல்பாடுகள், இந்த மண்ணில் இனிமேல் நிகழக் கூடாது என்றால், அதனைச் சமாளிக்கும்விதத்தில், தமிழ்நாடு காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தேன்.

அன்றைய தமிழ்நாடு காவல் துறை எப்படியிருந்தது என்பதை விளக்க, நான் சில செய்திகளைச் சொல்லியாக வேண்டும்.

அப்போது, தமிழகத்தில் பல காவல் நிலையங்களில் வாகன வசதியே கிடையாது. நகரங்களிலும் ஒரு சில நகர்ப்புறப் பகுதிகளிலும் மட்டும்தான், அன்றைய காவல் நிலையங்களில் வாகனம் இருந்தது. பல காவல் நிலையங்களில் எந்த வாகன வசதிகளும் இல்லை. அந்தக் காவல் நிலையங்களில் இருந்த ஒரே வாகனம் சைக்கிள்தான். தலைமைக் காவலர், தனது பணியைச் செய்வதற்கு அந்த சைக்கிளில் பயணிப்பார். அந்த நாட்களில், பக்கத்துக் கிராமங்களில் அல்லது நகரங்களில் திருட்டோ அல்லது கொள்ளையோ நடந்தால், சம்பவம் நடந்த இடத்திற்குக் காவலரை அழைத்துச் செல்வதற்குக்கூட மக்கள் அவர்களது வாகனங்களிலே அழைத்துச் செல்ல வேண்டும். இதுதான் அன்றைய நிலைமை. காவல் நிலையங்களில், அதுவும் சில நகரக் காவல் நிலையங்களில் இருந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 376 தான். இப்படிக் காவல் நிலையங்கள், தமிழ்நாட்டில் பரிதாபகரமாகக் காட்சியளித்தன என்றால், காவலர்களின் நிலையோ, அதைவிட மோசமாக இருந்தது. காவலர்கள் புறக்கணிக்கப்பட்டு இருந்தார்கள். ஊக்கமற்ற நிலையில், அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். விரக்தியின் விளிம்புக்கு அவர்கள் தள்ளப்பட்டிருந்தார்கள். அவர்களின் கைகளில் எப்படிப்பட்ட ஆயுதங்கள் இருந்தன தெரியுமா? பேச்சு வழக்கில் சொல்வோமே, ஹைதர் அலி காலத்து ஆயுதங்கள் என்று; அதைப்போன்ற ஆயுதங்களே இருந்தன.

பிற்பகல் 12–25

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மஸ்கட் துப்பாக்கிகளை, அவர்கள் தங்கள் கைகளில் ஏந்தி இருந்தார்கள். இத்தகைய பழமையான ஆயுதங்களை வைத்துக்கொண்டுதான் பயங்கர நவீன ஆயுதங்களைக் கையில் வைத்துக்கொண்டிருந்த L.T.T.E. இயக்கத்தினரை அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்—அப்போது இருந்த அவல நிலை உங்களது கண்களுக்குப் புலப்படும். ஏ.கே. 47 போன்ற நவீன இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திய L.T.T.E. எங்கே? அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கத்தக்க பழைய ஆயுதங்களை ஏந்தியிருந்த அப்பாவித் தமிழகக் காவலர்கள் எங்கே? மிக மிக நவீனமான கருவிகளைக் கொண்டிருந்த L.T.T.E. தீவிரவாதிகள் எங்கே? அடிப்படை வசதிகூட இல்லாத பரிதாபகரமான தமிழ்நாடு காவலர்கள் எங்கே? உலகத் தரம் வாய்ந்த கருவிகளைக் கொண்டிருந்த L.T.T.E. இயக்கம் எங்கே? உள்ளூர்த்



தரம்கூட இல்லாத சாதனங்களைக் கொண்டிருந்த தமிழ்நாடு காவல் துறை எங்கே? இப்படி ஆயுத பலத்திலும், தொழில்நுட்ப வசதியிலும் மிகப் பின்தங்கியிருந்த தமிழ்நாடு காவல் துறை, நவீன ஆயுதங்களையும் வசதிகளையும் கொண்ட L.T.T.E. இயக்கத்தை எப்படி எதிர்க்க இயலும் என்பதை எவருமே அன்று சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

உடனடியாகக் காவல் துறை வலிமைப்படுத்தப்பட வேண்டும்; உடனடியாகக் காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தேன். முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளில், காவல் துறையை நவீனப்படுத்துவது முதலிடம் பெற வேண்டும் என்று முடிவு செய்தேன். எல்லாம் சரி, நினைத்த அளவுக்குக் காவல் துறைக்குப் புது வலிமையை, புத்துணர்ச்சியை வழங்க வேண்டுமென்றால், அதற்குப் பணம் வேண்டுமே! என்ன செய்வது? இதற்குத் தேவையான நிதி வசதி முழுமையாக மாநில அரசாலேயே அளிக்க முடியாது. மைய அரசின் நிதி உதவியும் வேண்டும். ஆகவே, மத்திய அரசிடம் உதவி கேட்க டெல்லி சென்றேன். அன்றைய பிரதமரையும், உள் துறை அமைச்சரையும் சந்தித்து, தமிழக நிலவரத்தை விளக்கினேன். மைய அரசு நிதி வழங்குவதற்கு முன்பு, மாநில அளவில் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக 10 கோடி ரூபாயை ஒவ்வொரு நிதி ஆண்டிலும் வழங்க ஆணையிட்டேன். மைய அரசும் ஓரளவு நிதி உதவி செய்தது. தமிழ்நாடு காவல் துறை, வரலாற்றிலேயே, முதன்முறையாக ஏ.கே. 47 துப்பாக்கிகளைக் காவல் துறைக்கு அளிக்க முடிந்தது. இவ்வாறு காவல் துறையை நவீனப்படுத்தி, தேவையான ஆயுதங்கள், சாதனங்கள் ஆகியவற்றை வழங்க, அன்று நான் எடுத்த முயற்சிதான் இந்தியா முழுவதும் காவல் துறை நவீனமயமாக்குதல் என்னும் (மேசையைத் தட்டும் ஒலி) முன்னோடியான திட்டத்துக்கு வித்திட்டது. இத்திட்டத்தின் சிற்பி, நான்தான் என்று பலரால் போற்றப்படுவதைக் கேட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1980–ன் பின்பாதி ஆண்டுகளில், தமிழ்நாட்டில் முகிழ்த்த தீவிரவாதிகளின் வெடிகுண்டுக் கலாச்சாரம் ஆகியவற்றை ஒடுக்குவதற்காக, 1992–93–ல் 1300 ஏ.கே. 47 துப்பாக்கிகள் மற்றும் 1100, 7.62 எம்.எம். ரைபிள்கள், 1994–ல் 720, 7.62 எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகள், 2003–ல் 3000, 9 எம்.எம். பிஸ்டல்கள் மற்றும் 300, 5.56 இன்சாஸ் துப்பாக்கிகள் ஆகியவற்றைக் காவல் துறைக்கு வழங்கினேன். வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்ய, தேவையான கருவிகள் 1994–ல் வழங்கப்பட்டன. இது தவிர, குண்( களைக்

கண்டுபிடிப்பதற்கும், அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கும், முன்னாள் இராணுவத்தினர் பணியமர்த்தப்பட்டனர். இதற்குமுன் இவ்வித எந்திரத் துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் கருவிகளும், அந்தப் பணியைச் செய்யவல்ல அலுவலர்களும் தமிழ்நாட்டுக் காவல் துறையிடம் இருந்ததில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

*பிற்பகல் 12–30*

1994–ல் தீவிரவாதிகள், சாலைகளை உபயோகித்துத் தப்பிச் செல்வதைத் தடை செய்யும் முகத்தான், 154 நெடுஞ்சாலைத் தடுப்புச் சாவடிகள் அமைக்கப்பட்டதுடன் அவற்றிற்கு வயர்லஸ் கருவிகளும் வழங்கப்பட்டன.

2002–ல் கணினி சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு 'Cyber Crime Cell' உருவாக்கப்பட்டது. 2002–ல் அமைப்பு ரீதியிலான குற்றத் தடுப்புப் பிரிவு (Organised Crime Unit) மற்றும் ஸ்பெஷல் ஆக்ஷன் பிரிவு (SAG) உருவாக்கப்பட்டது. கடற்கரை, கடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், பாதுகாப்பை மேம்படுத்தவும், கடலோரக் காவல்படை (Coastal Security Group) 1994–ல், 60 சோதனைச் சாவடிகளுடன் இந்தியாவில் முதன்முறையாகத் தொடங்கப்பட்டது.

காவல் துறையை நவீனப்படுத்துவதில், நான் எவ்வளவு முனைப்போடு இருந்தேன் என்பதற்கு இங்கே நான் குறிப்பிட்டவை ஒருசில எடுத்துக்காட்டுகள்தான்.

சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை மற்றும் குற்ற நிகழ்வுகள் நடைபெறும்போது, சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து சென்று நடவடிக்கை எடுக்கும்வகையில், காவல் துறையினருக்கு அதிக எண்ணிக்கையிலான புதிய வாகனங்களை நான் வழங்கியுள்ளேன். 1991 ஆம் ஆண்டு தமிழகக் காவல் துறையிடம் இருந்த மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 3,640 ஆகும். 1996 முதல் 2001 வரையிலான முந்தைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1,540 தான். நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001 முதல் இதுவரை, 4,077 வாகனங்கள் வாங்கி வழங்கிட ஆணைகள் பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல காவல் நிலையங்களில், தலைமைக் காவலரின் சைக்கிளைத் தவிர வேறு வாகனமே இல்லாத நிலை அன்று! காவல் துறையில் கிட்டத்தட்ட 10,000 வாகனங்கள் உள்ள சூழ்நிலை இன்று! (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது வாகனங்கள் இல்லாத காவல் துறை அதிகாரிகளோ, காவல் நிலையங்களோ, சிறப்புப் பிரிவுகளோ இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.



காவல் துறையில் தகவல் பரிமாற்ற சாதனங்களை நான் நவீனப்படுத்தி உள்ளேன். தமிழ்நாட்டிலுள்ள 1413 காவல் நிலையங்களிலும் Caller I.D.–யுடன் கூடிய தொலைபேசிகளும், கம்பியில்லாத் தொலைபேசிகளும் இன்று உள்ளன. இதுதவிர, காவலர்களின் கையில் அவர்கள் ரோந்து செய்கின்ற நேரத்தில் அவர்கள் காவல் நிலையத்தைத் தொடர்புகொள்ள வசதியாக 7,695 நடைபேசிகள் Walkie–talkie–கள் வழங்கப்பட்டுள்ளன. சட்டம்–ஒழுங்குப் பணியில் உள்ள எல்லா காவல் துறை அதிகாரிகளின் வாகனங்களிலும், காவல் நிலையங்களில் உள்ளது போலவே கம்பியில்லாத் தொலைபேசிகள் வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. தொலைபேசி, கம்பியில்லாத் தொலைபேசி தொழில்நுட்பத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும்முகத்தான், 1994–ல் Analog தொலைத் தொடர்பு முறையிலிருந்து, இந்தத் தொலைத் தொடர்பு வசதி, இலக்கமுறை நுண்ணலைத் தொடர்பு முறைக்கு-digital முறைக்கு—மாற்றப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு மறு அஞ்சல் அமைப்புகளின், Repeaters–களின் எண்ணிக்கை 218–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அனைத்துக் காவல் நிலையங்களிலும், பிற காவல் அலுவலகங்களிலும் துரிதத் தகவல் தொடர்புக்காக 1750 இடங்களில் மின் அஞ்சல்—e-mail—வசதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் கணினிகளும், குறிப்பிட்ட காவல் நிலையங்களுக்கு ஒளி நகல் எடுக்கும் கருவிகளும்—Photo Copiers—நிகரி கருவிகளும்—Fax machine-களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆயுதங்கள், சாதனங்கள், வாகனங்கள் என்று வழங்கி, காவல் துறையை நவீனப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், பல சிறப்புப் பிரிவுகளையும் நான் ஏற்படுத்தினேன். 1995–ல் கொள்ளையர்களின் கொட்டத்தை அடக்குவதற்கு, கொள்ளைத் தடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. 1995–ல் திருட்டு வீடியோக்களைக் கண்டுபிடிக்கவும், தடுக்கவும் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. 2004–ல் இது பலப்படுத்தப்பட்டது.

மகளிர் துயர் துடைக்க, மகளிர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, 1992 ஆம் ஆண்டு, அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்கினேன். இன்று, தமிழ்நாட்டில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

காவல் துறைக்குக் கருவிகளையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் வழங்கினால் மட்டும் போதாது. அவர்கள் நலனைப் பேணும் விதமாக நம்பிக்கையையும் வளர்க்க வேண்டும். 'நம்மீது அக்கறை செலுத்துவோர் உண்டு, நம் நலன்களைப் பேணுவோர் உண்டு, எனவே நமது பணியைத் திறம்படச் செய்யலாம், நிம்மதியாகச் செய்யலாம்' என்னும் நம்பிக்கையை நாம் காவலர்களிடம் ஏற்படுத்தவும் வேண்டும். எனவே, காவலர் நலனுக்கான பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நான் நாளும் எடுத்து வருகிறேன். அதில் ஒன்றுதான், காவலருக்குச் செம்மையான வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

காவலர்களுக்கு வீட்டு வசதி வழங்க ஏற்படுத்தப்பட்ட காவலர் வீட்டு வசதிக் கழகம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இழுத்து மூடப்பட்டிருந்தது. 1991–ல் நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், அதற்குப் புத்துயிர் வழங்கினேன். இதன் காரணமாக, அதிக எண்ணிக்கையிலான குடியிருப்புகள், இப்போது காவல் துறையில் கட்டப்படுகின்றன. 2001 முதல் இதுவரையில் இக்கழகம் 8,764 வீடுகளைக் கட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போதுள்ள மொத்த காவலர் குடியிருப்புகளின் எண்ணிக்கை 41,749 ஆகும். 28–2–2005 வரையிலான அனுமதிக்கப்பட்ட மொத்தக் காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 95,679. இதில் 41749 பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இது, கிட்டத்தட்ட 44 விழுக்காடு ஆகும். இவ்வாறு அதிக அளவில் காவலர்களுக்கு வீட்டு வசதி வழங்கி உள்ள மாநிலங்களில் தமிழகம் ஒன்று என்ற பெருமையைக் கொண்டு விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் உயிர்ப்பித்து வைத்த இந்தத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், ஐ.எஸ்.ஓ. 2000 தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறைக்குத் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்வதிலும், நமது பணி முன்னோடியாகும். காவல் துறையில் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றினை, முதன்முறையாகத் தமிழ்நாட்டில், 1991–ல் நான் தோற்றுவித்தேன். இந்தச் சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம், தற்போது காவல் துறைக்குத் தேவையான காவலர்கள், பெண் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், பெண் உதவி ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். 1990–ல் தமிழகக் காவல் துறையின் மொத்தப் பணியாளர்கள் 60,532 ஆகும். இன்றைய எண்ணிக்கை 95,679 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எண்ணிக்கைப் பெருக்கம்,



எனது முயற்சியால் உண்டாக்கப்பட்ட தேர்வாணையத்தின் பணியால் ஏற்பட்டது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001 முதல் இதுவரை 17,049 காவல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர்த்து, தற்போது 2,449 காவல் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் 682 உதவி ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு உத்தரவு வழங்கியுள்ளது. இந்தக் காவல் பணியாளர்களின் அதிகரிப்பு, மக்களுக்குச் சிறப்பான சேவை செய்வதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு, காவலர் எண்ணிக்கையை அதிகரித்ததுடன் இல்லாமல், புதிய அணிகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. உளுந்தூர்ப்பேட்டையில் 1995–ல் ஒரு சிறப்புக் காவல் அணி தொடங்கப்பட்டது. 2002–ல் சிறப்புப் படை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது தவிர, மகளிர் படை 2003–ல் (Women Battalion) புதிதாக உருவாக்கப்பட்டது.

இவ்வாறு, தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தை நான் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறேன் என்பதைத் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று, இந்தியாவிலேயே சிறந்த ஆயுதங்களும், கருவிகளும் பெற்ற காவல் துறை என்னும் பெருமை, தமிழ்நாடு காவல் துறைக்கே சொந்தம். மற்ற மாநிலங்கள் கண்டு பொறாமைப்படும் அளவுக்குத் தமிழ்நாடு காவல் துறை நவீனப்படுத்தப்பட்டு இருக்கிறது. காவலர்களின் ஊக்கமும் உயர்ந்துள்ளது.

பிற்பகல் 12–40

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன் – மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் – யானைகளை இரக்கமின்றி கொன்று குவித்த அசுரன்–ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் – தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல், கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு – இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கு எல்லாம், 18–10–2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மனித வேட்டை இதன்மூலம் ஒரு முடிவுக்கு வந்தது.

வீரத்திலும், தீரத்திலும் சிறந்தது தமிழ்நாடு என்ற உண்மையை அண்மையில் நிரூபித்த நிகழ்ச்சிதான் வீரப்ப வதம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அந்த வீரப்பனுக்கு வக்காலத்து வாங்குகிறவர்களும் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள், வீரப்பனை வீராதி வீரனாகச் சித்திரிக்க முயற்சி செய்கிறார்கள். அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பவும் துடிக்கிறார்கள். இது எவ்வளவு அவமானகரமானது என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. சுயநலத்துக்காக அப்பாவி யானைகளையும், மனிதர்களையும் வீரப்பன் சுட்டுக் கொன்றானே, அது வீரமா? அது கோழைத்தனம் அல்லவா?

பொது நலத்துக்காக, தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் போராடுகிறவர்களே வீரர்கள். தங்கள் குடும்பத்திற்காக, தங்களது குல விளக்குகள் கோலோச்ச வேண்டும் என்பதற்காக, யாரைப் பலி கொடுக்கலாம் என்று திரிபவர்கள் எல்லாம், வீரர்களாகிவிட மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

செஞ்சிக் கோட்டை ஏறுபவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜா ஆக முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) – இது பழமொழி.

நான் இப்போது ஒரு புதுமொழி சொல்கிறேன்.

தண்டவாளத்தில் தலை வைத்துப் படுப்பவர்கள் எல்லாம் வீரனாக ஆக முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

நள்ளிரவில், அடர்ந்த காடுகளில், எந்தப் புதரில் இருந்து எந்த விலங்கு தாக்கும், எந்தப் பக்கம் இருந்து கோழை வீரப்பனின் குண்டுகள் பாயும் என்று தெரியாத நிலையில், ஊண் உறக்கம் இன்றிப் பாடுபட்டார்களே, சிறப்பு அதிரடிப்படை வீரர்கள், அவர்களே வீரர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வீரர்களுக்கு, மீண்டும் ஒரு முறை எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன்முறை, தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவை எந்த வடிவத்தில் வந்தாலும், அவற்றை எதிர்கொண்டு வீழ்த்தி, அச்சம் தமிழகத்தை அணுகாதபடி பார்த்துக்கொள்வதில், நான் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், தமிழகம் இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது.



*1992* ஆம் ஆண்டு, சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின்கீழ், விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதோடு, அவர்களது நடவடிக்கைகளை ஒடுக்கும்வகையில், அத்தடையானது ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது. அதுபோலவே, குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழும், தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு எடுத்துவரும் கடுமையான தொடர் நடவடிக்கைகளின் காரணமாக தீவிரவாதிகளும், போராளிகளும் தற்போது செயலிழந்து உள்ளார்கள்.

*2002* ஆம் ஆண்டு, நக்சல் இயக்கம், தமிழ்நாட்டில் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியபோது, அது முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. நக்சல் இயக்கத்தை *2004* ஆம் ஆண்டு, *1908* ஆம் ஆண்டைய குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் எனது அரசு தடை செய்துள்ளது. இவ்வாறு, அதிதீவிரமான எச்சரிக்கை உணர்வோடு கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு, தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதில் தனித் திறமையும், அதனால் தனிப் பெருமையும் பெற்று விளங்குகிறது, தமிழ்நாடு காவல் துறை. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டம்–ஒழுங்கைக் காப்பதும், குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதும், வளர்ச்சிக்கான சூழ்நிலையைப் பலப்படுத்தும். இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சிக்கான சிறந்த சூழல் தமிழகத்தில் நிலவுவதற்கு, சட்டம்–ஒழுங்கைக் காப்பதிலும், குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதிலும், காவல் துறையின் சிறந்த செயல்பாடுகளே காரணம் ஆகும். காவல் துறையின் இந்தச் சிறந்த செயல்பாடுகளுக்கு என்ன காரணம்? சட்டத்தை நிலைநாட்டுவதற்கு, நான் அவர்களுக்கு அளித்துள்ள சுதந்திரம் காரணம்; (மேசையைத் தட்டும் ஒலி) நான் அளித்து வரும் ஊக்கம் காரணம்; (மேசையைத் தட்டும் ஒலி) நான் அளித்துவரும் வழிகாட்டுதல் காரணம்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

*பிற்பகல் 12–45*

*2001*–ல் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைக்க தீவிர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, குற்றங்கள் குறைந்துள்ளன. *2004*–ஆம் ஆண்டில் ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை, வழிப்பறி, கன்னக்களவு ஆகிய குற்றங்கள், முறையே *73, 72, 464* மற்றும் *4,147* ஆகும். இவை கடந்த எட்டு ஆண்டுகளில்,

மிகக் குறைந்த எண்ணிக்கைகள் ஆகும். அதே சமயத்தில் குற்றக் கண்டுபிடிப்பு சதவீதம் 84 ஆக உயர்ந்துள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளில் இதுவே மிக உயர்ந்த அளவாகும். குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், இந்தியாவிலேயே மிகச் சிறந்து விளங்கும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் விளங்குகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறைக்கு நான் அளித்துவரும் ஊக்கமும், ஆதரவும் காவலர்கள் உற்சாகத்துடன் செயல்பட்டு, தமிழகத்தில் குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவீதத்தை உயர்த்தி, சாதனை படைக்க உறுதுணையாக அமைந்தன.

குற்ற நிகழ்வுகளில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும், விருப்பு வெறுப்பு ஏதுமின்றி, வேண்டியவர் வேண்டாதவர் என்று வேறுபடுத்திப் பார்க்காமல், சட்டத்தின்முன் நிறுத்தி, உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தருவதில் தமிழ்நாடு காவல் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

7–2–2005 அன்று மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் ஆற்றிய பதில் உரையில், ஒரு கொலை வழக்கில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 44 நாட்களிலேயே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு விரைவு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரப்பட்டது என்பதையும்; இவ்வாறு விரைந்து தண்டனை பெற்றுத் தரப்பட்டது, இந்தியாவிலேயே முதன்முறை என்பதையும் நான் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதையும் வெல்லும் அளவுக்கு ஒரு சாதனை தற்போது படைக்கப்பட்டுள்ளது. அதையும் தமிழ்நாடு காவல் துறைதான் நிகழ்த்தி இருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணா சாலை நடைபாதையில் 7–2–2005 அன்று ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலையாளி உடனடியாகக் கைது செய்யப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்ட 15–வது நாளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், 8-3-2005 அன்று, குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அதாவது, வழக்கு பதிவுசெய்யப்பட்ட 29 நாட்களில்,



ஒரு கொலைக் குற்றத்தில், குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தரப்பட்டது. இது ஓர் அகில உலக சாதனை என்றே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள் பேசுகின்றபோது, தமிழகத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு Annual Plan Outlay 9,100 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டி, இது மத்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு வழங்கிய பரிசு என்று குறிப்பிட்டார். மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள், ஏதோ மத்திய அரசு, பரிசாக, தமிழ்நாட்டிற்கு 9,100 கோடி ரூபாய் வழங்கப் போகிறது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார் போலும். ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மொத்த ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ. 9,100 கோடி. இதில், மத்திய அரசின் பங்கு 2,604.49 கோடி ரூபாய்தான். மாநில அரசு, தனது சொந்த நிதியிலிருந்து செலவழிக்க வேண்டியது 6,495.51 கோடி ரூபாய். ஆக, ஒட்டுமொத்த ஆண்டு ஒதுக்கீட்டில், மத்திய அரசின் பங்கு 28.62 சதவீதமாகும். மாநில அரசின் சொந்த ஒதுக்கீடு 721.38 சதவீதமாகும் என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும், திருமதி மகேஸ்வரி அவர்கள் பேசுகின்றபோது, காவல் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று சொன்னார். அவர் ஏற்கெனவே பேசுகின்றபோது, காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி அதிகமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அதிகமான பணியாளர்களை நியமித்தால், அதிகமாக செலவாகுமே என்றேன். அதற்கு அவர், இருக்கின்ற நிதியை, ஒதுக்கப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாக செலவு செய்ய வேண்டும் என்று இங்கே அறிவுரை கூறினார். இப்போதுதான் நான் விவரித்தேன்; காவல் துறைக்கு எப்படியெல்லாம் ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்கிறோம் என்று விவரித்தேன். இதில் எல்லாமே ஆக்கபூர்வமான செலவுதான். எது வீணான செலவு? காவல் துறையினருக்குச் சம்பளம் கொடுப்பது, சீருடைகள் வழங்குவது, ஆயுதங்கள் வழங்குவது, தோட்டாக்களை வழங்குவது, வாகனங்களை வழங்குவது, தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குவது, Night Vision Binoculars வழங்குவது, பல ரகமான வாகனங்களை வழங்குவது, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது, பல படிகளைக் கொடுப்பது இவை எல்லாம் ஆக்கபூர்வமான செலவுகள்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கருத்துகளைச் சொல்லும் முன்பு, அவை அர்த்தமுள்ள கருத்துகள்தானா என்பதைச் சிந்தித்துச் சொல்ல வேண்டும் என்று திருமதி மகேஸ்வரி போன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இப்போது 2005-2006 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இந்த அவைக்கு வெளியிட விரும்புகிறேன். இவை, தமிழ்நாடு காவல் துறைக்கான புதிய அறிவிப்புகள்:

**1. சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தோடு இணைக்கப்பட்ட 41 சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்களில், பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகரக் காவல் துறைக்குப் புதிய பிரிவுகளை ஏற்படுத்தி, கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல்–Augmenting the strength of 41 Law & Order Police Stations merged with Chennai City Police and sanction of new units and infrastructure for the expanded Chennai Commissionerate:**

சென்னை மாநகரம், இன்று வளர்ந்துவரும் வேகத்தைக் கணக்கில் கொண்டு, நாளைய சென்னைப் பெருநகரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நிர்ணயிப்பது, நமது கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றும்பொருட்டும், இந்தியாவின் கிழக்கு வாயிலாக, சென்னை அமைய வேண்டும் என்னும் எனது தொலைநோக்குப் பார்வையின் செயல்பாடாகவும், உலகத் தரம் மிக்க கட்டமைப்பையும், ஏனைய வசதிகளையும் கொண்ட மிகப் பெரும் மாநகரமாக சென்னையை உருவாக்க ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை நான் அமல்படுத்தி வருகிறேன்.

நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் ஆகியவற்றின் விரைவான வளர்ச்சியால், காவல் துறையினர் சந்திக்க வேண்டிய புதிய சவால்களைக் கருத்தில் கொண்டும், சென்னை மற்றும் சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குடிமக்களுக்குப் பாதுகாப்பான அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடும், குற்ற நிகழ்வுகளையும், பெருகிவரும் போக்குவரத்தையும் திறம்படக் கையாளவும், பொது மக்களின் குறைகளைத் தீர்க்கவும், செங்கை கிழக்கு காவல் மாவட்டத்தில் அமைந்துள்ள 41 சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்களையும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், சென்னைப் பெருநகரக் காவல் துறை ஆணையரின்கீழ், சென்னை மாநகர ஆணையரக அதிகார வரம்பின்கீழ், இணைக்க நான் ஆணையிட்டேன்.



இதன் விளைவாக, 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளிட்ட 155 காவல் நிலையங்கள், புதிய காவல் துறை ஆணையரகத்தின் அதிகார வரம்பின்கீழ் வந்துள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம், இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பெருநகரக் காவல் ஆணையரகங்களில் ஒன்று என்ற தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக உருவெடுத்துள்ள சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகத்துக்கு, காவல் துறைத் தலைவர் பதவி நிலையில், கூடுதல் காவல் ஆணையர் பதவி ஒன்றையும், காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) பதவி ஒன்றையும், 3 துணை ஆணையர்கள் (சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவு) மற்றும் ஒரு உதவி ஆணையர் பதவியையும் உருவாக்க, நான் ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளேன்.

செங்கை கிழக்கு மாவட்டத்திலிருந்து இணைக்கப்பட்ட 41 சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டு, கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். அது மட்டுமின்றி, இரண்டு கூடுதல் ஆயுதப் படைப் பிரிவுகளும்—Platoons—வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்படும். விரிவுபடுத்தப்பட்ட பகுதியில், போக்குவரத்துக் காவல் நிலையங்களுக்கும் மற்றும் போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் கூடுதல் பணியிடங்கள் வழங்கப்படும். இவை அனைத்துக்கும் தேவையான பணியிடங்களை நிரப்புவதற்கென கூடுதலாக 3 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், 34 ஆய்வாளர்கள், 104 உதவி ஆய்வாளர்கள், 236 தலைமைக் காவலர்கள், 392 முதல் நிலைக் காவலர்கள் மற்றும் 1104 இரண்டாம் நிலைக் காவலர்கள், ஆக மொத்தம் 1873 பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும். மேலும், கூடுதலாக 54 அமைச்சுப் பணியாளர் பணியிடங்களும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

இதுவன்றி, தேவையான ஆயுதங்கள் வழங்கப்படுவதுடன் இதர கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

இவற்றுக்காக, மொத்தம் 20.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும் சட்டம்-ஒழுங்கு, குற்றத் தடுப்பு மற்றும் போக்குவரத்து ஆகிய பணிகள் இதனால் மேம்பாடு அடையும்.

*பிற்பகல் 12–55*

**2. கரூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மாவட்டக் காவல் அலுவலகங்கள் கட்டுதல்—Construction of District Police Offices in Karur and Krishnagiri Districts:**

மாவட்டக் காவல் அலுவலகங்கள், தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்து கட்டப்பட்டால்தான் அனைத்துக் கட்டமைப்புகளும் ஒருங்கே அமைந்ததாக இருக்க முடியும். எனவேதான், அனைத்து மாவட்டக் காவல் அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்க வேண்டும் என்பதில் நான் முனைப்புடன் உள்ளேன். 2001 ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, 8 மாவட்டக் காவல் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணை பிறப்பித்துள்ளேன். புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களான கரூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாவட்டக் காவல் அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாவட்டக் காவல் நிருவாகத்தின் அன்றாடப் பணிகளுக்குத் தேவையான வசதிகள் அவ்வாடகைக் கட்டடங்களில் இல்லை. எனவே, அனைத்து நிருவாகக் கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பில், புதிய மாவட்டக் காவல் அலுவலகங்கள் ஒவ்வொன்றும் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மாவட்டங்களில் கட்டப்படும்.

**3. சென்னை மாநகரக் காவல் பணியாளர்களுக்கு 1,000 குடியிருப்புகள் உட்பட காவல் பணியாளர்களுக்கு மொத்தம் 4,000 குடியிருப்புகள் கட்டுதல்—Construction of 4,000 Quarters for Police Personnel including 1,000 for Chennai City Police:**

காவலர்களுக்கான குடியிருப்புகள், அவர்களது பணியிடங்களுக்கு அருகிலேயே அமைத்துத் தரப்பட வேண்டும். அவ்வாறு அமைத்துத் தருவதுதான், அவர்களது செயல்பாட்டுத் திறன் மேம்பட வழிவகுக்கும். அவ்வாறு அமைக்கப்படும் குடியிருப்புகளும், நேர்த்தியானதாக அமைய வேண்டும் என்பதில், நான் கண்ணுங்கருத்துமாக உள்ளேன். எனவேதான், காவலர்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகளின் பரப்பளவை 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக உயர்த்திட நான் ஆணையிட்டேன். கடந்த மூன்று ஆண்டுகளில், மொத்தம் 8,000 குடியிருப்புகள் கட்ட, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனவேதான், அகில இந்திய அளவில் காவலர்களின் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்வதில், முன்னணி வகிக்கும் மாநிலங்களில், தமிழகமும் ஒன்றாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையில் தற்போது பணியாற்றிவரும் 95,679 காவல்



பணியாளர்களில், 41,749 பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது, 44 சதவீத அளவில் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்வதாக அமைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் மொத்தம் 8,764 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2005–2006 ஆம் ஆண்டில், சென்னை மாநகரத்தில் அனைத்து நிலை காவல் பணியாளர்களுக்குமாக 1,000 குடியிருப்புகளும், மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 3,000 குடியிருப்புகளும் — ஆக மொத்தம், 4,000 குடியிருப்புகள், 173 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். 2001 முதல் 2006 வரை இந்த ஆட்சிக் காலத்தில், எனது அரசு காவல் துறையினருக்காக 12,764 குடியிருப்புகளைக் கட்டி சாதனை படைக்கவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது மதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மணி அவர்கள் கவனிக்கவும்.

**4. திறன் மேம்பாட்டுப் பள்ளிக்கான கட்டடம் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்**—இதுதான் உங்கள் கோரிக்கையாக நீங்கள் வைத்தீர்கள்—**Sanction of Buildings and infrastructure for the proposed School of Excellence:**

காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் நான்காம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை சீரிய கல்வி பெற, விடுதியுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பள்ளி—School of Excellence— தமிழ் நாட்டில் உருவாக்கப்படும் என்று ஏற்கெனவே இந்த அவையில் நான் அறிவித்துள்ளேன். இத்திட்டத்தினை மேற்கொள்ள, ஒரு திட்ட அலுவலர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பள்ளிக்கான கட்டடம் மற்றும் கட்டமைப்பு வசதிக்காக 5 கோடி ரூபாயும், அதற்கென ஏற்படுத்தப்படும் மூல நிதிக்காக—Corpus Fund—க்காக 5 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 10 கோடி ரூபாய் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. சென்னை மாநகரக் கட்டுப்பாட்டு அறைக்கு 41 சுற்றுக் காவல் வாகனங்கள் வழங்குதல்—Sanction of 41 Patrol vehicles for Chennai City Control Room:**

குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதில், சுற்றுக் காவல், பெரும்பங்கு வகிக்கிறது. சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தின் பயன்பாட்டில், தற்போது 77 சுற்றுக் காவல் வாகனங்கள் உள்ளன. சென்னை மாநகரக் காவல் எல்லையுடன் புதிய பகுதிகள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், சுற்றுக் காவல் மற்றும் குற்றத் தடுப்புப் பணிகளுக்கு வாகனங்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே, 2.04

கோடி ரூபாய் செலவில் 41 புதிய சுற்றுக் காவல் வாகனங்கள் சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்துக்கு வழங்கப்படும்.

*பிற்பகல் 1–00*

**6. சென்னை மாநகரில், இரவு மற்றும் பகல் நேரச் சுற்றுக் காவல் பணிக்காக, புதிதாக 90 மோட்டார் சைக்கிள்கள் வழங்குதல்—Sanction of 90 motor cycles for day and night patrol in Chennai City:**

சென்னை மாநகரின் நெரிசலான பகுதிகளில் குற்றங்களைக் கட்டுப்படுத்த, மோட்டார் சைக்கிளில் சுற்றுக் காவல் பணி மேற்கொள்ளப்படுகிறது. பகல் நேரச் சுற்றுக் காவல் பணிக்கென, 75 மஞ்சள் நிற வாகனங்களும், இரவு நேர சுற்றுக் காவல் பணிக்கென, 75 நீல நிற வாகனங்களும் என்னால் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு இது பெரிதும் உதவிகரமாக அமைந்துள்ளது. எனவே, மோட்டார் சைக்கிள் சுற்றுக் காவல் பணியினை மேலும் விரிவுபடுத்தும்வகையில், 67.25 இலட்சம் ரூபாய் செலவில், புதிதாக 90 மோட்டார் சைக்கிள்கள் சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்துக்கு வழங்கப்படும்.

**7. சென்னை மாநகரில் போக்குவரத்துக் காவலர்களுக்கு 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்குதல்—Sanction of 50 motorcycles for traffic personnel in Chennai City:**

போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், மோட்டார் வாகனச் சட்டத்தை அமல்படுத்தவும், சாலைகளில் போக்குவரத்துக் காவலர்கள் சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுவது அவசியம். எனவே, 2004 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் போக்குவரத்து மார்ஷல்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்தப் போக்குவரத்துச் சுற்றுக் காவல் திட்டத்தினை விரிவுபடுத்தும்வகையில் இந்த ஆண்டு, மேலும் 50 மோட்டார் சைக்கிள்கள், 37.36 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாநகரப் போக்குவரத்து மார்ஷல்களுக்கு வழங்கப்படும். இதனால், போக்குவரத்தை நெறிப்படுத்தல் மற்றும் போக்குவரத்துச் சட்டங்களை அமல்படுத்துதல் ஆகிய பணிகள் இன்னும் திறம்பட மேற்கொள்ளப்படும்.

**8. சென்னை மாநகர மத்தியக் குற்றப் பிரிவை வலுப்படுத்துதல்—Strengthening of the Central Crime Branch in Chennai City:**

சென்னை மாநகர மத்தியக் குற்றப் பிரிவு, ஆண்டு ஒன்றுக்கு இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் வரும், சுமார் 2,000 வழக்குகளைப் புலன் விசாரணை செய்து குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியினைச் செய்து



வருகின்றது. இந்தப் பணியினைக் கையாள தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை, போதுமானதாக இல்லை. இது தவிர, மோசடிக் குற்றங்கள், வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றுதல், ஆவணங்களைத் திருத்துதல், கந்து வட்டி வாங்குதல், கணினி சார் குற்றங்கள் ஆகிய பல்வகைப்பட்ட குற்றங்களைக் கையாளவும், கூர்ந்து கண்காணிக்கும் பணியினை மேற்கொள்ளவும், சென்னை மாநகரக் குற்றப் பிரிவு மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கென சென்னை மாநகர மத்தியக் குற்றப் பிரிவுக்கு 5 ஆய்வாளர்கள், 10 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 20 இதர காவல் பணியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் 5 Jeep–கள், ஒரு டெம்போ டிராவலர் வேன் மற்றும் 10 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படும். இதற்குத் தொடராச் செலவினம் உட்பட மொத்தம் 78.47 இலட்சம் ரூபாய் செலவாகும்.

**9. சென்னை மாநகரில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணிக்காகக் கூடுதலாக மூன்று ஆயுதப் படைப் பிரிவுகள்–Platoons–ஏற்படுத்துதல்—Sanction of 3 additional Platoons for Chennai City Police, to provide security for protected persons:**

தற்போது, சென்னை மாநகரில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய பிரமுகர்கள் மற்றும் சென்னைக்கு வருகை புரியும் மிக முக்கிய பிரமுகர்கள் ஆகியோருக்கு, சென்னை மாநகர ஆயுதப் படைப் பிரிவினர், பாதுகாப்பு அளித்து வருகின்றனர். இதைத் தவிர, மத்திய உள் துறையால் பாதுகாப்பு அளிக்க அங்கீகரிக்கப்பட்ட மிக முக்கியப் பிரமுகர்களும், சென்னைக்கு வந்து செல்வதால், அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே, இக்கூடுதல் பணிச் சுமையைக் கருத்தில்கொண்டு 2.36 கோடி ரூபாய் செலவில், சென்னை மாநகர ஆயுதப் படைப் பிரிவிற்கு மூன்று கூடுதல் படைப் பிரிவுகள் உருவாக்கப்படும். கூடுதலாக மூன்று படைப் பிரிவுகள்—Platoons—ஏற்படுத்தப்படுவதால், சென்னை மாநகரத்தில் ஏற்படும் சட்டம்–ஒழுங்கு மற்றும் குற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பணிகளில், இப்படை அணியினர் ஈடுபடுத்தப்படுவார்கள். இதனால் மாநகரக் காவல் பணிகள் மேம்படும்.

**10. தாம்பரத்தில் புதிதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் உருவாக்குதல்—Opening of new All Women Police Station at Tambaram:**

மகளிர் தயக்கம் இன்றியும், அச்சம் இன்றியும் காவல் நிலையங்களுக்குச் சென்று தங்கள் குறைகளைக் கூறி அவற்றுக்கான தீர்வுகளைப் பெற

ஏதுவாக, என்னால் 1992 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டவையே அனைத்து மகளிர் காவல் நிலையங்களாகும். ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது, எனது கொள்கை. அதன் அடிப்படையில் கடந்த நான்கு ஆண்டுகளில் 137 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது மொத்தம் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரக் காவல் எல்லை விரிவாக்கப்பட்டு, புதிதாக, தாம்பரம் உட்கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய உட்கோட்டத்திலும் ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம், 24 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இவ்வாறு அமைக்கப்படவுள்ள இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தினால் தாம்பரம், சங்கர் நகர் மற்றும் குரோம்பேட்டை பகுதிகளில் உள்ள மகளிர் பயன்பெறுவார்கள்.

பிற்பகல் 1–05

**11. சென்னை மாநகர சாலை சந்திப்புகளில் போக்குவரத்தை நிர்வகிக்க 20 கேமிராக்களை பொருத்துதல்—Installation of 20 cameras for junction traffic management in Chennai City:**

சென்னை மாநகரில், வாகனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், போக்குவரத்தைச் சீர் செய்ய, 133 சாலை சந்திப்புகளில், தற்போது தானியங்கி போக்குவரத்து சைகை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் நவீனக் கட்டுப்பாட்டு அறை ஒன்று அமைக்கப்பட்டு, எட்டுச் சாலை சந்திப்புகளில் கேமிராக்கள் பொருத்தப்பட்டு, போக்குவரத்து கண்காணிக்கப்பட்டும், ஒழுங்குபடுத்தப்பட்டும் வருகிறது.

இதனை விரிவுபடுத்தும்வகையில், 2.01 கோடி ரூபாய் செலவில், மேலும் 20 சாலை சந்திப்புகளில் கேமிராக்கள் பொருத்தப்படும்.

**12. 242 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர் பணியிடங்களைத் தொழில்நுட்ப ஆய்வாளர் பணியிடங்களாக நிலை உயர்த்துதல்—Upgradation of 242 posts of Sub–Inspector (Technical) to Inspector (Technical):**

1974 முதல் 1985 வரையிலான காலகட்டத்தில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுள், 242 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள் இதுகாறும் எந்தப் பதவி உயர்வும் பெறவில்லை. இவ்வாறு பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு பெறாமல் இருக்கும் இந்த 242 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள், புதிய உத்வேகத்துடன் பணியாற்ற



ஊக்குவிக்கும்வகையில், தொழில்நுட்ப ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். இதனால், தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள் பணி நிலையில் நீண்ட காலமாக நிலவி வந்த தேக்க நிலை நீக்கப்படும். இதற்கு, ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு 15.77 இலட்சம் ரூபாய் ஆகும்.

**13. மாநில நுண்ணறிவுப் பிரிவில் ஒரு முதன்மை மேலாளர் மற்றும் நான்கு முதுநிலை மேலாளர் பணியிடங்களைப் புதிதாக ஏற்படுத்துதல்—Sanction of one post of Chief Manager and four posts of Senior Manager in the State Intelligence Wing:**

மாநில நுண்ணறிவுப் பிரிவில் பணியாற்றும் உதவியாளர்கள், உதவி மேலாளர் மற்றும் மேலாளர் ஆகிய நிலைகள்வரைதான் பதவி உயர்வு பெறமுடியும். ஆனால், காவல் துறையில், மற்ற பிரிவுகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள், முதுநிலை நிருவாக அலுவலர் மற்றும் முதன்மை நிருவாக அலுவலர் என்ற நிலைவரை பதவி உயர்வு பெற இயலும். எனவே, நுண்ணறிவுப் பிரிவு உதவியாளர்களும், அதேபோன்ற பதவி உயர்வு வாய்ப்பைப் பெறும்வகையில், மாநில நுண்ணறிவுப் பிரிவில் ஒரு முதன்மை மேலாளர் மற்றும் நான்கு முதுநிலை மேலாளர் என்ற உயர்நிலைப் பதவிகள் ஏற்படுத்தப்படும். இதற்கு, ஆண்டு ஒன்றுக்கு 13.07 லட்சம் ரூபாய் செலவு ஆகும்.

**14. காவல் சுருக்கெழுத்துத் துறையில் பணியாற்றும் அறிக்கையாளர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் பதவி நிலைகளை உயர்த்துதல்—Upgradation of posts in the Police Shorthand Bureau to improve promotional opportunities:**

காவல் சுருக்கெழுத்துத் துறையில் உள்ள அறிக்கையாளர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகளை அதிகரிக்கும்வகையில் ஒரு முதன்மை அறிக்கையாளர்—Chief Reporter—பதவி, முதுநிலை முதன்மை அறிக்கையாளர்—Senior Chief Reporter—பதவியாகவும், 15 முதுநிலை அறிக்கையாளர்—Senior Reporter—பதவிகள், முதன்மை அறிக்கையாளர்—Chief Reporter— பதவிகளாகவும், 19 இளநிலை அறிக்கையாளர்—Junior Reporter—பதவிகள், முதுநிலை அறிக்கையாளர்—Senior Reporter—பதவிகளாகவும் நிலை உயர்த்தப்படும். இதற்காகும் ஆண்டுச் செலவு, 3.45 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் மூலம், அறிக்கையாளர்கள் ஒரே பதவியில் அதிக ஆண்டுகள் பணிபுரிய வேண்டியுள்ள தேக்க நிலை நீக்கப்படுகிறது.

**15. காவல் சுருக்கெழுத்துத் துறையில் மாநிலம் முழுவதும் கூடுதலாக 30 இளநிலை அறிக்கையாளர் பதவிகளை ஏற்படுத்துதல்—Sanction of 30 additional posts of Junior Reporter in Police Shorthand Bureau:**

மாநில தலைமையிடத்திலும் மற்றும் மாவட்டங்களிலும் உள்ள காவல் சுருக்கெழுத்துத் துறையில் பெருகிவரும் பணிச் சுமையைக் கருத்தில்கொண்டு, இத்துறையில் பணிபுரியும் இளநிலை அறிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, காவல் சுருக்கெழுத்துத் துறையில் கூடுதலாக 30 இளநிலை அறிக்கையாளர் பதவிகள் உருவாக்கப்படும் இதற்காகும் ஆண்டுச் செலவு 45.30 இலட்சம் ரூபாய் ஆகும்.

**16. வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை மற்றும் மோப்ப நாய் படைப் பிரிவு ஆகியவற்றில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவரும் 15 முன்னாள் இராணுவத்தினரின் பதவிகளை நிரந்தரமாக்கல்—Permanent absorption of 15 Ex–Servicemen, serving in Bomb Detection and Disposal Squad and Dog Squad on Contract Basis:**

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை மற்றும் மோப்ப நாய் படைப் பிரிவில், ஒப்பந்த முறையில் பணிபுரிந்து வந்த முன்னாள் இராணுவத்தினர் 12 பேரை, கடந்த 1996 ஆம் ஆண்டு பணி நிரந்தரம் செய்து நான் ஆணையிட்டேன். 1995 முதல் 2000 ஆம் ஆண்டு வரை, முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்புப் பிரிவு மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 15 முன்னாள் இராணுவத்தினரின் பணி தற்போது நிரந்தரமாக்கப்படும். இந்த முன்னாள் இராணுவத்தினர், பணி ஓய்வு பெறும்போது, விதிகளின்படி ஓய்வூதியம் பெற்றுப் பயனடைவர். இதனால், ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் செலவு 18.18 இலட்சம் ரூபாய் ஆகும்.

பிற்பகல் 1–10

**17. தமிழ்நாடு மின்வாரியம், வங்கிகள் மற்றும் முக்கிய அமைப்புகளில் பாதுகாப்புப் பணி புரிய தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் கூடுதலாக ஒரு அணி —Battalion— ஏற்படுத்துதல் — Sanction of an additional Battalion for the Tamil Nadu Special Police for providing guards to the Tamil Nadu Electricity Board, Banks and other Vital Installations:**

தமிழ்நாடு மின்வாரியம், வங்கிகள் மற்றும் முக்கிய அமைப்புகளின் பாதுகாப்புப் பணியினைத் தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல்



படையினர் மற்றும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆயுதப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். சட்டம்–ஒழுங்கு, பாதுகாப்பு/வழிக்காவல் ஆகிய வாலாயப் பணிகளிலிருந்து இவர்கள் இத்தகைய சிறப்புப் பணிகளுக்கு அனுப்பப்படுவதால், அவர்களின் வேலை பளு கூடுகிறது. எனவே, தமிழ்நாடு மின்வாரியம், வங்கிகள் மற்றும் முக்கிய அமைப்புகளின் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கென தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில், கூடுதலாக ஒரு அணி—Battalion—உருவாக்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் செலவாகும்.

இங்கே பேசிய நிறைய உறுப்பினர்கள், காவல் துறை பணியாளர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டீர்களே, ஒரு Battalion என்றால், ஏறக்குறைய ஆயிரம் பேர். ஆயிரம் பேரைக் கூடுதலாகப் பணியமர்த்தினால், ஆண்டு ஒன்றுக்கு ஆகிற செலவு 12 கோடி ரூபாய். இதை நினைவில்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**18. கடலோரப் பாதுகாப்புப் படைக்கு என தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் தனி அணி ஒன்றினை ஏற்படுத்துதல்—Sanction of one Tamil Nadu Special Police Battalion, exclusively for Coastal Security Group:**

கடலோரப் பாதுகாப்புப் படை என்ற தனிப் படையை உருவாக்க, கடந்த 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் ஆணையிட்டேன். இக்கடலோரக் காவல் படையில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலிருந்து 1,050 காவலர்கள், சுழற்சி முறையில் அயற்பணியில் பணியாற்றுகின்றனர். கடலோரப் பாதுகாப்புப் படைக்கென தனியே காவலர்கள் இருந்தால்தான், அவர்கள் பாதுகாப்பு அளிக்கும் பகுதியைக் குறித்த முழு விவரத்தையும் நன்கு தெரிந்து கொண்டு சிறப்புறப் பணியாற்ற இயலும். எனவே, கடலோரப் பாதுகாப்புப் படைக்கென தனி அணி ஒன்று —exclusive Battalion— ஏற்படுத்தப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 8.41 கோடி ரூபாய் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கடலோரப் பாதுகாப்புப் படையில், தற்போது சுழற்சி முறையில் பணிபுரியும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் இப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, சட்டம்–ஒழுங்கு மற்றும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தமிழ்நாட்டுக் காவல் துறை வரலாற்றிலேயே, ஒரே நேரத்தில், ஒரே நாளில், இரண்டு Battalion–கள் உருவாக்கப்படுவது, (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு புதிய Battalion–கள் உருவாக்கப்படுவது, இதுவே முதன்முறை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**19. குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் புதிய உட்கோட்டங்களுக்காக 100 காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்துதல்—Sanction of 100 additional posts of Deputy Superintendent of Police for Crime, Intelligence Wing and new Sub–Divisions:**

காவல் துறையினரின் பணிச் சுமை, பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனை எதிர்கொள்ளவும், காவல் திறனை மேம்படுத்தவும், குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் புதிய உட்கோட்டங்களுக்காக, கூடுதலாக 100 காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்படும். இதற்காக, ஆண்டொன்றுக்கு 2.29 கோடி ரூபாய் செலவாகும். இதன்மூலம், மாநிலக் காவல் பணி, சிறப்பாகச் செயல்படுவதுடன் பணியாளர் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலையும் களையப்படும்.

**20. 629 தலைமைக் காவலர் பதவிகளைச் சிறப்பு உதவி ஆய்வாளர் பதவிகளாக நிலை உயர்த்துதல்—Upgradation of 629 Head Constables as Special Sub–Inspectors of Police:**

இருபத்தைந்து ஆண்டுகள் காவல் துறையில் பணியாற்றி அதில் பத்து ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணிபுரிந்தவர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி நிலை உயர்த்தப்பட்டு வருகிறது. தற்போது, உள்ளூர்க் காவல் படை, ஆயுதப் படை மற்றும் சிறப்புக் காவல் படையில் பணிபுரியும் மேற்கூறிய தகுதி படைத்த 629 தலைமைக் காவலர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி நிலை உயர்த்தப்படுவார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பணியாளர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தும் இந்த நடவடிக்கைக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 2.43 கோடி ரூபாய் செலவாகும்.



**21. தூத்துக்குடி மாவட்டம், பேரூரணியில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக்கு நிரந்தரப் பணியாளர்களை நியமித்தல்—Sanction of permanent staff for Police Recruit School at Perurani in Thoothukudi District:**

தூத்துக்குடி மாவட்டம், பேரூரணியில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளி, தற்போது அயற் பணியில் அனுப்பப்படும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையை மாற்றி, இப்பள்ளி நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு செயல்படுவதற்கு ஏதுவாக, ஒரு தலைமை சட்ட ஆசிரியர், ஒரு தலைமை கவாத்து—Drill—ஆசிரியர், 6 கூடுதல் சட்ட ஆசிரியர்கள், 4 கவாத்து ஆசிரியர்கள், 12 கூடுதல் கவாத்து ஆசிரியர்கள், 30 காவலர்கள், ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு தட்டச்சர் ஆகிய பதவிகள் உருவாக்கப்படும். 1.43 கோடி ரூபாய் செலவில் இதற்காக மேற்கொள்ளப்படும் பணிகளில் கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கான தொடராச் செலவும் அடங்கும்.

**22. காவல் துறை அமைச்சுப் பணியைச் சார்ந்த ஆறு நேர்முக உதவியாளர் (நிருவாகம்) பணியிடங்களை முதுநிலை நிருவாக அலுவலர் பணியிடங்களாக நிலை உயர்த்துதல்—Upgradation of 6 posts of P.A. (Administration) to Senior Administrative Officer in the Ministerial Service of the Police Department:**

காவல் துறை நிருவாக மேம்பாட்டிற்காக நான்கு காவல் துறை மண்டலங்கள், 2003 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இந்த மண்டல அலுவலகப் பணிகளை மேற்பார்வையிட, முதுநிலை நிருவாக அலுவலர் நிலையில் பணியாளர் தேவை உள்ளது. அது மட்டுமல்லாது, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் காவல் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றிலும், தலா ஒரு முதுநிலை நிருவாக அலுவலர் பதவி அவசியமாகிறது. எனவே, நிருவாக மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள ஆறு நேர்முக உதவியாளர் (நிருவாகம்) பதவிகள், முதுநிலை நிருவாக அலுவலர் பதவிகளாக நிலை உயர்த்தப்படும். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 1.10 இலட்சம் ரூபாய் செலவாகும்.

**23. காலியாக உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுக்குப் பணியாளர்களைத் தெரிவு செய்தல்—Recruitment of Junior Assistants, Typists and Steno-typists to fill up the existing vacancies:**

தற்போது, 172 இளநிலை உதவியாளர், 112 தட்டச்சர் மற்றும் 39 சுருக்கெழுத்துத் தட்டச்சர் மூன்றாம் நிலை பணியிடங்கள், மொத்தம் 323 நிரப்பப்படாமல் உள்ளன. இதன்காரணமாக, காவல் துறை அமைச்சுப் பணியாளர்களுக்குப் பணிச் சுமை அதிகரித்துள்ளது. இந்நிலையைப் போக்கும்வகையில், தற்போது அமலில் உள்ள பணி நியமனத் தடையைத் தளர்த்தி, மேற்சொன்ன பணியிடங்களுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்ய அனுமதி வழங்கப்படும்.

காலியாக உள்ள 39 சுருக்கெழுத்துத் தட்டச்சர் மூன்றாம் நிலை பணியிடங்கள், நேரடியாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்.

172 இளநிலை உதவியாளர்கள், 112 தட்டச்சர்கள் ஆக மொத்தம் 284 பணியிடங்களில் 190 பணியிடங்கள் நேரடியாகவும், எஞ்சியுள்ள 94 பணியிடங்களில் பணியிலிருக்கும்போது இறந்த காவல் துறைப் பணியாளர்களின் வாரிசுகள் கருணை அடிப்படையிலும், பணி நியமனம் செய்யப்படுவர்.

**24. மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கு நிருவாகக் கட்டடம், ஆயுதக் கிடங்கு, ஆயுதக் காப்பறை, ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கென தனித் தனியே குடியிருப்புக் கூடங்கள் கட்டுதல்—Construction of TSP 'Administrative Block', Armoury, Bell of Arms, separate Barracks for men and women at Manimuthar:**

மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, தற்போது பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆயுதங்களை வைப்பதற்கான ஆயுதக் கிடங்கும் அங்கு இல்லை. மேலும், 407 குடியிருப்புகள் மட்டுமே உள்ளதால், ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்குப் போதுமான தங்குமிட வசதி இல்லை. இந்நிலை மாறிட, மணிமுத்தாறில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்குப் புதிதாக நிருவாகக் கட்டடம், ஆயுதக் கிடங்கு, ஆயுதக் காப்பறை, ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித் தனியே குடியிருப்புக் கூடங்கள் ஆகியவை, 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.



**25. சீருந்து அல்லாத 297 காவல் வாகனங்களைக் கழிவு செய்துவிட்டு, அதற்குப் பதிலாக புதிய வாகனங்களை வழங்குதல்—Condemnation and Replacement of 297 Police vehicles, other than cars:**

சீருந்து அல்லாத பிற பல்வேறு வாகனங்களில் கழிவு செய்யப்பட்ட மற்றும் மாற்றப்பட வேண்டிய 297 வாகனங்களுக்குப் பதிலாக, இந்த ஆண்டு 11.61 கோடி ரூபாய் செலவில் சீருந்து அல்லாத புதிய வாகனங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அகராதியிலே அது இருக்கிறதா திரு. மணி அவர்களே! சைக்கிளுக்கு மிதிவண்டி என்றீர்கள். கார் என்பதற்கு சீருந்து இருக்கிறதா?

பிற்பகல் 1–20

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே? கார் என்பதற்கு சீருந்து என்று சொல்வதைவிட மகிழுந்து; சீருந்து என்றால், அது சின்ன பஸ்; மினி பஸ் என்று சொல்கிறார்களே, அதுதான் சீருந்து; பெரிய பஸ் பேருந்து. கார் என்பதற்கு மகிழுந்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மினி பஸ் என்பது சிற்றுந்து. இது சீருந்து.

**திரு. ஜி.கே. மணி:** ஜீப்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய கோரிக்கையெல்லாம்கூட நிறைய பேச்சு வழக்கிலே தமிழ் வர வேண்டும் என்பதுதான். அரசாங்கத்தையோ அல்லது மற்றவர்களையோ குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கம் அல்ல. நாங்கள் உட்பட கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. அதைத்தான் கோரிக்கையாக வைக்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

**26. கழிவு செய்யப்பட்ட மற்றும் மாற்றப்படவேண்டிய 53 பழைய சீருந்துகளுக்குப் பதிலாக புதிய சீருந்துகள் வழங்குதல்—Condemnation and replacement of 53 Cars:**

10 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட 53 சீருந்துகள், தற்போது பழுதடைந்து பயன்படுத்தத் தகுதியற்றவையாக உள்ளன. இவ்வாகனங்களை, மேலும் பழுது பார்ப்பது செலவுக்கு ஏற்ற பயனைத் தராது. எனவே, மேற்படி 53 சீருந்துகளுக்குப் பதிலாக 1.97 கோடி ரூபாய் செலவில் புதிய சீருந்துகள் வாங்கி வழங்கப்படும்.

**27. சென்னை மாநகர நுண்ணறிவுப் பிரிவிற்கு வாகனங்களை வழங்குதல்—Sanction of Vehicles for Intelligence Section of Chennai City:**

சென்னை மாநகர நுண்ணறிவுப் பிரிவின் வாகன வசதியை மேம்படுத்த, இப்பிரிவினருக்கு ஒரு ஜீப்பும், 5 மோட்டார் சைக்கிள்களும் கூடுதலாக வழங்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவு 7.59 இலட்சம் ரூபாய் ஆகும்.

**28. சென்னை, கே.கே. நகர் காவல் நிலைய எல்லை பிரிக்கப்பட்டு எம்.ஜி.ஆர். நகரில் புதிதாக காவல் நிலையம் அமைத்தல்—Opening of a new Police Station at MGR Nagar by bifurcating K.K. Nagar Police Station:**

தற்போது கே.கே. நகர் காவல் நிலைய அதிகார வரம்பில், ஜாபர்கான்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர், அன்னை சத்தியா நகர், நெசப்பாக்கம், விஜயராகவபுரம் மற்றும் சிவலிங்கபுரம் ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. இப்பகுதி பரந்து விரிந்து இருப்பதால், காவல் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ளும்வகையில், இந்தக் காவல் நிலைய அதிகார வரம்பு பிரிக்கப்பட்டு, “எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையம்” என்ற புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

**29. மிக முக்கியப் பிரமுகர் பாதுகாப்புப் பணிக்காக 10 “Speed Dome” கேமிராக்கள் வழங்குதல்—Sanction of 10 Speed Dome Cameras for VIP Security:**

மிக முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்பு குறித்த அச்சுறுத்தல்களைத் திறம்பட சமாளிப்பதற்காக “ஸ்பீட் டோம் கேமிராக்கள்” பயன்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நவீன அம்சங்களைக் கொண்ட 10 ஸ்பீட் டோம் கேமிராக்கள் 26.70 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும். ஒரு காவல் சரகத்திற்கு ஒன்று வீதம், ஆறு காவல் சரகங்களுக்கு 6–ம், சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்துக்கு 4–ம் என, இந்த 10 “ஸ்பீட் டோம் கேமிராக்கள்” வழங்கப்படும்.



**30. மாநிலத்தில் உள்ள நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்கள் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலக அலுவலர்கள் ஆகியோர் பயன்படுத்தும் செல்லிடத் தொலைபேசிகளுக்கான கட்டணங்களை வழங்குதல்—Sanction of call charges of Mobile Phones for Officers in the State Intelligence Wing and the Staff Officers to Director General of Police:**

மாநில நுண்ணறிவுப் பிரிவில் பணியாற்றும் காவல் அலுவலர்கள் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநருக்கு உதவியாக இயங்கும் உயர் அலுவலர்கள்—Staff Officers—ஆகியோரின் பணித் திறனை மேம்படுத்தும்வகையில், அவர்கள் உபயோகிக்கும் 100 செல்லிடத் தொலைபேசிகளுக்கு அதிகபட்ச மாதக் கட்டணமாக, தலா 2,000 ரூபாய் அரசினால் வழங்கப்படும். இதற்காகும் அதிகபட்ச ஆண்டுச் செலவு 24 இலட்சம் ரூபாய் ஆகும்.

**31. சென்னைக் காவலர் பயிற்சிக் கல்லூரியில் உள்ள நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல்—Purchase of books for the Library at Police Training College, Chennai:**

சென்னைக் காவலர் பயிற்சிக் கல்லூரியில் இயங்கி வரும் நூலகத்தின் கட்டமைப்பு வசதிகள் பழமையானதாக உள்ளதால், இதனைப் புதுப்பிக்க, நான் ஏற்கெனவே ஆணைகள் வழங்கி உள்ளேன். மேலும், அடிப்படைப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி போன்ற பயிற்சி வகுப்புகளில் பங்குபெறும் அலுவலர்கள் பயன்படுத்தும் இந்நூலகத்திற்குப் புதிய நூல்களும் வாங்கப்பட வேண்டும். எனவே, இந்த நூலகத்திற்குத் தேவையான புதிய புத்தகங்கள் 2 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

**32. தகுதியுள்ள முன்னாள் இராணுவத்தினரைக் காவல் இசைக் குழுவில் இசைக் குழு நடத்துனர்களாக நியமனம் செய்தல்—Appointment of qualified Ex–Servicemen as Band Masters of Police Bands:**

காவலர் ஆயுதப் படை அமைப்பில் இசைக் குழு ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. இராணுவ இசைக் குழுவில் பணிபுரிந்தவர்களுக்கு, இதில் சிறந்த தேர்ச்சி உள்ளதால், அவர்களை இசைக் குழு நடத்துனர்களாக நியமனம் செய்வது சிறப்பாக அமையும். எனவே, காலியாகவுள்ள இப்பதவியிடங்களில் தகுதியுள்ள முன்னாள் இராணுவத்தினர், காவல் இசைக் குழு நடத்துனர்களாக பணியமர்த்தப்படுவார்கள்.

பிற்பகல் 1–25

**33. மாநிலத்தில் உள்ள காவல் இசைக் குழுவிற்குப் பணியாளர்களைத் தெரிவு செய்தல்—— Special recruitment of Personnel for Police Bands in the State:—**

காவல் இசைக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் இசைத் தேர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். எனவே, தேவைப்படின் அவர்களது உயரம், கல்வித் தகுதி, வயது ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளித்து தேர்வு செய்யும் அதிகாரம், காவல் துறை தலைமை இயக்குநருக்கு அளிக்கப்படும். இதற்கு ஏற்றவகையில், புதிய தேர்வு விதிகள் உருவாக்கப்படும்.

தற்போது காலியாக உள்ள 737 காவலர் இசைக் குழுப் பணியிடங்கள் இப்புதிய விதிமுறைகளைப் பின்பற்றி நிரப்பப்படும்.

**34. காவல் இசைக் குழு காவலர்களுக்கு கால முறைப்படி பதவி உயர்வு அளித்தல்—Time–Bound promotional prospects for the Personnel of Police Bands:**

தற்போது காவல் இசைக் குழுவில் உள்ள காவலர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு, மிகக் குறைவாக உள்ளது. ஆகவே, அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டும் அவர்களது திறமைகளை மேம்படுத்தும்வகையிலும், கீழ்க்கண்டவாறு காலமுறை—Time–Bound—பதவி உயர்வு வாய்ப்புகள் உருவாக்கப்படும். 10 ஆண்டுகள் பணி முடித்த இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, முதல் நிலைக் காவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்படும். 5 ஆண்டுகள் பணி முடித்த முதல் நிலைக் காவலர்களுக்குத் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படும். 5 ஆண்டுகள் பணி முடித்த தலைமைக் காவலர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படும். இவர்கள் இப்பதவி உயர்வுக்குப் பின்னரும், காவல் இசைக் குழுவிலேயே நீடிப்பர்.

**35. குடியுரிமை பாதுகாப்புப் பிரிவைச் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு எனப் பெயர் மாற்றம் செய்தல்—Change of Nomenclature of Protection of Civil Rights as Social Justice and Human Rights:**

குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு, மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி குறித்த பணிகளை மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகிறது. தற்போது ஆற்றிவரும் பணிகளின் தன்மையைப் பிரதிபலிக்கும்வகையில், இப்பிரிவு 'சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.



**36. காவல் துறையில் பணியாற்றும் அனைத்து அமைச்சுப் பணியாளர்களுக்கும் ஒரு முறை பயிற்சி ஊக்கத் தொகையாக 1,000/– ரூபாய் வழங்குதல்—Sanction of one–time Training Incentive of Rs.1,000/– to all the Ministerial Staff of the Police Department:**

அமைச்சுப் பணியாளர்களின் பணிசார்ந்த திறமையை மேம்படுத்தும்வகையில், அவர்களுக்குக் கணினி மற்றும் அலுவலகப் பணிகள் தொடர்பான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாறுபட்ட பணித் தேவைகளுக்கேற்ப, தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காகவும் பயிற்சி மேற்கொள்வதற்காகவும், அவர்களுக்கு ஒரு முறை பயிற்சி ஊக்கத் தொகையாக, 1,000 ரூபாய் வழங்கப்படும். இதன்மூலம், காவல் துறையில் உள்ள 4,263 அமைச்சுப் பணியாளர்கள் பயன் பெறுவர். இதற்கு ஆகும் மொத்தச் செலவு 42.63 இலட்சம் ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைப் பற்றி, சில கருத்துகளையும், புதிய அறிவிப்புகளையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தனது வழக்கமான தீயணைப்புப் பணிகளைத் திறம்பட செய்துவருவதோடு மட்டுமல்லாமல், இடர்ப்பாட்டுக் காலங்களில் மக்களின் இன்னல்களைத் தீர்க்கின்ற துறையாக, தங்களது உயிரை மீட்டுத் தரும் என்று மக்கள் நம்பிக்கையைப் பெற்ற துறையாகப் பரிணமித்து வருகிறது.

26–12–2004 அன்று, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சுனாமிப் பேரலைகள், கடும் சீற்றத்துடன் தாக்கியதில், 8000–க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை ஆற்றிய பணி, நாட்டு மக்களின் பெரும் பாராட்டைப் பெற்றது. இத்துறை, சுனாமியின் தாக்குதலுக்கு இலக்காகி, குற்றுயிரும், குலையுயிருமாய் இருந்த ஆயிரக்கணக்கானோரை மீட்டு, அவர்களது உயிரைக் காப்பாற்றியது. ஏறத்தாழ 1667 நபர்கள் இவ்வாறு உயிருடன் மீட்கப்பட்டனர்.

நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளை இழந்தோருக்கு அமைத்துத் தரப்பட்டுள்ள தற்காலிகக் குடியிருப்புகளில், 12 நீர்த்தாங்கி வண்டிகள், 4 நோயாளர் ஊர்திகள் மற்றும்

நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்களுடன் முகாமிட்டு, ஆயத்த நிலையில், தொடர்ந்து இன்றுவரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பாதுகாப்புப் பணியை வழங்கி வருகிறது.

தமிழக மக்களின் நலனுக்கும் அவர்களது பாதுகாப்புக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் இந்த அரசு, அதற்கேற்றவகையில், இத்துறையின் செயல்பாட்டை மேம்படுத்திட, 2002 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே.எஸ். பக்தவத்சலம் அவர்களது தலைமையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம் ஒன்றை அமைத்தது. இந்த ஆணையம் சமீபத்தில் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. இந்த ஆணையத்தின் அறிக்கையை ஏற்றுக் கொண்டுள்ள இந்த அரசு, ஆணையத்தின் முக்கியப் பரிந்துரைகளைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், துறையின் செயல்திறனை மேம்படுத்திடவும், துறைப் பணியாளர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து, அவர்களது பணித் திறனை அதிகரித்திடவும் இவ்வரசு, இந்த ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் புதிய முயற்சிகள் பற்றி, தற்போது கூற விழைகிறேன்.

**1. தேவையான பணியாளர்களுடன், மூன்று நீட்டிப்பு ஏணி ஊர்திகள் வழங்குதல்—Sanction of 3 Sky Lifts with supporting staff:**

விரைவான தொழில்மயமாதல் மற்றும் நகர்மயமாதல் காரணமாக, அண்மைக் காலங்களில், பலமாடிக் கட்டடங்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. இக்கட்டடங்களில் தீ விபத்து ஏற்படும் நேர்வில், தீயணைப்புப் பணிகளையும், மீட்புப் பணிகளையும் எளிதில் மேற்கொள்ள ஏதுவாக, 10.5 கோடி ரூபாய் செலவில் மூன்று நீட்டிப்பு ஏணி ஊர்திகள்—Sky Lifts—வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றை இயக்கிட, ஆண்டு ஒன்றுக்கு 21.5 இலட்சம் ரூபாய் தொடரினச் செலவில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.



**2. அபாயகரமான இரசாயனங்கள் குறித்த விபத்துகளைக் கையாளுவதற்கென சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ஹஸ்மத் என்ற நவீன கவச ஊர்தியினை வாங்குதல்—Sanction of a specially manufactured modern vehicle called Hazmat to handle hazardous chemical fires:**

சென்னை புறநகர்ப் பகுதிகளில், அபாயகரமான இரசாயனங்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அதிகரித்து வருகின்றன. இந்த இரசாயனங்களால் ஏற்படக்கூடிய தீ விபத்துகளைத் திறம்படக் கையாள, 5 கோடி ரூபாய் செலவில், ஹஸ்மத் என்ற சிறப்புவகை கவச ஊர்தி வாங்கப்படும். இதற்காக 6 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. இயற்கைச் சீற்றங்களைக் கையாள, 10 அவசர கால மீட்பு ஊர்திகள் வழங்குதல்— Sanction of 10 Emergency Rescue Tenders for natural disasters:**

நில நடுக்கங்கள், ஆழிப் பேரலைகள் போன்ற இயற்கைச் சீற்றங்களைத் திறம்படக் கையாள, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு, மொத்தம் 5 கோடி ரூபாய் செலவில், 10 அவசரக் கால மீட்பு ஊர்திகள் வாங்கப்படும். அவ்வூர்திகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு, 53 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

**4. சென்னை மாநகரில் தீயணைப்புப் பணித் திறனை மேலும் அதிகரித்திட 20,000 லிட்டர் கொள்திறன் கொண்ட 2 மிகப் பெரிய நீர்தாங்கி ஊர்திகள்—Bowzers—வழங்கல்—Sanction of 2 Bowzers to further augment the fire fighting capabilities in Chennai City:**

சென்னையில் தீயணைப்புப் பணித் திறனை மேலும் அதிகரித்திட, 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொன்றும் 20,000 லிட்டர் கொள்திறன் கொண்ட 2 மிகப் பெரிய நீர்தாங்கி ஊர்திகள் வாங்கப்படும். அவ்வூர்திகளை இயக்க, ஆண்டு ஒன்றுக்கு 10.50 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் தேவையான பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

**5. 10 கூடுதல் நீர்த்தாங்கி வண்டிகள் வழங்குதல்—Sanction of 10 additional Water Tenders:**

துறையில் உள்ள நீர்த்தாங்கி வண்டிகள் பழுதடைவதால், தீயணைப்புப் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க, உடனடி மாற்று ஊர்திகளாக உபயோகப்படுத்த, 1.50 கோடி ரூபாய் செலவில் கூடுதலாக 10 நீர்த்தாங்கி வண்டிகள் வாங்கப்படும்.

**6. தற்காப்புச் சாதனங்கள் வழங்குதல்—Sanction of Personal Protection Equipment:**

இதைப்பற்றித்தான், மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்கள், ஆபத்தான தீயணைப்புப் பணியின்போது, அச்சமின்றி திறம்படச் செயல்பட ஏதுவாக, சென்னை மாநகரில் 100 தீயணைப்பு வீரர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் தற்காப்புச் சாதனங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. 100 அலுவலர்களுக்கு செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் வழங்குதல்—Sanction of cell phone charges for 100 Officers:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த நிலைய அலுவலர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலையில் உள்ள 100 அலுவலர்களுக்குக் காவல் துறை அலுவலர்களுக்கு நிகராக, செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் வழங்கப்படும்.

**8. மோப்ப நாய்ப் பிரிவு ஏற்படுத்தல்—Formation of Sniffer Dog Squad:**

நில நடுக்கம் மற்றும் பிற பேரழிவு நேரங்களில், இடிபாடுகளில் சிக்கி, கண்ணுக்குப் புலப்படாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களைக் கண்டறிய மோப்ப நாய்ப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 8.5 இலட்சம் ரூபாய் தொடர் செலவு ஏற்படும்.

பிற்பகல் 1–3.5

**9. ஊர்திகளைச் செப்பனிடுவதற்கான நிதி அதிகார வரம்பை உயர்த்துதல்—Enhancement of financial powers for repairing vehicles:**

துறை ஊர்திகளின் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக, அவற்றில் ஏற்படும் பழுதுகளை நீக்கிட, இலகு இரக ஊர்திகளுக்கு 2,000 ரூபாய்



வரையிலும் மற்றும் கன இரக ஊர்திகளுக்கு, 3,000 ரூபாய் வரையிலும் செலவிட, நிலைய அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். அதேபோன்று, கோட்ட அலுவலர்களுக்கு இலகு இரக ஊர்திகளைப் பொறுத்தவரை, 4,000 ரூபாய் வரையிலும் கன இரக ஊர்திகளைப் பொறுத்தவரை, 6,000 ரூபாய் வரையிலும் செலவிட அதிகாரம் வழங்கப்படும்.

**10. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைப்பதைக் கண்காணிக்க, ஒரு நிலைக் குழு அமைத்தல்—Formation of a Standing Committee for monitoring the opening of new Fire and Rescue Service Stations:**

புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைப்பது மற்றும் ஏற்கெனவே உள்ள நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது குறித்து முடிவு செய்ய, உள்துறை, நிதித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, ஒரு நிலைக் குழு அமைக்கப்படும். இக்குழு, இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும்.

**11. திருமண மண்டபங்களில் தீ பாதுகாப்பு—Fire Safety Measures in Kalyana Mandapams:**

ஸ்ரீரங்கத்தில், திருமண மண்டபம் ஒன்றில் 23–1–2004 அன்று ஏற்பட்ட கோர தீ விபத்து, திருமண மண்டபங்களில் போதுமான தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. எனவே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாடு தீயணைப்புப் பணிகள் சட்டத்திலும், தொடர்புடைய ஏனைய சட்டங்களிலும் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.

**12. பாதுகாப்புத் தொண்டர்கள் அமைப்பை அங்கீகரித்தல்—Recognition of Safety Volunteers Organisation:**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்புத் தொண்டர்கள் அமைப்புக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படும்.

**13. கருணை அடிப்படையில் களப் பணியாளர் நியமனம்—Compassionate appointments in executive posts:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிக் காலத்தில் மரணமடையும் பணியாளர்களின் வாரிசுதாரர்கள், வரையறுக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருப்பார்களேயானால், அவர்கள் தீயணைப்பாளராகவோ, நிலைய அலுவலராகவோ, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

**14. மாநிலப் பயிற்சி மையத்தினைப் பயிற்சிக் கழகமாக நிலை உயர்த்துதல்—Upgradation of State Training Centre into an Academy:**

தாம்பரத்தில் உள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையம், சர்வதேச தரத்திலான தன்னாட்சி பயிற்சிக் கழகமாக நிலை உயர்த்தப்படும். இதற்கு, முதற்கட்டமாக 1 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**15. பயிற்சிப் படியை உயர்த்துதல்—Enhancement of Training Allowance:**

மாநிலப் பயிற்சி மையத்தில் பணியாற்றுபவர்களுக்கு ஊக்கம் அளிக்கும்பொருட்டு, அவர்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும் 10 விழுக்காடு பயிற்சிப் படி, காவல் துறையினருக்கு நிகராக 15 விழுக்காடாக உயர்த்தப்படும். இதற்கு, ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் தொடர் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**16. அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி—Deputation of officers and personnel to foreign countries for training:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் அதி நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெறும்பொருட்டு, பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள்.

**17. தமிழ்நாடு தீயணைப்புப் பணிகள் சட்டத்தில் திருத்தங்கள்—Amendments to Tamil Nadu Fire Service Act:**

தீயணைப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான நடைமுறைகளைத் திறம்பட செயல்படுத்திட, தமிழ்நாடு தீயணைப்புப் பணிகள் சட்டத்தில் மேலும் பல விதித் துறைகளைச் (Regulations) சேர்த்து தக்க திருத்தங்கள் செய்யப்படும்.



**18. கோயம்புத்தூரில் உள்ள மேற்கு மண்டலத்தை இரண்டாகப் பிரித்து வேலூரில் ஒரு புதிய மண்டலம் உருவாக்குதல்—Creation of new Region at Vellore, by bifurcating the existing Western Region at Coimbatore:**

இத்துறையின் நிருவாகத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, தற்பொழுது கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மேற்கு மண்டலத்தை இரண்டாகப் பிரித்து, வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை கோட்டங்களை உள்ளடக்கிய ஒரு புதிய மண்டலம் உருவாக்கப்படும். இதற்காக ஒரு புதிய துணை இயக்குநர் பதவியிடம் மற்றும் தேவையான பணியாளர்கள் வகையில், ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் தொடர் செலவு ஏற்படும்.

**19. தீயணைப்பாளர்-ஓட்டுநர் பதவிப் பெயரைத் தலைமைத் தீயணைப்பாளர் எனப் பெயர் மாற்றி ஒருவழி பதவி உயர்வு முறையினை அறிமுகம் செய்தல்—Conversion of the post of Fireman-Driver, as Head Fireman and creation of single line hierarchy:**

துறையின் செயல்பாட்டை மேலும் உயர்த்திட, வருங்காலத்தில் தீயணைப்பாளர் அனைவரும் ஓட்டுநர் பயிற்சி பெற்றிருப்பது அவசியமாக்கப்படும். தற்பொழுதுள்ள தீயணைப்பாளர்-ஓட்டுநர் பதவிகளில் காலியிடம் ஏற்படும்போது, அக்காலியிடங்கள் அதே ஊதிய விகிதத்தில் தலைமைத் தீயணைப்பாளர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஒரே வழி முறை பதவி உயர்வு முறையின்கீழ் முன்னணி தீயணைப்பாளர் பதவிக்கும், உதவி நிலைய அலுவலர் பதவிக்கும் இடையே சேர்க்கப்படும்.

*பிற்பகல் 1–40*

**20. பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்—Augmenting the Existing Strength:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முக்கியத்துவத்தினைக் கருத்தில்கொண்டு, நான் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்கள் நியமனம் குறித்த தடையினை நீக்கி, அரசாணை (நிலை) எண் 993, உள் (காவல் 17) துறை, நாள் 7–8–2004–ல் ஆணையிட்டேன். இதையடுத்து, உடனடியாக 384 பணியிடங்களில் தீயணைப்பாளர் நியமனம் செய்யப்படுவார்கள். மேலும், தேவைக்கேற்ப இப்பணியிடங்கள் படிப்படியாக அதிகரிக்கப்படும்.

**21. பதவி உயர்வில் தேக்க நிலையை நீக்க, ஒரு நிலை பதவி உயர்வு அளித்தல்—One time upgradation to remove stagnation in promotions:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களது பதவி உயர்வில் நீண்டகாலமாக இருந்துவரும் தேக்க நிலையினைப் போக்க, சிறப்பு நேர்வாக 1,120 பணியாளர்களுக்கு நபர் சார்ந்த ஒரு நிலைப் பதவி உயர்வு அளிக்கப்படும். இதனால், ஆண்டொன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் தொடர் செலவு ஏற்படும்.

**22. கோட்டங்களில் தனி நபர்களுக்குப் பயிற்சி—Training of private individuals at division level:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களைக் கொண்டு, கோட்ட அளவில் தனி நபர்களுக்குக் கட்டண அடிப்படையில் தீயணைப்பு முறைகளில் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் தொடர் செலவில் கூடுதல் பணியாளர்களுக்கும், சாதனங்களுக்கும் வகை செய்யப்படும்.

**23. தரவுத் தளக் கோப்புத் தொகுப்பு உருவாக்குதல்—A system of database folders:**

பலமாடிக் கட்டடங்கள், விற்பனை வளாகங்கள், திரையரங்குகள் போன்ற இடங்களில் தீ பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் நோக்கில், மண்டல அளவில் 10 இலட்சம் ரூபாய் செலவில் தரவுத் தளக் கோப்புத் தொகுப்பு ஒன்று உருவாக்கப்படும். இதற்காக, 3 இலட்சம் ரூபாய் தொடரினச் செலவில் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

**24. சிறந்த முறையில் பராமரிக்கப்படும் பலமாடிக் கட்டடங்கள், வணிக வளாகங்களுக்கு தீ பாதுகாப்பு விருதுகள்—Fire – safety awards for best maintained Multi Storeyed Building /Shopping Complexes:**

தீ பாதுகாப்பு குறித்த நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் பலமாடிக் கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**25. அரசுக் கட்டடங்களில் தீ பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தல்—Enhancement of Fire Safety in Government Buildings:**

தீ அபாயங்களைக் குறைக்கும்பொருட்டு, அனைத்து அரசு அலுவலகங்களிலும் தீ பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்படும்.



**26. மாவட்ட அளவில் தீக்காயச் சிகிச்சைப் பிரிவு அமைத்தல்—Opening of burns ward at district level:**

தீக்காயம் ஏற்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்திட, மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் இதர பெரு நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன்கூடிய சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**27. இரயில்வே துறைக்குச் சொந்தமான இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைத்தல்—Opening of Fire and Rescue Service Stations at places belonging to Railways:**

இரயில்வே சொத்துக்களை தீ அபாயத்திலிருந்து பாதுகாக்க, முழுச் செலவையும் மாநில அரசுக்கு ஈடு செய்யும் அடிப்படையில், அத்துறைக்குச் சொந்தமான இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைப்பது குறித்து, மத்திய அரசுடன் கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**28. குடிநீர் வடிகால் வாரிய நீர்த் தொட்டிகளிலிருந்து தீயணைப்புப் பணிகளுக்குத் தண்ணீர் வழங்குதல்—Provision of Water supply from TWAD Board tanks:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், புதிய தண்ணீர்த் தொட்டிகள் கட்டும்பொழுது, அவற்றிலிருந்து தீயணைப்பு ஊர்திகளுக்குத் தண்ணீர் வழங்குகின்ற வகையில், தக்க வழிவகை செய்யப்படும்.

**29. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான தண்ணீர் லாரிகளில் பம்பு பொருத்துதல்—Fitting of pumps in water lorries belonging to Panchayat Unions:**

தீயணைப்புப் பணியின்போது, தீயணைப்பு ஊர்திகளுக்கு உதவிட, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள ஊராட்சி ஒன்றியத் தண்ணீர் லாரிகளில் பம்புகள் பொருத்தப்படும்.

**30. ஆவணக் காப்பகத்தில் தீ பாதுகாப்பு ஏற்பாடுகள்—Fire safety arrangements in Archieves:**

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில், புகை கண்டுபிடிப்பான் மற்றும் இரசாயன விளைவுகளற்ற வாயுவை மிகையாகச் செலுத்தும் கருவி—Inert Gas flooders—போன்ற சாதனங்களைப் பொருத்தி, தீ பாதுகாப்பு மேம்படுத்தப்படும்.

**31. உயர் நீதிமன்றத்தில் தீயணைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தல்—Conducting of Fire Audit in High Court:**

உயர் நீதிமன்றக் கட்டட வளாகத்தைத் தீயிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு, தீயணைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை ஆயுதங்களும், நுட்பமான கருவிகளும், வசதிகளும், புதிய பதவிகளும் காவல் துறைக்கு அளிக்கப்பட்டிருப்பதன் நோக்கம், வீட்டுக் கவலைகளோ பணியிடங்களில் வசதிக் குறைவுகளோ இல்லாமல், காவலர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச்செய்ய வேண்டும் என்பதேயாகும். காவலர்கள் நலன், தமிழகத்தின் நலனுக்கு ஆதாரம். காலம் நேரம் பார்க்காமல் கடமையாற்றி பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழலில், எப்போதும் இருக்கும் காவலர்களுக்கு நாம் அளிக்கும் பாராட்டும், ஊக்க மொழியும் அவர்கள் தங்கள் கடமையை இன்னும் ஆர்வத்தோடு செய்வதற்கு உந்துதலை வழங்கும்.

பிற்பகல் 1–45

காவல் துறைமீது எப்போதும் குற்றம் சாட்டுவதையும், குறை கூறுவதையுமே வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் இதை உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பாராட்டு வார்த்தை, ஒரு ஊக்க மொழி அதைப் பெறுபவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அதுமட்டுமா? தங்கள் பணிகளை இன்னும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்னும் உணர்வையும் அவர்களுக்கு அளிக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். ஆக்கபூர்வமாகச் சிந்திக்கின்றவர்கள், அடுத்தவரைப் பாராட்டத் தவறுவதில்லை. குறை கூறுவதையே குணமாகக் கொண்டவர்கள், என்றைக்கும் நிம்மதியோடு வாழ்ந்ததில்லை. இது உலகம் முழுவதற்கும் பொதுவான விதி. பாராட்டு என்பது, பெறுபவருக்கு மட்டுமல்ல; தருபவருக்கும் உயர்வைத் தருகிறது. ஆகவே, விமர்சனம் செய்வதில் மட்டுமே கண்ணாய் இருப்பவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாராட்டுங்கள், நிச்சயம் உயர்வீர்கள்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பாராட்ட முடியவில்லை என்றால், பேசாமலாவது இருங்கள். தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை. தமிழகம் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம். இந்த அமைதிப் பூங்காவில், வாழக் கொடுத்து வைத்தவர்கள் நாம் என்ற உணர்வோடு காவல் துறையின் பணிகளைப் பாராட்டுவோம்.



பல்வேறு கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் விடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளையும், இந்த அரசு, கவனத்துடன் பரிசீலனை செய்து, நிதிநிலைக்கேற்ப தக்க முடிவுகளை எடுக்கும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண், (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, என்ன?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் காவல் பணியிலே ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே, 21 இடங்கள் காலியாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏற்கெனவே நீங்கள் சொன்ன கருத்துகளை ஆராய்வோம் என்று சொல்லிவிட்டார்கள்.

**(அ) கோரிக்கை எண் 21 – உள் துறை – காவல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 21, உள் துறை – காவல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை. திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.ஆர். இராமசாமி, இருக்கையில் இல்லை. திரு. கே.ஆர். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆ. இராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை – காவல் மானியக் கோரிக்கை எண் 21–ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,269,21,09,000/–, மூலதனக் கணக்கில் ரூ.69,36,42,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 22 – உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22 – உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. ஆ. இராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2005 மார்ச் 15

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

*பிற்பகல் 1–50*

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.



2005 மார்ச் 15]

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி எ. எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எ. எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.68,54,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16–3–2005) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 2003–2004 ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

49. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

50. 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

51. 2003–2004 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

59. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

226638

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.